# திரு மலர்




## தொண்டொன்று தொடர்ந்த காதை....!

(01.03.1939 - 03.10.2001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமுறை

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

திருக்கேதீச்சரம்

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை உரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

## திருவாசகம்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந் தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்


உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்


இறவாமற் பிறவாமல்
எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான
பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே
குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே
கதிர்காமப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவ தொண்டன் தாள் பணிந்து
'திரு' தொண்டன் தொடங்குகின்றான்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணி எண்ணி
# இரங்குவோர் கேளீர்....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

குருபாதம்

# இரங்கல் செய்தி

அன்பு நெஞ்சத்தீர்,

கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் மறைவு அனைவரையும் மனம் நெகிழ வைத்துள்ளது. தொண்டின் அடையாளமாக விளங்கியவர் திருநாவுக்கரசு நாயனார். அவரது பெயரைத் தாங்கிய திருநாவுக்கரசு அவர்களும் மக்கள் சேவையே மகேசன் சேவையென வட இலங்கை சர்வோதய அமைப்பை ஏற்படுத்தி புங்குடுதீவு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தமை எல்லோரது மனதிலும் தனியான ஒரு இடத்தைப் பிடித்துள்ளது. வறிய குடும்பங்களுக்கு வாழ வழியமைத்துக் கொடுத்தார். புங்குடுதீவு மக்களின் தண்ணீர்த் தேவையை இலகுவாக எல்லோருக்கும் கிடைக்கச் செய்தமை அவரது பணிகளுள் முக்கிய இடத்தை வகிக்கிறது. இதுபோன்ற பல பணிகளை அனைத்துப் பிரதேச மக்களுக்கும் செய்தார். நல்லூர் கந்தன் உற்சவ காலங்களில் அன்னதான, தாகசாந்தி அமைப்புகள் மூலம் அடியார்களின் தேவையை நிறைவேற்றியவர். இவரது பணி அனைத்து மக்களையும் சிந்திக்கவும் செயற்படவும் வைப்பதாக அமைந்துள்ளது. இவரது மறைவினால் துயருறும் குடும்பத்தினரை இறைவன் ஆசீர்வதிக்கவும், அமரர் திரு. கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

2வது குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்**

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

நல்லூர் யாழ்ப்பாணம் - இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டிற்காக உழைத்த நல்ல உள்ளம்

உயர்ந்த தோற்றம், கம்பீரமான நடை, நஷனல் சேட், அன்பு தவழும் முகம், அண்டினோரை ஆதரிக்கும் உள்ளம், பிறரை நேசிக்கும் பண்பு, இன்முகத்தோடு மற்றவரைக் கவரும் வசீகரப் பார்வை, உள்ளத்தில் உள்ளதை மற்றவரோடு கலந்து பழகும் பண்பு, காந்தீய வாழ்க்கை, பேசும்போது தடையில்லாது ஆற்றொழுக்குப் போன்ற வசனநடை, பேச்சினால் எல்லோரையும் ஈர்க்கும் பேச்சாற்றல், எடுத்த காரியத்தை இனிது நிறைவேற்றும் திறமையான ஒரு கர்ம வீரம் இவையெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர்தான் நாவுக்கு அரசனான திருநாவுக்கரசு அவர்கள்.

அவரிடம் தாய் நாட்டுப்பற்றும் தாய்மொழியான தமிழ்மொழியின் பற்றும் ஆழமாக வேரூன்றி அவர் உயிரோடு கலந்துவிட்டது என்றால் மிகையாகாது. தமிழுக்காக அந்த நாட்களில் தமிழரசுக் கட்சியின் தொண்டராகி கூட்டங்களில் பேசியும், பிரச்சாரங்கள் செய்தும் அக்கட்சியின் உறுப்பினர்களைப் பாராளு மன்றத்திற்கு அனுப்பிய பெருமை இவரையே சாரும். கூட்டத்தில் திருநாவுக்கரசு பேசுகிறார் என்றால் அதைக் கேட்பதற்கும், ரசிப்பதற்கும் ஒரு கூட்டமே காத்திருக்கும். ஏனென்றால், அந்தப் பேச்சிலே அர்த்தமும் - அரசியலும் - தத்துவமும் நிறைந்திருக்கும். அதேபோல சத்தியாக்கிரகப் போராட்டம், யாழ் கச்சேரி வாசலிலும், திருமலை, மட்டக்களப்புப் போன்ற இடங்களிலும் நடந்தபோது அதிலே பங்குபற்றி அடிகள், உதைகள்கூட வாங்கியவர்.

தாய் நாட்டுச் சேவையை எடுத்துக் கொண்டால் 'எனது நாடு' என்கிற மனப்பான்மையோடு தொண்டு செய்கின்ற தூய்மையான உள்ளம் கொண்டவர்.

1962ஆம் ஆண்டு வீசிய புயற்காற்று, பெருமழை முதலியவற்றால் ஏற்பட்ட அனர்த்தத்தினால் வீதிகளில் மரங்கள் முறிந்து பாதையைத் தடைசெய்து இருந்தன. அதிகாலை 5.00 மணிக்கு சோட்ஸ்சோடும் பெனியனோடும் வீதிகளில் இறங்கி அங்கிருந்த மரங்களையும் தடிகளையும் தறித்துப் பாதையைத் தனியே நின்று சீர்செய்ததை யாரால் மறக்கமுடியும். அதுமட்டுமல்ல, இதேவேளையில் குழந்தைகள், பெரியோர்கள், வயோதிபர்கள் எல்லோரும் வெள்ளத்தினால் அகதி களாக்கப்பட்டனர். அவர்களை பாடசாலைகளில் குடியேற்றி அவர்களுக்கான உணவுகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்குச் சென்று எடுத்து வந்து அவர்களுக்கு உணவளித்து உவகை கொண்டவர். நாட்டில் நன்னீர் வேண்டும் என்பதற்காக வெள்ளம் ஓடும் வாய்க்கால்களை அணைகட்டி வெள்ளத்தைத் தேங்க வைத்து நன்னீராக்கப் பெரும் பாடுபட்டவர்.

குளங்களைச் சீர் செய்தும் துப்புரவு செய்தும் மாடுகளையும் வாழச் செய்தவர். அப்போது மாமரங்கள் நோயினால் பாதிப்புற்றிருந்தபோது எல்லா மாமரங்களுக்கும் மருந்தடித்து மரங்களைக் காப்பாற்றியவர். அதேபோல் தென்னை மரங்களுக்கு நோய் ஏற்பட்டது. அதற்கும் மருந்துகளை தென்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிவிருத்திச்சபையிலிருந்து எடுத்து வந்து தென்னைகளைக் காப்பாற்றிய பெருமையும் அவரையே சாரும். மாடுகள் மேய்வதற்குப் புல் இல்லை. இவ் வேளையில் பனையோலைகளை வெட்டி அந்த மாடுகளுக்கு உணவாகக் கொடுத்து அவைகள் சாப்பிடுகின்றபோது அதைப் பார்த்து ரசித்து இன்புறுவதை என் கண்ணாலே கண்டிருக்கின்றேன்.

சமய வாழ்வில் தமது சர்வோதய நிலையத்தில் ஓர் சிவாலயம் அமைத்தும் யோக சுவாமிகளுக்கு ஓர் ஆலயம் அமைத்தும் பூஜைகள் வழிபாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தியதோடு யோக சுவாமி ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் ஆயிலிய நட்சத்திரத்தில் குருபூசை செய்து அன்னதானமும் வழங்கி வந்தார். கேரதீவில் அமைந்திருக்கிற ஐயனார் ஆலயத்தைப் புதுப்பித்து, மதில்கள் அமைத்து அந்த இடத்தைப் புனித பிரதேசமாக்கிய பெருமையும் இவரையே சாரும்.

சிறுவரின் கல்வி வளர்ச்சிக்காக சிறுவர் பாடசாலை நிறுவியும் அந்தணச் சிறார்களின் நன்மை கருதி சமஸ்கிருத பாடசாலை அமைத்து சமஸ்கிருத கல்வியை ஊட்டியும், சமய அறிவுக்காக வித்துவான் பொன் அ. கனகசபை ஆசிரியர் மூலமாக சமயக் கல்வியைப் போதித்தும் கல்வியை வளர்த்த பெருமகன்.

புங்குடுதீவில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், மாதர் சங்கங்கள் அமைத்தும் கமநல கேந்திர நிலையம் உருவாக்கியும் சிறுவர் சமவாயச் சங்கம் அமைத்தும் நாட்டை வளம்பெறச் செய்ய வேண்டுமென்ற நோக்கோடு அரும்பாடுபட்டவர் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

கொழும்பு சென்றபோதும் அங்கு வாழ்கின்ற எமது நாட்டுப் பெருமக்களை அழைத்து நாட்டு அபிவிருத்திக்காகச் சங்கம் நிறுவியதோடு வெளிநாட்டில் வாழ்கின்ற எம்நாட்டு மக்களையும் இச்சங்கத்தில் அங்கத்தவர்களாக்கி நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு வித்திட்ட வேளைதான் காலன் தனது கட்டளையை நிறைவேற்றி விட்டான்.

என் செய்வோம்! விதியென்பது வலியது. அதை யாரும் வெல்ல முடியாது. நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். காலத்தை யாரால் நிர்ணயிக்க முடியும். அவர்தம் ஆன்மா நித்திய, நிரதிசய, சாஸ்வத முத்தியடையவும் பிரிவால் துயருறும் அவரது தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் எல்லோரும் ஆறுதலடையவும் எல்லாம் வல்ல ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ. ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்**
சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா
சிவன்கோவில் - புங்குடுதீவு .03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறந்தும் வாழும் இனிய மனிதர்!

என்றும் எம் அண்ணா போல் இருந்து,
எம்முடன் வாழ்ந்து
பற்பல அறிவுரைகள் சொல்லி
என்றும் தனக்காக வாழாமல்
எம் கிராமத்தையும் அயலவர்களையும்
சுற்றியுள்ள கிராமங்களையும்
நாட்டையும் முன்னேற்ற வேண்டுமென்ற
எண்ணங்கொண்டு
அயராது பாடுபட்டு உழைத்து வெற்றி கொண்டவர்
இவர்.
ஆன்மீக உந்துதலினால் பல இடங்களிலும் தலங்களிலும்
அன்னதானம் வழங்கினார். நல்லை முருகன்
திருவிழாவில்
தொடர் அன்னதானம் வழங்கிய பெருமைக்குமுரியவர்.
அவரின் அறிவுரையால்தான் எங்கள் பிள்ளைகளின்
கல்விநிலை உயர்ந்திருக்கிறது. அன்புக்குரிய
உயர்திரு. திருநாவுக்கரசு அவர்களின் மறைவு எமக்கும்
எம் இனத்தவருக்கும் எம் சமூகத்திற்கும் பேரிழப்பாகும்.
அவரின் தொண்டு என்றும் அழியாதது. இறந்தும்
வாழுகின்ற மனிதன் என்ற நிலை அடைந்து விட்டார்.
அவரின் ஆத்மா இறைவனின் நிலையான ஆனந்தம்
பெற
வணங்குகிறேன்
என்றும் அவரின் தொண்டு வாழ்க!
திருநாவுக்கரசு எனும் நாமம் வாழ்க!

**கை. வாமதேவக்குருக்கள்**
புங்குடுதீவு -1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிது

இந்தப் பூவுலகிலே இறைவனால் படைக்கப்பட்ட நாம் மீண்டும் இறைவனின் திருவடி நிழல் அடைவதற்குரிய வழிகளில் சரியைத் தொண்டு முதன்மை பெறுகிறதற்கமைய திருநாவுக்கரசு நாயனார் வழியில் நின்று கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் மக்கள் இடத்திலே மாத்திரமல்லாமல் தாவரம் முதல் சகல பிராணிகளிடத்தேயும் இறைவனைக் கண்டார். அதனால் சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரத்திற்கமைய அடியார்க்கும் அடியாராக வாழ்ந்தது மட்டு மல்லாமல் திருஞானசம்பந்த நாயனார் காட்டிய வழியில் தாளத்தோடும் பண்ணோடும் சிறுவர்களைப் படிக்க வைப்பதற்குப் பண்ணிசை வகுப்புக்களை அமைத்து போக்குவரத்து ஒழுங்குகளையும் அமைத்துக் கொடுத்தார்.

அறநெறியிலே வாழவேண்டும் என்பதற்காக ஆத்திசூடி, கொன்றை வேந்தன் விழாவை அமைத்து பல சிறுவர்களை மேடையேற்றி மகிழ்ந்தார். மாணிக்க வாசகர் காட்டிய ஞான நிலையில் நின்ற யோகசுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள் போன்ற பல மகான்களுக்கு நினைவாலயங்கள் அமைத்தார்.

சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் வழியில் தன்னை நெறிப்படுத்தியவர். தான் பிறந்த புங்குடுதீவை வளப்படுத்துவதற்காக சர்வோதயம் அமைப்பை அமைத்து புங்குடுதீவு வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் எல்லா இடத்து மக்களுக்காகவும் வாழவேண்டுமென்ற பேரெண்ணம் கொண்டு "பரோபகாராய இதம் சரீரம்" என்றும் எப்போதும் வாழ்ந்தவர். உழுதுண்டு வாழவேண்டும் என்ற சொல்லிற்கமைய விவசாய கேந்திர நிலையத்தை அமைத்ததன்மூலம் விவசாயத் துறையில் மக்களுக்குப் பலவிதமாக ஊக்கம் கொடுத்து வெற்றியும் கண்டவர்.

தான் மாத்திரம் இப்பணியில் நின்றது மட்டுமல்லாமல் தனது தாயார், சகோதரர்கள் அனைவரையும் தன் பணியில் சேரவேண்டுமென்னும் எண்ணமும் கொண்டவர். இப்படிப்பட்ட ஓர் உயர்ந்த உள்ளம் படைத்தவரை நாம் இழந்து விட்டோம். இறைவன் தன் பணிக்காகத் தன்னுலகம் அழைத்துவிட்டான். இறைவன் இன்னும் சிலநாள் விட்டு வைத்திருந்தால் அவர் இன்னும் பல சேவைகளைச் செய்திருப்பார். நாம் கொடுத்து வைக்கவில்லை. அன்னாரின் சேவையும் தொண்டும் என்றும் எல்லா மக்களுக்கும் நீங்காத நினைவலைகளாக இருக்கும்.

**"தன் கடன் அடியேனையும் தாங்குதல்**
**என் கடன் பணி செய்து கிடப்பதே"**

கந்தையா திருநாவுக்கரசு தொண்டரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**சி. மனோகரராசக் குருக்கள்**
புங்குடுதீவு - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டால் உயர்ந்த தூயன்

புங்குடுதீவு மண் பெற்றெடுத்த தவப்புதல்வன் - வட இலங்கை சர்வோதயத்தின் அறங்காவலர் திருநாவுக்கரசு ஐயா அவர்களின் மறைவு தீவுப்பகுதி மக்களுக்கு மட்டுமல்ல, யாழ் மாவட்டத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ள சர்வோதயக் கிராமங்களைச் சேர்ந்த சகல மக்களுக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்ததை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அவர் சாதி, சமய வேறுபாடின்றி துன்பத்தில் உழலும் மக்களின் வாழ்வு நலம்பெற உழைத்தவர். மனிதநேயம், சகோதரத்துவம், மனிதகுல மேம்பாடு போன்றவற்றால் உந்தப்பெற்ற அவர் தனது இறுதி மூச்சுவரை தன் நாட்டு மக்களை எப்படி உயர்த்தலாம்; அவர்களின் அறியாமையை எவ்வாறு போக்கலாம்; அவர்களுக்கு எவ்வாறு உயர்ந்த கல்வியறிவை வழங்கலாம் என்ற சிந்தனையிலேயே மூழ்கியிருந்தார். ஏழ்மையில் உழலும் பாமர மக்களைத் தன் சொந்தக் கால்களில் நிற்கவைக்க அரும்பாடுபட்டார்.

சுவாமி விவேகானந்தர் காட்டிய பாதையில் ஜீவசேவையே சிவபூசை என்று வாழ்ந்த ஐயா அவர்களின் வாழ்வும் புனிதமாகவே அமைந்திருந்தது. இறுதிவரை இறுக்கமான பிரமச்சரியத்தைக் கடைப்பிடித்த அவர், தான் குருவாகப் போற்றிக் கொண்டாடிய யோகர் சுவாமிமீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். யோகர் சுவாமி குருபூசை, ஆத்திசூடி விழாக்களை ஆண்டு தோறும் பக்தி பூர்வமாகக் கொண்டாடிவந்த ஐயா அவர்கள் எங்கெல்லாம் ஆலயங்கள் திருவிழாக்கோலம் காண்கின்றதோ அங்கெல்லாம் தமிழ் மூதாட்டி ஔவையாரின் பெயரில் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்து அடியார்கள் தாகம் தீர்த்த பெருந்தகையாகவும் திகழ்ந்தார். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பொங்கல் உற்சவ காலத்தில் பந்தல்களை அமைத்து அங்கு சமைக்கப்படும் அமுதுகளை எல்லாம் ஏற்று சமமாகப் பங்கிட்டு ஏழை, எளியவர்களின் வயிறாற அரும்பணி புரிந்து வந்தார். பசு வதையைக் கண்டித்த அவர் கோமாதா பூசை செய்வதிலும் உயர்ந்து நின்றார்.

கொழும்புத்துறை யோகர் சுவாமி மகளிர் ஆச்சிரமத்தில் தனது அமைப்பை நிறுவியிருந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த கலை, கலாச்சார, சமய, சமூகப்பணி மன்றங்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி அங்கும் தனது சேவைகளை மறைமுகமாக ஆற்றி மக்கள் மனத்தில் உயர்ந்த ஒரு மனிதராகப் பரிணமித்திருந்தார்.

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சர்வமத மகாசபைப் பிரசங்க நூற்றாண்டு விழாவை 1994ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மகாநாடாக நாம் முன்னெடுத்தபொழுது கடும் வெய்யிலில் ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் இளநீர் வழங்கி தாக சாந்தி செய்த அவரின் பெருமனதைப் போற்றாதவர்கள் இல்லை. அந்நிகழ்வில் தானும் ஒரு பேச்சாளனாகக் கலந்தும் சிறப்பித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீவுப்பகுதியிலிருந்து பெருமளவு மக்கள் வெளியேறியதனால் ஏற்பட்ட கலை, கலாசாரப் பின்னடைவுகளைக் கண்டு மனம் துவண்ட அவர், விடுமுறை நாட்களில் அங்கிருந்து மாணவர்களை அழைத்து வந்து அவர்களுக்குக் கலை, கலாச்சாரப் பண்பாடுகளைப் போதிக்கும் அரும்பணியைப் புரிந்து வந்தார்.

புங்குடுதீவுக் கிராமத்தில் சுவாமி விவேகானந்தருக்கு அழகிய மணி மண்டபம் ஒன்று கட்டப்படவேண்டும்; அங்கு அவரின் சிலை நிறுவப்பட வேண்டும்; இராமகிருஷ்ணமிசன் வெளியிடும் நூல்கள் அங்கு மலிவு விலையில் விற்கப்படவேண்டும்; அதன்மூலம் தீவகப்பகுதி மக்கள் பயனடைய வேண்டும் என்பதே ஐயா அவர்களின் இறுதி ஆசைகளில் ஒன்றாக இருந்தது. இது பற்றி இராமகிருஷ்ண மிஷன் தலைவருக்கும் எனக்கும் அவர் கடிதம் ஒன்றை வரைந்திருந்தார்.

ஐயா அவர்களின் இப்பெரு விருப்பத்தை நிறைவேற்றும் புனிதப்பணியை உலகெங்கும் வியாபித்திருக்கின்ற தீவகப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து நிறைவேற்ற முன்வரவேண்டும்.

மக்களுக்குச் சேவை செய்வதையே உயர்ந்த இறைவழிபாடாகக் கருதியிருந்த திருநாவுக்கரசு ஐயா அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவர் விட்டுச் சென்ற பணியை வட இலங்கை சர்வோதய அமைப்பினர் தொடர்ந்து முன்னெடுத்து ஏழைகளின் வாழ்வு நலம்பெற உழைப்பார்கள் என நம்புகின்றேன்.

**இ. இராஜமகேந்திரசிங்கம்**
இயக்குநர், இராமகிருஷ்ணாலயம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# பிரார்த்தனையுரை

வட இலங்கைச் சர்வோதய அமைப்பாளர் பேரன்பர் க. திருநாவுக்கரசு அவர்களின் திடீர் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

பெறற்கரியது மானிடப் பிறவியாகும். மானிடப்பிறவியொன்றின்மூலமே பகுத்தறிந்து, உணர்ந்து சேவை செய்யமுடியும். அவ்வகையில் அமரர். திருநாவுக்கரசு அவர்கள் மக்கள் சேவை - பரோபகார சிந்தையுடனான - சமய, சமூக, ஆன்மீக சேவை என்பவற்றை இதயசுத்தியுடன் செய்தவர். ஈழத்துச் சிவயோக சுவாமிகளின் திருவடிகளைச் சிந்தித்து, வந்தித்து, வாழ்த்திப் பணிந்தேத்திய பண்பினையும் கொண்டு வாழ்ந்தவர்.

நிர்வாகத் திறமையுடன் ஆளுமையும் கொண்ட பெரியார். அன்னாரது ஆத்மா இறைவன் திருவடியில் சாந்தி பெறுவதாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பன்:
தாவடியூர் "அருளிசையரசு"
**கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தன்**
(பண்ணிசை ஓதுவார்)

---



வட - இலங்கைச் சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு அவர்கள் 10. 10. 1999ஆம் ஆண்டு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற 'அருளிசையரசு' தாவடியூர் கே. எஸ். ஆர். திருஞானசம்பந்தன் பாடியுள்ள "திருமுறைத் தேனமுது" என்ற ஒலி நாடா வெளியீட்டு விழாவின்போது மங்கல விளக்கேற்றி வைத்தார். பேராசிரியர். இ. குமாரவடிவேல் அவர்களும் அருகில் நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புங்குடுதீவின் தவப்புதல்வர்

மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதைச் சிரமேற்கொண்டு இக் கட்டான இன்றைய சூழ்நிலையிலும் தனது உடல்நலம் பேணாது அயராது உழைத்த உத்தமர்.

இங்கு வாழும் மக்களின் அவசியத் தேவைகள் எவையெவை என்பதை உணர்ந்து அவ்வப்பகுதிகளுக்குரிய திணைக்கள உயரதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவர்களை இங்கழைத்துத் தேவைகளை நிவர்த்தி செய்வித்த உத்தமராவார். ஆதரவற்ற ஏழை மக்கள், வயோதிபர்கள், பிள்ளைகள் ஆகியோருக்குத் தமது அமைப்பின்மூலம் தங்குமிடவசதி, உணவு, உடை ஆகியன கொடுத்து ஆதரவளித்த பெரியார்.

காலத்திற்குக்காலம் முதியோர் விழாக்கள்மூலம் அவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்ததுடன் மாணவர்களிடையே ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற நீதி நூல்களில் பயிற்சி ஏற்படுத்துவதற்காக மனனப் போட்டிகளை நடாத்திப் பரிசில் வழங்கி ஊக்கமளித்த பெரியாராவார்.

அவரது வாழ்நாளில் மேற்கொண்ட சேவைகளில் மிகவும் மேலானதும் பாராட்டக்கூடியதும் அவர் மக்களுக்காகவும் கால்நடைகளுக்காகவும் மேற் கொண்டு நிறைவு செய்தமை குடிநீர்ப் பிரச்சினையேயாகும்.

அன்னாரின் திடீர் மறைவு இங்கு வாழும் மக்களுக்கும் பேரிழப்பாகும். தொண்டரின் பிரிவு தாங்காது துயருறும் சகலருக்கும் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் சார்பில் ஆழ்ந்த அநுதாபத்தையும் கவலையையும் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் அவர் மேற்கொண்ட பணிகள் தொடரவும் அன்னை மகமாரி அருள்பாலிக்க வேண்டி தேவி திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**சி. மாணிக்கம்**
தலைவர்
ஸ்ரீமுத்துமாரி அம்பாள்
ஆலய பரிபாலனசபை
புங்குடுதீவு - 03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரங்கலுரை

வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும், பிரபல சமூக சேவையாளருமான தொண்டர் திரு. க. திருநாவுக்கரசின் திடீர் மறைவு எம்மையெல்லாம் பெருந் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. எத்தகைய அசாதாரண சூழ்நிலைகளையும் எதிர்கொண்டு பொதுநலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வந்த உண்மைத் தொண்டன் அவர். அவரது மறைவு தமிழ் மக்களுக்கும், குறிப்பாகப் பொதுநலனுக்காகத் தம்மை அர்ப்பணித்துழைக்கும் அனைவருக்கும் மாபெரும் இழப்பாக அமைந்துவிட்டது.

சிறு வயதிலிருந்தே அர்ப்பணிப்புச் சிந்தையுடன் செயலாற்றி வந்தவர். புங்குடுதீவில் சிரமதானப் பணிகளை ஆரம்பித்த காலத்தில் திரிசாரணர்களாக இருந்த எம்மையும் அப்பணிகளுக்குச் செயலாற்ற சந்தர்ப்பம் தந்து உதவியவர்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!

**இ. தவகோபால்**
தலைவர்

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொண்டுள்ளம் தடம்பதித்த**

**அந்த நாள் அரசியலில் .....!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'தியாகச் செம்மல் திரு'

புங்கை நகரின் நல்முத்து அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்து இன்று 31 நாள் கழிந்துள்ளது. ஆம்; நினைத்துப் பார்க்க முடியாத நிகழ்வு, பேரிழப்பு.

ஓர் அரிய பொக்கிஷத்தை இழந்துவிட்டோம். இவரது சேவைகளை வரலாறு கூறும்; புங்கை நகர் எடுத்து இயம்பும்.

மக்களின் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். இவ் அர்ப்பணிப்புகளின் சிகரமாக வட மாகாணத்தின் சர்வோதய இயக்கத்தின் தலைவராக இருந்து சர்வோதயத்தினை அலங்கரித்தவர்.

பொது வாழ்வில் தன்னை அர்ப்பணித்த தியாகச் செம்மல்.

தான் கொண்ட கொள்கைக்காகவும் தான் சார்ந்த அமைப்புக்களின் கொள்கைக்காகவும் தனித்து நின்று சொன்னதைச் செய்யும் செயல்வீரன், கண்ணியம் மிக்க சேவையாளன்.

எனது குறுகியகால நண்பன். இவரது இழப்பு என் போன்றோருக்கும், நான் சார்ந்த கட்சிக்கும், தொண்டர்களுக்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். இவரது இழப்பால் துயருறும் குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் ஆறுதல் கூறி, குறிப்பாக, புங்கை நகர் மக்களின் துயரிலும் நான் பங்கு கொள்கின்றேன்.

இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி!

**நடராஜா இரவிராஜ்**
யாழ். மாநகர முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் கந்தையா திருநாவுக்கரசு
## - சில நினைவலைகள் -

அமரர் கந்தையா திருநாவுக்கரசுடன் நமக்கு நாற்பதாண்டுகளாகத் தொடர்புண்டு. இத்தொடர்பு நட்பாக மாறி காலக்கிரமத்தில் மிக இறுக்கமான பிணைப்பானது. இவர் ஓர் அஞ்சா நெஞ்சன். ஆனால் நீதிக்குத் தலை வணங்குபவர். பழகுவதற்கு இனியவர். ஆனால் சிறந்த பண்பாளர். 1961இல் தான் அவரை முதன் முதலாகச் சந்திக்கும் வாய்ப்பு நமக்குக் கிட்டியது. இக்காலத் திற்றான் அன்றைய கொழும்பு அரசுக்கெதிராகத் தந்தை செல்வா, தலைவர் அமிர்தலிங்கம் போன்றோரின் வழிகாட்டலுடன் வடகிழக்கு மாகாணங் களிலுள்ள கச்சேரிகளின் முன்பாகச் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. இதன் விளைவாக மூன்று மாதங்களாகக் கச்சேரி நிருவாகமே ஸ்தம்பித்தது. இப்போராட்டத்தில் இளைஞர்களாக இருந்த நாம் இருவரும் தொண்டர்களாக இணைந்தது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். நண்பர் திருநாவுக்கரசு ஒரு சுறுசுறுப்பான இளைஞனாக மிடுக்குடன் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து ஆற்றிய பணிகள் பல. சிறந்த நாவன்மையாளராகவும், எவருடனும் இனிமையான சுபாவத்துடன் பழகும் பாங்குடையவராகவும் இவர் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியை வளர்த்தெடுப்பதில் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. இருந்தும் நாளடைவில் அரசியலில் மக்களுக்குச் சேவையாற்ற வந்த இவர் பின்னர் மக்களின் தொண்டனாகப் பணிபுரிய விழைந்தார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் போன்ற அறநூல்களின் கருத்துக்களைக் கற்றது மட்டுமன்றி அவற்றைச் சிந்தையில் இருத்திய இவர் யோகர் சுவாமிகள் போன்றோரின் ஆத்மீக அருள்மொழிகளில் திளைத்தார். இதனால் ஆத்மீகம் இவரைக் கவர்ந்தது. இதன் விளைவுதான் சர்வோதய இயக்கத்தில் இவரின் இணைப்பாகும். சர்வோதய இயக்கத் தலைமை தமது பிராந்திய நலன்களைத் தக்கவாறு கவனிக்காததால், எமது பிராந்திய நலன்களை முன்னெடுத்துச் செல்வதற்காகத் தனியான ஒரு நிறுவனத்தை இவர் ஆரம்பிக்க வேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று.

ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து நடாத்துவது என்பது சுலபமான காரியமன்று. வாய்ச்சொல் வீரர்கள் மலிந்த இக்காலகட்டத்தில் தமது ஆளுமையால் தம்மை மட்டுமன்றித் தமது குடும்பத்தினரையும் இப்பெரும் தொண்டிற்கு இணைத்த பெருமை இவருக்குண்டு. 'தியாகம்', 'தொண்டு', 'அர்ப்பணம்' போன்ற பதங்கள் நம்மத்தியில் மிகமிக அந்நியமான பதங்களாகக் கருதப்படும் இச் சூழலில் ஒரு தொண்டன் இவ்வாறுதான் வாழவேண்டும் என்று சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர். அதுவும் இப்போர்க்காலச் சூழலில் நம்மவர் பலர் அநாதைகளாய், நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் தமது வாழ்க்கையையே இத்தொண்டுக்காக அர்ப்பணித்த அமரர் திருநாவுக்கரசு ஒரு மாமனிதன் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாமும் செய்யாது, மற்றவர்களையும் செய்யவிடாது அவர்களின் பணிகளில் குறைகளை மட்டுமே கண்டுபிடிக்கும் பெரியோர்கள் பலர் உலாவரும் இக்கால கட்டத்தில், எவற்றுக்கும் சளைக்காது மனவுறுதியுடன், அப்பழுக்கற்ற தியாகத் துடன் மக்கள் நலன்புரிச் சேவைகள் பலவற்றை மிகவும் சுறுசுறுப்பாகவும், கண்ணியத்துடனும் மனஞ்சளைக்காது முன்னெடுத்துச் சென்றவர். எல்லோ ராலும் 'திரு' என அன்பாக அழைக்கப்படும் இவர் இறுதிவரை 'மக்கள் சேவையே மகேசன் சேவை' எனப் பணியாற்றியதால் தமது சுகவீனத்தையே பெரிதாகக் கணக்கில் எடுக்கவில்லை. ஈற்றில் இக்கவலையீனமே அவரைத் திடீரென நம் மத்தியிலிருந்து பறிக்க வழிவகுத்தது. நம் எல்லோரையும் மனம் நெகிழ வைக்கும் நிகழ்ச்சியாகவும் அது அமைந்து விட்டது.

எமது பிராந்தியத்தில் தியாக சிந்தனையுடன் இயங்கிய தொண்டு நிறுவனங் கள் பல. தலைமையின் அமரத்துவத்தோடு அவற்றுக்கும் அமரத்துவப் பேறு கிடைப்பது வழக்காகிவிட்டது. அவ்வாறின்றி அமரர் தொடக்கிவைத்த இந் நிறுவனத்தைத் தியாக சிந்தனையுடன் சுறுசுறுப்பாக இயங்க வைப்பது உண்மை யிலே நாம் அவரது பணிகளுக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும். இத்தகைய நன்றிக்கடன் அவரது ஆத்ம சாந்திக்கும் வழிவகுக்கும் என்பது புனைந்துரை அன்று. இதே இன்று நாம் எதிர்கொள்ளும் சவாலாகும். இத்தகைய சவாலை எதிர்கொள்ள நாம் தயாரா?

**பேராசிரியர். சி. க. சிற்றம்பலம்**
தலைவர். வரலாற்றுத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதகுல மாணிக்கம் மாமனிதன்

அண்ணன் க. திருநாவுக்கரசு அவர்கள் கொழும்பில் 03. 10. 2001ஆம் திகதி காலமானார் என்ற செய்தி கேட்டு என்னால் நம்ப முடியவில்லை. புங்குடுதீவில் இருந்து மருத்துவ சிகிச்சைக்காகக் கொழும்புக்கு வருகை தந்திருந்தபோதிலும் பல்வேறு அனர்த்தங்களுக்கு ஆளாக்கப்பட்டு நாட்டுக் குள்ளேயும், நாட்டுக்கு வெளியிலும் அகதிகளாய் வாழ்ந்துவரும் எம்மூர் மக்கள் ஒருபுறமிருக்க அங்கு தற்போதும் வாழ்ந்துவரும் மக்களின் துயர் துடைக்கவென கொழும்பிலுள்ள நம்மூர் பிரமுகர்களை 30. 09. 2001ஆம் திகதி அழைத்து ஆலோசனை நடத்தினார். நானும் அதில் பங்குகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. அதற்கு முன்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பலமுறை சந்திக்கும் வாய்ப்பு இருந்தது. எனினும் அச்சந்திப்பின்போது அவர் இருதயநோயினால் அவஸ்தைப் பட்டதை நேரில் கண்டேன். "என்ன அண்ணே! உங்களுக்கு என்ன நடந்தது?" என்று கேட்டேன். "அது ஒன்றுமில்லை தம்பி" என்றார். சுகமாகிவிடும் எனப் பதில் வந்தது. ஆனால் இரண்டொருநாளில் வந்ததே அந்தச்செய்தி. அக் கலந்துரையாடலில் புங்குடுதீவின் எதிர்காலம் பற்றி விவாதித்து பல அபிவிருத்தித் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டன.

3ஆம் திகதி அண்ணன் திருநா, இவ்வுலக சேவையினை முடித்துக் கொண்டார் என்று கேள்விப்பட்டதும் முதலில் நம்ப முடியவில்லை. பிறப்பவர் யாரும் மரணிப்பர் என்பது இயற்கையே. எனினும் அமரரின் இறப்பு அவருக்கு மட்டுமல்ல - அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல - எமது சமூகத்திற்கே பேரிழப்பு. தனது வாழ்வு, தான் சார்ந்த மக்களுக்கே என்று சபதம் பூண்டு தேசிய - பிராந்திய - பிரதேச - கிராமம் என்ற பல்கோணப் பார்வையுடன் சமூக, சமய, பொருளா தாரப் பணியினைச் செவ்வனே ஆற்றியவர் அமரர் தொண்டர் அவர்கள்.

1950களில் தனது சமூக, சமயப் பணியினை ஆற்றத்தொடங்கிய அமரர் அவர்கள் இளைஞர் கழகம், சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கம், கிராமசபை, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் போன்ற பல்வேறு அமைப்புகளுக் கூடாக மக்களுக்குப் பணிசெய்த உத்தமன்.

அரசியலூடாக மக்களுக்குச் சேவை செய்யவென தமிழரசுக் கட்சியில் இணைந்து தமிழரின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளைக் களைய முற்பட்டவர். தலைசிறந்த பேச்சாளனான அண்ணன் திருநாவுக்கரசு அவர்கள் அரசிய லூடாக ஒட்டுமொத்த மக்களுக்கு சேவையாற்றுவதிலுள்ள இடையூறுகள், கஷ்டங்களை உணர்ந்து அதனை அடியோடு மறந்தவர்.

தேசிய ரீதியில் செயற்பட்டுவந்த சர்வோதய அமைப்புடன் தன்னை இணைத்துக்கொண்ட அமரர், காலப்போக்கில் இனவாத, சமூக, அரசியல் கொழுந்துவிட்டெரியும் இந்நாட்டில் சுதந்திரமான ஒரு அமைப்பின் தேவை யினை உணர்ந்து "வட இலங்கை சர்வோதயம்" என்ற அரச சார்பற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிறுவனத்தை ஏற்படுத்தியும் ஆன்மீக வழியில் நடந்தும் மக்களுக்குத் தொண்டாற்றினார்.

புங்குடுதீவுக் கிராமத்தவர்கள் தூய குடிநீர்ப் பற்றாக்குறையால் அவதிப் படுவதையுணர்ந்து மழைகாலங்களில் வீராமலையிலிருந்து வடிந்தோடும் நீரினை கள்ளியாற்றில் மறித்துக்கட்டி, நிலத்தடி நீரினைச் சேமித்து நன்னீராக்கும் முயற்சி யில் கணிசமான வெற்றி கண்டபோதிலும் அதன் பலனினை மக்கள் அனுபவிக்க விஷமிகள் சிலர் விடவில்லை. நீரைக் கடலுடன் கலக்கச்செய்தனர். இருப்பினும், அதனைத் தொடர்ந்து குளங்கள் தூர்வாருதலிலும் ஈடுபாடு காட்டினார். புங்குடுதீவின் போக்குவரத்தில் அக்கறைகொண்ட அண்ணா திரு அவர்கள் பிரதான வீதிகளை மட்டுமல்லாது குக்கிராம ஒழுங்கைகளையும் அகலமாக்கிய அற்புதமானவர். நல்லைப்பெருமானின் அடியார்களுக்கு அமுதூட்டிய பண்பாளர்.

அமரரின் சமூக, சமயப் பணி குறித்தவொரு பிரதேசத்திற்குரியதல்ல என்பதைச் செயலில் காட்டியவர். எனினும், தனது தாயகமான புங்குடுதீவு மக்கள் 1990களின் முற்பகுதியிலிருந்து இடம்பெயரவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்படவே அங்கு எஞ்சி வாழும் ஏறத்தாழ 3,000 மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிக்காகப் பெருமளவுக்குச் செயற்பட்டார் என்பதை யாராலும் மறுத்துரைக்க முடியாது. பொருளாதார வளர்ச்சியற்ற சமூகத்தினரின் வாழ்வினை உயர்த்துவதற்காக அரசுடனும், அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் அதட்டலுடனும் அன்பாகவும் கருமமாற்றி பல நலத்திட்டங்களை உருவாக்கி சேரவேண்டிய இடத்திற்குச் சேர்ப்பித்த பண்பாளன்.

அண்ணன் திருநாவுக்கரசு அவர்கள் ஐந்தறிவுகொண்ட கால்நடை களுக்கும் உற்ற தோழனாவார். உரிமை கொண்டாடப்படாது பல்கிப்பெருகியுள்ள ஜீவராசிகளுக்கு - குறிப்பாக மாடுகளுக்கு "கோதானம்" என்ற பெயரில் ஆற்றி வரும் சேவை மகத்தானது. இது மற்றவர்களுக்குப் படிப்பினையாக அமைகின்றது. கால்நடைகளுக்குத் தண்ணீர் குடிப்பதற்கு, அடைகாத்த குளத்தை தூர்வாரியும், பனையோலைகளை உணவாக்கியும் அளித்து அவை களின் புன்முறுவல்களால் பூரிப்புக்கண்டார்.

பாதுகாப்பற்ற சூழலிலும் போக்குவரத்துக் கஷ்டத்திலும் வாழ்ந்துவரும் நம்மூர் மக்களின் பாதுகாவலனாக வாழ்ந்தவர். மக்களுக்கு எப்பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதற்கு முகங்கொடுத்தவர். இவரை அணுகினால் நமது துன்பம் நீங்கும் என நம்பிய மக்களைத் தனித்துவிட்டுச் சென்றுள்ளார்.

அமரர் அவர்கள் எக்கருமத்தில் ஈடுபட்டாலும் கண்டிப்பானவர். தனக்குச் சரியெனப்பட்டதைத் துணிந்து செய்பவர். மற்றவர்களை மதிக்கும் பண்பும் அவர்களிடத்தில் காணக்கூடிய அறிவினையும் செயற்றிறனையும் பெற்றுக் கொள்ளும் ஆசையும் கொண்டவர். இத்தகைய நற்பண்புகளைக் கொண்ட அண்ணன் எம்மத்தியிலிருந்து விலகி மீளாத்துயிலில் சங்கமமானதையிட்டு எம்மால் பொறுக்கமுடியவில்லை. அவர் விட்டுச்சென்ற பணிகளோ மிகக் கடின மானவை. அவற்றைச் செயற்படுத்துவதற்கு எம்மில் யார் முன்வருவார்கள்? அழுங்குப் பிடிக்குள் அகப்பட்டுள்ள எம் மக்களின் விடிவிற்கு யார் முகங் கொடுக்கப் போகிறார்கள்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"புங்குடுதீவின் சிகரம்" பூகம்பத்தினால் சிதைவுற்றுவிட்டது. கழுகுகளும், நரிகளும் அங்கு குடிகொள்ளாமல் தடுக்க அவர் விட்டுச்சென்ற பணிகளை நாம் தொடர்வதன்மூலம் அவரது நாமம் எம்மிடையே என்றென்றும் இருக்கும். இதுவே அவரது ஆத்மா சாந்தியடைய ஒரே வழியாகும்.

பகட்டான வாழ்வைத் துறந்து பிரமச்சரியத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்த அமரரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், சர்வோதய அமைப்பினருக்கும் எனது கண்ணீரினைக் காணிக்கையாக்குவதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லையே! அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல பெருங்காடு ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானையும் கிராஞ்சியம்பதியானையும் இறைஞ்சுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பேராசிரியர் கலாநிதி கா. குகபாலன்**

புவியியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

6ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் ஸ்ரீ சாயிராம்

# எங்கள் மரத்தின் இன்னொரு கிளையும் முறிந்ததோ!

திருநாவுக்கரசு என்றால் எனக்குத் தமிழரசுக் கட்சிதான் ஞாபகத்துக்கு வரும். 50களின் பிற்பகுதியிலும் 60களின் முற்பகுதியிலும் தமிழரசுக் கட்சியை அறிமுகப்படுத்தல், அதன் செயற்திட்டங்களை அமுலாக்கல் என்ற கடினமான பணிகளுக்கு இளைஞர்கள் தேவைப்பட்டார்கள். இது இலகுவான பணியாக இருக்கவில்லை. ஏற்கனவே, தமிழ்ப் பகுதிகளில் செல்வாக்குடன் இருந்த தமிழ்க் காங்கிரஸை அப்புறப்படுத்தி அவ்விடத்தில் செல்வா தலைமையில் தமிழரசைக் கட்டியெழுப்ப வேண்டியிருந்தது. தன்னலம் கருதாத தொண்டர் பலம் இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகக் கூடிய நிலை.

தமிழரசுக் கட்சியைத் தீவுப்பகுதியில் அறிமுகப்படுத்துவதில் புங்குடுதீவு வாலிபர்களே பொறுப்பேற்றுக் கொண்டார்கள். தமது ஆற்றலாலும் அயராத உழைப்பாலும் இவர்கள் கட்சியை வளர்ப்பதில் நாடு முழுவதிலும் முன்னோடி களாக மாறினார்கள். தமிழரசுக் கட்சி நடாத்திய ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், சத்தியாக்கிரகப் போராட்டம் என்பனவற்றில் புங்குடுதீவு மக்களின் பங்களிப்பு வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

அத்தகைய பெருமைக்குரிய மக்களுள் ஒருவராக வளர்ந்து கட்சியோடு தன்னை இறுகப் பிணைத்துக் கொள்கை வழி நின்று புகழ் பெற்றவர் தம்பி திருநாவுக்கரசு. தமிழரசுக் கட்சியின் எந்த மேடைகளிலும் 1960களுக்குப் பின்னர் திருநாவுக்கரசு முழங்காது விட்டதில்லை. இவ்வளவு ஆற்றல் இந்த இளைஞனுக்கு எப்படி வந்தது என்று எண்ணி நான் வியந்துள்ளேன்.

பின்னாளில் கட்சிப் பணி துறந்து தூய சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட திருநாவுக்கரசு சர்வோதயம் மூலம் காந்திஜி கண்ட கனவுகளைத் தமிழ் மண்ணில் நனவாக்குவதில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அரசியல் என்றாலும் சரி, சமூக சேவை என்றாலும் சரி, தியாக சிந்தை, உறுதி, ஊக்கம் இவை இருந்தால் சாதித்தே காட்டலாம் என்பதற்குத் திருநாவுக்கரசின் வாழ்க்கை சிறந்ததொரு பாடமாகும். மனம் நிறைய ஆர்வமும், உடல் நிறைய உறுதியும் கொண்ட அவர் ஏன் இப்படிச் சொற்ப வயதில் எம்மைவிட்டு அகல வேண்டும்?

எஞ்சியிருக்கின்ற மரக்கிளைகளும் ஒவ்வொன்றாகத் தானாவே முறிந்து விழுவதனை இந்தத் தொண்ணூறு வயதிலும் பார்த்துச் சகிப்பது என்பது எனக்கு இயலாதுள்ளது. அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி!

**வித்துவான் வ. கந்தையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘இளைஞர் எழுச்சியின் முன்னோடி திருவே’

புங்குடுதீவு தந்த ஒரு பொக்கிஷம் திருநாவுக்கரசு. தமிழன்னைக்கு அவர் ஆற்றிய பணிகள் வரலாற்றில் நிலைத்திருக்கும். அன்றைய காலகட்டத்தில், சுகபோக வாழ்க்கை, உயர்கல்வி, வருமானந் தரும் பல தொழிற்துறைகள் எனப் பல மார்க்கங்கள் இருந்தும் தமிழ் மீதும், தமிழ் மண்ணின் மீதும் கொண்ட பற்றினால் இவை யாவற்றையும் துறந்துவிட்டுக் காடு மேடெல்லாம் அலைந்து திரிந்து கட்சிப் பணி செய்தவர் திரு.

அண்ணன் திருவை நாங்கள் வழிகாட்டியாகவே கொண்டு செயற்பட்டோம். தமிழ் இளைஞர் பேரவை என்பது தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி யிலிருந்து கிளைத்ததுதான். வாலிபர் முன்னணியின் பொதுச் செயலாளராக இளைஞர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார் அமரர் திருநாவுக்கரசு. அவரது இலட்சிய வேட்கைக்கும் துடிப்புமிக்க செயலாற்றலுக்கும் இது தக்க சான்று பகர்வதாக உள்ளது.

தமிழரசுக் கட்சிக்குள் ஒலித்த தீவிரவாதக் குரல்களைச் சமாதானப் படுத்துவதில் அண்ணர் திரு எவ்வளவோ பாடுபட்டுக் கட்சியின் ஒருமைப் பாட்டைக் கட்டிக்காக்க உழைத்தார். கட்சியலுவலகத்தில் இருபத்துநாலுமணி நேரமும் தங்கிப் பணியாற்றிய காலமும் எங்களுக்காக உணவுகூடச் சமைத்துப் போட்ட நாட்களும் உண்டு. எதுவுமற்று வெறும் தேநீருடன் நாம் காலம் கழித்த நாட்களும் மனக் கண்ணில் நிழலாடுகின்றன.

திருமலை மாவட்டத்தில் பெரும்பான்மையினத்தின் அத்துமீறல் குடியேற்றங் களைத் தடுத்து நிறுத்துவதற்காக - எனது கல்வியைக்கூட கைவிட்டு நான் அங்கு சென்றபோது எம்மை வரவேற்ற புங்குடுதீவுப் பட்டாளத்தில் அண்ணன் திருவும் முக்கியமானவராக இருந்தார். எந்த அச்சுறுத்தலுக்கும் தயாராக, ஆயுதபாணிகளாகக்கூட எம்மைக் காத்தவர்களில் புங்குடுதீவு இளைஞர்கள் நிறையவே இருந்தார்கள். அவர்கள் திருவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்கள்.

பின்பு அண்ணர் 'திரு' அரசியலைவிட்டு ஒதுங்கியபோதும் தமிழரசுக் கட்சியும் தமிழ்மண் பற்றும் அவர் இரத்தத்திலிருந்து அகன்றிருக்க முடியாது. தந்தை செல்வா மீதும் தமிழரசுத் தலைவர்கள் மீதும் அவர் காட்டிய பாசமும் பணிவும் எங்களுக்குப் பாடங்கள் கற்றுத் தந்தன. அவரது கரங்களால் அரவணைத்து வளர்க்கப்பட்ட ஒரு சோதரன் என்றளவில் என் கண்ணீரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் பணியைப் புங்குடுதீவு மக்கள் நிச்சயம் தொடர்வார்கள் என்ற நம்பிக்கை மட்டுமே எமக்கான ஆறுதலாகும்.

**மாவை சோ. சேனாதிராசா** (முன்னாள் பா. உ)
(ஜெயரட்ண மலர்ச்சாலையில் அமரர் திருவின் பூதவுடலுக்கு
05. 10. 2001 அன்று அஞ்சலி செலுத்தி ஆற்றிய உரையிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத் தொண்டனாய்.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணைந்தனையோ ஒளிவிளக்கே!

மனிதன் பிறக்கிறான், வாழ்கின்றான், இறக்கின்றான். அவன் வாழ்கின்ற வாழ்வில் தானும் வாழ்ந்து, மற்றவரையும் நன்கு வாழ வைத்து வாழ்வதே சிறப்பான அம்சமாகும். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வபன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றார் வள்ளுவர். அவ்வாறு வாழ்வாங்கு வாழும் முறைமை எல்லோருக்கும் அமைந்து விடுவதில்லை. புகழோடு சிலர் பிறக்கிறார்கள். புகழ் சிலரைத் தேடிச் செல்கின்றது. சிலருக்கோ புகழ் அவர்கள் தலைகளில் பலவந்தமாகத் திணிக்கப்படுகின்றது. மூன்றாம் நிலையில்தான் இன்றைய உலகம் சென்று கொண்டிருக்கின்ற நிலையில் தம்பி திருநாவுக் கரசுவோ எனில் முற்றிலும் மாறுபட்டவர். ஏனெனில் மக்கள் சேவைக்காகவே அவர் பிறந்தார். மக்கள் சேவைக்காகவே வாழ்ந்து பெரும் புகழோடு மடிந்தார். புகழ் அவரைத் தேடித்தான் சென்றது.

அமரர் திருநாவுக்கரசை அறியாதவர்கள் யாருமே இருக்க முடியாது. ஆரம்ப காலத்தில் தமிழ், தமிழர்நாடு, இனம், உரிமை, மொழி, சுதந்திரம் இவற்றிற்காக தமிழரசுக் கட்சியில் சேர்ந்து பெரும் பணியாற்றினார். தமிழரசுக் கட்சியை இந்நாட்டிற்கு அறிமுகப்படுத்திய பெரியார்களுள் இவரும் முக்கிய மானவர் என்பதனை மறந்துவிட முடியாது. அந்நாட்களில் அவர் கூட்டங்களில் பேசும்போது பொறி பறக்கும் வசனங்களையும், கவிதைகளையும் எப்படித்தான் மறக்க முடியும். "ஒரு தமிழன் தமிழுக்காகவே உயிர் வாழ்கிறான். உயிர் வாழ்வோன் தமிழனுக்கே தன்னை ஈய்கின்றான்" என்ற கவிதை வரிகள் இப்போதும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

சில காலங்களின் பின், அவர் சர்வோதய வட பிராந்திய அமைப்பாளர் ஆனார். அதன்மூலம் மக்களுக்கு சிறந்த சேவையை ஆற்றினார். குறிப்பாக, புங்குடுதீவு மக்களுக்குச் தேவையான அனைத்தையும் செய்து கொடுத்தார். 65களில் அதிகமான வீடுகளுக்கு கழிவறை கட்டும் முயற்சியில் ஈடுபட்டார். ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, மரம் நடுகை முதலியனவற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். விவசாயத்தை முறையாக ஊக்குவித்து மக்கள் கவனத்தை அதில் திருப்பினார். குடிநீர்ப் பிரச்சினை புங்குடுதீவைப் பொறுத்த மட்டில் ஒரு தீர்வில்லாத பிரச்சினையாகவே இருக்கின்றது. வேலணை சாட்டியில் காணி வாங்கி, கிணறுகள் தோண்டி, வட்டாரம் தோறும் தொட்டிகள் அமைத்து பவுசர்கள் மூலம் தண்ணீர் வழங்கினார். வட்டாரம் தோறும் கடைகள் அமைத்து பொருட்களை மக்கள் பெறும் பொருட்டு மலிவு விலையில் வழங்கினார்.

கல்வி விடயத்தில் ஒவ்வொரு பாடசாலைக்கும் தரமான ஆசிரியர்களைப் பெறுவதற்கு கடுமையாகச் செயற்பட்டார். வட்டாரம் தோறும் சிறுவர் பாடசாலைகளை அமைத்து சிறுவர் கல்வி பெறவும், போசாக்குணவைப் பெறவும் வழி வகுத்தார். குழந்தைகள் தடுப்பூசி பெறவும், போசாக்கான மா வகைகள் பெறவும் நிலையங்கள் அமைத்து ஒழுங்கு செய்தார். கால்நடைகளுக்கு மருந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தடுப்பூசி முதலியன கொடுப்பதற்கு ஆவன செய்தார். மகப்பேறு அடையும் தாய்மார்களுக்கு தடுப்பூசி போசாக்குணவு பெற ஆவன செய்தார். இடப்பெயர்வின்போதும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களில் தற்காலிக வீடுகள் அமைத்து மக்கள் பட்ட வேதனைகளைத் தீர்த்தார்.

மக்கள் சேவையே தன் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவரை விதி விட்டு வைக்கவில்லை. 1990ம் ஆண்டில் ஏற்பட்ட நெஞ்சுவலி இருதய வருத்தமாக மாறியது. வைத்திய முறையை ஒழுங்காகக் கடைப்பிடித்ததன் காரணத்தால் பதினொரு வருடங்கள் அவரால் கூடுதலாக வாழ முடிந்தது. இருந்தும் எதிர் பாராத விதத்தில் ஏற்பட்ட இந்த மரணம் எல்லோர் உள்ளங்களையும் கவலைக் குள் ஆழ்த்தியது.

அணைந்தனையோ ஒளி விளக்கே! இந்த வையம் அணையவில்லை எனினும் எமக்கு இங்கு என்ன வேலை?

கவலையுறும் அவர் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தியடைய எமது உளமார்ந்த கண்ணீர் பிரார்த்தனைகள்!

ஓம் சாந்தி!

**டாக்டர். கி. கணேஸ்**
சமாதான நீதவான்

புங்குடுதீவு - 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூகத் தொண்டில் உயர்ந்தவர்

03.10.2001ல் அமரத்துவமடைந்த கந்தையா திருநாவுக்கரசு என் தந்தைக்கு ஒப்பானவர். அவரது கம்பீரமான தோற்றத்தை, நடந்து செல்லும் உற்சாகத்தை, இனிமையான தமிழ்ப் பேச்சை இப்போது நினைக்கும் போது உள்ளம் குமுறுகின்றது. 'சர்வோதயம்' என்றால் அது அமரர் அவர்களையே சாரும் என்ற அளவுக்கு யாழ்ப்பாணத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டார்.

சேவை மனப்பான்மை என்பது இன்றைய சூழலில் எல்லார்க்கும் எளிதன்று. இத்தகைய நிலையில் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் யாழ்ப்பாண மக்களின், குறிப்பாகப் புங்குடுதீவு மக்களின் எதிர்கால நலன் பொருட்டு விடா முயற்சியுடன் சர்வோதய நிறுவனத்தை நடத்தி வெற்றி கண்ட கர்ம வீரனாகவே என்னால் காண முடிந்தது. காலம் பிழையாக இருந்தும் தன் கடைமையில் உற்சாகத்துடனும் துணிவுடனும் அஞ்சா நெஞ்சத்துடனும் பல்வேறு பணிகளாற்றிப் பார் போற்ற வாழ்ந்த பண்பாளன் என்றால் மிகையாகாது.

சில வேளைகளில், அவர் ஓடியாடிச் செய்யும் பணிகளை நான் நேரில் பார்த்திருக்கிறேன். புகழுக்காக அல்லாமல் மக்கள் சேவையைத் தன் உயிர் மூச்சாகக் கொணடு செயற்பட்டவர். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகையாளன் அவர்.

சர்வோதய அமைப்பை ஏற்படுத்தி, அதன்மூலம் பலர் பயன்பெற்றமையை யான் அறிவேன். இதன் காரணமாக சாதாரண, எளிமையான மக்களுடன் பண்பாகவும் - நட்பாகவும் பழகும் தன்மையுடையவர். இதனால், மக்கள் உள்ளங்களில் நிறைந்து நின்றவர்.

உலகில் பிறப்பும் இறப்பும் இயற்கை நியதி. எனினும், இந்தச் சர்வோதய மலை சரிந்தது எல்லோரது உள்ளங்களையும் நோகச் செய்துவிட்டது. அவர் ஊரும் உலகும் பயனுற வாழ்ந்த ஒருவர்.

இத்தகைய சிறப்புக்களைப் பெற்று அமரராகிய அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ. ரமேஷ்**
கிராம உத்தியோகத்தர்

புங்குடுதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாண்புமிகு மாமனிதா மறைந்தனையோ!

திருவுக்கு உருவாகி நாவுக்கு அரசாகி திருநாமம் பெற்ற உத்தமனே! புங்கை மாதா பெற்றெடுத்த பூவேந்தனே! வையத்துள் புகழோடு தோன்றி புகழோடு வாழ்ந்து இன்று புகழோடு மறைந்து விட்டாயே! இத்தனை காலமும் ஒளி குன்றாது வலம் வந்த உதயசூரியனே! உனது திடீர் அஸ்தமனத்தால் துடிக்க மறந்தது இதயம். தவிக்கிறது நெஞ்சம். செவிவழியே கேட்ட செய்தி பொய்யாகிப் போகாதோ என்று ஏங்குகின்றது எங்கள் மனம். தொண்டின் சிகரமே உன் தோற்றம்! கம்பீரமான நடை, எந்நேரமும் சிரித்த முகம், இனித்த பார்வை, இதமான வார்த்தைகள், உபசரிக்கும் உயரிய பண்பு, மேன்மை பொருந்திய குணங்கள், இவை யாவும் என்றும் மறக்க முடியாதவை. எங்கள் இனத்தின் விடிவிற்காகவும் ஏழை மக்களின் துயர் துடைக்கவும் அரும்பாடுபட்ட சர்வோதய திலகமே! உனை நெஞ்சம்தான் மறக்குமா? நினைவுகளை இழக்குமா?

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைச் சொந்த இடமாகக் கொண்ட கந்தையா - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாக அவதரித்த இவர், இளமைக் கல்வியைச் சொந்த ஊரிலேயே தொடர்ந்தவர். பின் அவரது சிறிய தந்தையான (சார்ஜண்ட்) அம்பலவாணருடன் இருந்தமையால் அவர் வேலை செய்த இடங்கள் எல்லாம் சென்று கல்வி கற்றுப் பலமொழி ஆற்றலைப் பெற்றார். இவருடைய இளமைக்காலம் எழுச்சிக் காலமாகையால் இளைஞர் கழகத்தின் ஸ்தாபக உறுப்பினராகி அக்கிராமத்து இளம் சிறார்களை நல்வழிப்படுத்தியவர். தமிழரசுக் கட்சியின் இளைஞர் முன்னணியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1970களில் சர்வோதய சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட திரு அவர்கள் அதன் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்னாவின் துணையுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தினார். பின்பு வட இலங்கைச் சர்வோதய அமைப்பை நிறுவி அருந்தொண்டாற்றி வந்தார். அது மட்டுமன்றி சமூகத் தொண்டுகள், இலக்கியத் தொண்டுகள், ஆத்மீகத் தொண்டுகள் எனப் பல வழிகளிலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூலமந்திரத்தின் வழிநின்று சேவையாற்றியவர்.

சர்வோதய சேவையுடன் மட்டும் நின்றுவிடாது அன்னார் சிரமதானம், குடிநீர் வழங்கல், குளங்கள் வெட்டுதல், புனரமைத்தல் போன்ற பணிகளையும் செய்தார். புங்குடுதீவில் வரட்சி காரணமாகவும் மழையின்மை காரணமாகவும் கோமாதாக்கள் தண்ணீர், உணவு இல்லாமல் அலைந்து திரிந்த நேரத்தில் தொண்டர், அடைக்காத்த குளத்தை புனர் நிர்மாணம் செய்து, தூர் வாரி, நீர் ஊற்றாக்கி ஒவ்வொரு நாளும் பத்திற்கு மேற்பட்ட கற்பகச் சோலையில் (பனை மரங்களில்) ஓலைகளை வெட்டிக் கிழித்து உணவாக அளித்தார். பசுக்களும், கன்றுகளும் அவற்றை உண்டு, நீர் அருந்தி காலை, மாலை அங்கே உறங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்ற காட்சியை நேரில் கண்டு பேரானந்தம் கொண்டவர். இவற்றுக்காக கொழும்பு வாழ் வர்த்தகப் பிரமுகர்களை இங்கிருந்து கடித மூலம் தொடர்பு கொண்டார். பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் திரு. சி. மு. நாகரத்தினம் தலைமையில் பெறப்பட்டு இங்கு அனுப்பப் பட்டது.

மேலும், இங்கு பஞ்சம், பட்டினி வாராதிருக்க பனை விதைகள், பழ மரங்கள் என்பவற்றை நாட்டி கேரதீவுக் காட்டைத் துப்புரவாக்கி புதுக் கிராமம் ஆகப் பொலிவு பெறச் செய்தார். அது இப்போது சோலையாக காட்சி தருகின்றது.

அத்துடன், சமூக சேவைகளான சுகாதார சேவை, தாய் சேய் நலன் சேவை, சத்துணவுத் திட்டம், சித்த ஆயுள்வேத வைத்திய சேவை, வெள்ள நிவாரணப் பணிகள், மயான அபிவிருத்தித் திட்டம் போன்ற பல பணிகளை அன்னார் செயற்படுத்தினார்.

யோகர் சுவாமிகளிடம் நேரடியாக ஆசிபெற்ற இவர், ஆன்மீகப் பணிகள் பலவற்றினையும் செய்தார். நல்லூர் முருகனுடைய வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்களுக்கு தண்ணீர்ப் பந்தல், பாத யாத்திரை முதலிய பணிகள் மூலம் உதவினார். யோகர் சுவாமிகளுக்கு ஆறுகால பூசை செய்து அன்னதானப் பணி நிகழ்த்தினார். சுவாமிகளின் ஆயிலிய நட்சத்திர நாளன்று மாதந்தோறும் அமுது படைத்து வந்தார். குருபூசை வழிபாடுகள், சிவ பூசைக்கான ஒழுங்குப் பணிகள் கோயிற் திருப்பணிகள் என்பனவற்றின் மூலம் ஆன்மீக சேவை நிகழ்த்தினார்.

இங்குள்ள சிறுவர், மாணவர்களுக்காக சிறுவர் பாடசாலை, நூலகங்கள் என்பவற்றை நடாத்தியதுடன் இங்குள்ள மக்களின் முன்னேற்றத்திற்காக முதலுதவி வகுப்புகள், நீதி நூல் முற்றோதல் செய்வித்தல், பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல், வாழ்க்கைப் பயிற்சி நிலையங்கள், இயல், இசை, நாடக பணிகள் என்பன பலவற்றைச் செய்தார்.

மேலும், முதியோர், பெண்களின் நலன் கருதி முதியோர் பராமரிப்பு மற்றும் கௌரவிப்பு பணிகள், கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் விதவைகளுக்கான சேவைகளையும் நடாத்தினார்.

இவ்வாறு பல சேவைகளைச் செய்து கொண்டிருந்த அன்னார் கொழும்பு சென்றபோது மேலும் பல பணிகளை மேற்கொண்டிருந்தார். அதாவது, அண்மையில் கொழும்பு கொட்டாஞ்சேனை தேசிய சேமிப்பு வங்கியின் மண்டபத்தில் கொழும்பு வாழ் புங்குடுதீவு மக்கள் அடங்கிய பொதுக்கூட்டத்தைக் கூட்டி தீவக அபிவிருத்திக்காக, வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தீவக மக்களுடன் தொடர்பு கொண்டு தீவக மண்ணை அபிவிருத்தி செய்ய வேண்டி அதற்கான பொதுச்சபையினைக் கூட்டி, சபையின் தலைவராக புங்குடுதீவு மைந்தனும், பேராசிரியரும், சட்டத்தரணியுமான திரு. வி. ரி. தமிழ்மாறனைத் தலைவராகவும், திரு. ச. இராமலிங்கத்தினை செயலாளராகவும் கொண்ட நிர்வாக சபையைத் தெரிவு செய்து பொறுப்புகளை அவர்களிடம் ஒப்படைத்தார்.

03. 10. 2001 அன்று வைத்திய பரிசோதனை மேற்கொண்டபோது வைத்தியம் பயனளிக்காமையால் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவரது இந்த இழப்பு யாராலும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். இத்தகைய ஒரு பேரறிவாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீவக மக்களுக்கு கிடைத்தற்கரிய ஒரு அருங்கொடை. இந்த அதிஷ்டத்தை தீவக மக்கள் இழந்துவிட்டனர் என்றுதான் கூறவேண்டும். எம்மாலேயே இவரது பிரிவின் துயரைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இவரது குடும்பத்தினர்க்கு எவ்வாறு ஆறுதல் கூறுவது? இருப்பினும், இவரது தாயாருக்கும் சகோதரிக்கும் சர்வோதய நிர்வாக சபை அமைப்பாளர் செல்வி ஜமுனாதேவிக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய யோகர் சுவாமிகளின் பாதாரவிந்தங்களை வேண்டி நிற்கிறேன்.

தீவக வலயம், வேலணை,
புங்குடுதீவு - 3.

**ஐ. நா. தருமலிங்கம்**
இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆன்நிரைகள் அறுகு அருந்தி அசைபோடும் நிலை போச்சே - என
தான் உருகி ஒரு திட்டம் தருகின்றான் தொண்டன்! (கோமாதா பூசை)



என் கடன் பணி செய்து கிடப்பதே - என்று திரு நின்ற ஒரு விழா -
ஒரு வார கிராம விழா நிகழ்வு (நாள் 22. 04. 2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடங்கியது தொடர வேண்டும் என்ற தொண்டனின் தூண்டுதல் -
பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 3வது ஆண்டு விழா
(நாள் 11.04. 2000)




நடமாடும் கோவில் நம்பர்த் தொண்டன் தேசிய சேமிப்பு வங்கியின் நடமாடுஞ்
சேவையை புங்குடுதீவு கிராமவிழாவில் நடாத்திக் காட்டுகின்றான்
(நாள் 21.04. 2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'மாதர் தமை ஏத்துவோம்' என்று மனிதத்தை விதைக்கின்றான்
பெருங்காடு தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆரம்பமாகின்றது
(நாள் 20.04. 2000)



பெரியோரைப் பேணல் - சொல்லைச்
செயலாக்குஞ் சுறுசுறுப்பில் - முதியோர்
கௌரவிப்பு விருந்துபசாரத்தில் (நாள் 19.04. 2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மற்றவரை அமுது செய்ய இறை கொள்ளும் பெற்ற மனப் பெருந்தொண்டன் 'திரு'வுள்ளம் லயன்ஸ் மருத்துவ பரிசோதனை முகாம் தொண்டர்களுக்கு அமுதூட்டல்

(நாள் 23.04. 2000)




சக தொண்டர் தம்புவின் ஆத்ம சாந்திக்காக
அஞ்சலித்து நிற்கும் நிறை தொண்டன்

(நாள் 09.04. 2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகத்தின் காவலனுக்கு கண்ணீர் அஞ்சலி

புங்கை மாநகர் பெற்ற புண்ணிய சீலரே!
புனிதப்பணிக் கெனப் பிறந்த புடம் போட்ட தங்கமே!
தன்மானம் காத்திட உறுப்பினராக அன்று தமிழரசில்!
தன்னலம் பேணாத தன்னிகரில்லாத் தலைவனே!
தனிவழி அமைத்துநின்று தரணி போற்றிய நாயகரே!
ஆன்மீக வழிநின்ற அறங்காவல் தொண்டரே!
ஆதரவுகரம் பற்றியவர்க்கு ஆறுதல் தந்த
அமைப்பாளரே!
அங்கத்தவராய் நாவில் ஆட்சி தந்த பெருமகனே!
அன்பால் மக்களைக் கவர்ந்த அருந்தவப் புதல்வரே!
எம் மண்ணிற்காய் கண்ட கனவுகள் எத்தனை!
ஏங்குது நெஞ்சமெலாம் எப்படிப் பிரிந்தீர்கள்?

உவர்நீர் தடுத்திட ஊருக்குள் உயர் அணை!
நன்னீர் தேங்கிட குளங்கள் புனரமைப்பு!
மக்கள் நலம் காத்திட ஊரூராக மக்கள் கடை!
மனித வாழ்வின் இறுதிக்கு புனித மயானம்!
குடிநீர் குறைதீர்க்க பவுஸர்கள் கொள்கலன்கள்!
குடியேற்றம் செய்திட புனித கேரதீவுக் கிராமம்!
கூட்டுறவை உயர்த்திட கொள்கையுள்ள திட்டங்கள்!
வடபுலத்திற்கென வளமிகு சர்வோதயம்!
ஒழுங்கைகளை வீதியாக்கிட விரிவான விஸ்தரிப்பு!
கோமாதா குறைதீர்க்க கற்பகதருவை உணவாக்கி!
குறைதீர்த்த கோமகனே காவலனே!

நயினையில் கடற் தொண்டர் படையமைப்பு!
நல்லூரின் வீதியிலே நல்லமுது படைப்பு!
பன்றித் தலைச்சி அம்மனிலும் பணியது செய்து!
பாலாவிக் கரையினிலும் பணி செய்து நின்று!
தீவகத்தைக் காத்து நின்ற தீந்தமிழ் காவலனே!
நீங்கள் செய்ததை எழுத்தில் எழுத முடியாது!
சொல்லில் வடிக்க முடியாது எம் தலைவா!
ஆன்மீகம் அரசியல் அகிம்சை!
மெய்ஞ்ஞானம் அறக்கட்டளை அன்பு உளம்!
எது இல்லை எம் தலைவனிடம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*ஏன் இந்தவிதி ஐயா எங்களுக்கு?*
*பெற்றெடுத்த பூமியை யார் காக்க வருவார்கள்!*
*பெருமகனே! உங்களுக்கு நிகர் யார் உளர்!*
*கலங்குது நெஞ்சமெலாம் காவிய நாயகனே!*
*காலத்தை வென்ற வரலாற்றுக் கோமகனே!*
*கரம்கூப்பி நின்று தந்திடுவோம் அஞ்சலியை!*

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**செல்லையா சிவசாமி**
கொழும்பு - 12 அமரரின் அன்புள்ளம் கொண்ட நண்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவப்புதல்வனை இழந்து தவிக்கிறோம்!

மறைந்தும் மறையாத எம் மாமனிதர் திருநாவினை தமிழ் அரசுக் கட்சியின் மேடைகளில் அரசியலறிவை, ஆளுமையை, இன்பத் தமிழில் ஒப்பற்ற சொல்லாற்றலை, சிந்தனைச் சிறப்பை வீரமுழக்கமிட்ட காலத்தில் - என் மனதில் ஒரு மங்கிய நிலையில் தெரிந்தாலும் அவரை முழுமையாக அறிந்த காலங்கள் கேரதீவு மண்ணில் அவர் கால் பதிந்த காலங்களே. கேரதீவு காடுகளினால் நாங்கள் முன்பு செல்வதென்பது பெரும் அச்சமாக இருக்கும். அதனைத் திருத்தி அந்தக் காணிகளைப் பங்கிட்டு எமது மக்களுக்கு வழங்கி அவர்களின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்ததுடன் விவசாயத்தையும் ஊக்குவித்தார். வெளிநாட்டிலிருந்து வருபவர்களும் வியக்கும் வண்ணம் கேரதீவை அழகுபடுத்தி மரங்களை நாட்டி செழுமைப்படுத்தி வைத்திருந்தார்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு புகலிடம் அளித்தது புங்குடுதீவில் உள்ள கேரதீவு என்றால் அது வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கி மகிழ்ச்சிகரமான ஓர் சூழ்நிலையில் வைத்திருந்த பெருமை அவரையே சாரும். இவை மட்டுமல்ல எமது பிரதேசத்தின் வீதிகளை விஸ்தீரணம் செய்தும் சுத்தம் செய்தும் கிணறுகள், குளங்களை செப்பனிட்டும் கல்வி கலாசார பண்பாட்டுக்கு புத்துயிர் ஊட்டியும் தமது வாழ்நாளை அர்ப் பணித்தார். இவரது சேவை எமது பிரதேசத்தில் மட்டுமல்ல நாடு முழுவதும் பரந்து பட்டதாக இருந்து வருகின்றது.

மற்றத் தலைவர்களுக்கு இல்லாத தனிச் சிறப்பு இதுதான்; ஒரு திட்டத்தை வரைந்தால் அதனைச் செய்து முடிக்கும் செயல்வீரன் மட்டுமல்ல; திட்டத்தை தீட்டியபின் தொண்டனாக மாறிவிடுகின்றார். தான் முன்னின்று செயற்படுத்திக் காட்டுகின்ற தன்மை தனித்துவமானது. இப்படிப்பட்ட ஒரு செயல் வீரனை, தொண்டனைப் பெற்ற எம் மண்மாதா அவரின் கடின உழைப்பைக் கண்டு சகிக்கமுடியாமலோ என்னவோ தன் இருப்பிடத்தை விட்டு சில காலம் அவரை அனுப்பி வைத்தார். அந்த நிகழ்வு நடைபெறாதிருந்தால் அரசாங்கம் சாதிக்க முடியாததை ஒரு தனி மனிதராக நின்று சாதித்திருப்பார். இவர் - நாம் இடம் பெயர்ந்த காலத்திலும் இவரின் சேவையினை யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சி யிலும் காணக்கூடியதாக இருந்தது. பின் மீண்டும் எமது பிரதேசத்திற்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் "தியாகதீபம் திருநா" என்ற திருவுருவம் திரும்பி எம் மண்ணிற்கு வந்தார். எழில்மிக்க, புகழ்மிக்க, புங்குடுதீவின் பழைய நிலையினை எண்ணியெண்ணி மனம் நொந்தார். எமது பிரதேசம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை அண்ணரைச் சேரும். எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்காக ஊண் உறக்கமின்றி முழுநேரமும் உழைத்தார். சமுதாய விழிப்புணர்ச்சிக்காகத் தான் சார்ந்த சர்வோதயம் மூலம் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தன் சமுதாயத்திற்காக ஒருவன் உயிர்விட ஆயத்தம் எனில், அந்த சமுதாயம் வாழும்" என்ற மகாத்மா காந்தியின் கூற்றுக்கு இலக்கணமாகச் செயற் பட்டார். அண்ணர் திருநாவின் வாழ்வைத் தனியே ஆராய்ந்தால் பெருங் காவியமே எழுதலாம். அவர் ஒரு தனிப்பெருந்தலைவன்; தோற்றத்தில் அகல் விளக்கு; தொண்டிலே மெழுகுவர்த்தி; ஆற்றலிலே மின்கணினி; அன்பிலும் பண்பிலும் வழிநடத்தலிலும் கலங்கரை விளக்காக, தியாகம் நிறைந்த பணி யினால், புகழ்பூத்த செயல் வீரனாகத் திகழ்ந்தார். அந்தத் தலைவரின் பிரிவு எத்தகைய துயர் நிறைந்தது என்பது அவரது இறுதி நிகழ்வில் மக்கள் சிந்திய கண்ணீரில் பிரதிபலித்தது. ஆம்! ஆறாத்துயரில் எம்மையெல்லாம் ஆழ்த்தி விட்டுச் சென்ற அவரின் பணியினைத் தொடர்வதன்மூலம் அவரின் ஆத்ம சாந்திக்கு வழி அமைப்போம்.

**ந. தனபாலசிங்கம்**
கிராம உத்தியோகத்தர்

புங்குடுதீவு வடக்கு J/27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது மண்ணின் சேவையாளர்

அமரர் திருநாவுக்கரசு அவர்கள் தனது சிறுவயதில் இருந்தே மக்கள் சேவையே மகேசன் சேவை என்று வாழ்ந்து எமது மண்ணை நேசித்து, போரினாலும் இடப்பெயர்வாலும் சின்னாபின்னப்பட்டு பொலிவிழந்து காட்சி அளிக்கின்ற எமது கிராமத்தையும், அங்கு வாழ்கின்ற மக்களையும் நேசித்து வந்தவர். ஊரின் அபிவிருத்தி பற்றி ஆராயும் நோக்கில் தனது சுகயீனத்தையும் பாராமல் கொழும்பு சென்று, அங்குள்ள ஊர் அபிமானிகளை ஒன்று திரட்டி, ஆலோசனைக்கூட்டம் நடாத்தி அவர்களின் ஒத்துழைப்புடன் பல திட்டங்களை வரைந்து அவற்றை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என ஆலோசனை செய்து கொண்டிருக்கும் வேளை திடீரென எவரும் எதிர்பாராதவேளை அவருடைய உயிர் உடலை விட்டுப் பிரிந்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் திருவுடைய இழப்பு எமது கிராமத்துக்கும், ஏன் யாழ் குடாநாட்டுக்குமே ஈடுசெய்ய முடியாததது ஆகும். அன்னார் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர வேண்டும் எனக்கேட்டுக் கொள்வதோடு, அவருடைய மறைவால் பெரிதும் துயருறும் எமது கிராம மக்களுக்கும் அன்னாரின் குடும்பத்துக்கும் இறைவன் தோன்றாத் துணையாக நின்று வேண்டுவனவெல்லாம் செய்யவேண்டும் என இறைஞ்சி அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

"ஓம் சாந்தி!"

**கா. நித்தியானந்தன்**
செயலாளர்,
யாழ். வணிகர் கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாவரசர் நடந்த வழி.....!

நேற்றுப் போலவே இருக்கிறது. எம் மனதிலும், விழிகளிலும் ஏன் செவி களிலும் கூட அவரது அன்பும் அரவணைப்பும் நிறைந்த செயற்பாடுகளூடே எம்மை அழைத்து தீவகத்தின் பொருளாதாரம், சமூக விழுமியங்களின் பற்றிய ஆய்வு ஒன்றினைப் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தமை. நாட்டில் யுத்த மேகப் பொழிவுகளின் பன்முகப்பட்ட - இருள் நிறைந்த காலகட்டமான 1989ம் ஆண்டிலே அவரது வடபுல சர்வோதய தலைமையகமான புங்குடுதீவு அலுவலகத்திலே ஐந்து நாட்கள் தங்கியிருந்து பொருளாதார நடவடிக்கைகளின் தன்மைகள், பிரதேச மக்களின் சமூக நல நடவடிக்கைகளின் தன்மைகள், பிரதேச மக்கள் சமூக நல நடவடிக்கைகளில் கொண்டுள்ள ஈடுபாடு, மக்களுக்காக சமூகநல நோக்குடையவர்கள் கருமமாற்றும் விதம் என்பவற்றோடு அவரது சமய, சமூக, கலாசார நடவடிக்கை களையும் நேரில் கண்ணுற்றோம்.

புங்குடுதீவில் மிகப் பின்தங்கிய வரண்ட பகுதியான கேரதீவுப் பகுதியை செழிப்புறும் சோலை ஆக்கி மக்களைக் குடியமர்த்தியதோடு பௌர்ணமி விழாக்களையும் நடத்தி வந்தார்.

சர்வோதய நூலகத்திலிருந்து ஐக்கிய தீப நூலகத்திற்கு புத்தகப் பரிமாற்றங் களைச் செய்யவும் நூலகப் பயிற்சியை அளிக்கவும் உதவியவர். தமது பரந்துபட்ட சேவையின் அங்கமாக நிதியச் செயற்பாடுகளை எமது தீவிலும் ஆரம்பித்து செயற்படுத்தியவர். ஐக்கிய தீபத்தோடு சுமார் 15 வருடங்களுக்கு முன்னே தொடர்பு கொண்டிருந்த திரு. கந்தையா திருநாவுக்கரசு (J.P) அவர்கள் தனது நாவினால் உதிர்க்கின்ற வார்த்தைகளை செயலாக முடித்து வைத்தவர். பல்வேறு இன்னல்களுக்குள்ளாகித் தவித்த மக்களுக்கு அபயக்கரம் நீட்டி ஆதரித்த அட்சய பாத்திரம், தியாகச் செம்மல். அவர் நடந்த வழியில் பல இன்னல்களை, இடர்களைச் சந்தித்து தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம், சிங்கள மக்களுக்கும் பணியாற்றியதை வரலாறு என்றும் எடுத்துச் சொல்லும் என்பது உறுதி.

"துயிலாத பொழுதுகளில் சுகங்களை வழங்கு இன்றேல் துயின்று விடு" என்பதற்கிணங்க தன் வாழ்நாளில் சுகங்களையே வழங்கி நோயுற்ற மாத்திரத்தே துயின்றுவிட்ட உத்தமனின் பாதம் பணிந்து அஞ்சலிக்கின்றோம்!

ஐக்கிய தீபம்,
நெடுந்தீவு.

**செயற்குழு,**
பொதுச்சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த சமூக சேவையாளன்

கடந்த 3.10.2001 ஆம் திகதி கொழும்பில் இறைபதம் அடைந்த உயர்திரு கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் சர்வோதயத் தலைவர் திரு ஆரியரத்னா அவர்களுடன் இணைந்து புங்குடுதீவில் சர்வோதய நிலையத்தை உருவாக்கிப் பின்னர் வடக்கிற்கான தனி நிறுவனமாக அமைத்துப் பல்வேறுபட்ட அபிவிருத்திகளையும் சிரமதானப்பணி மற்றும் மகளிருக்கான சேமிப்புக்கள் போன்றவற்றையும் நடைமுறைப்படுத்தி மக்களுக்கு உதவியவர்.

இவருடன் நான் 1971ம் ஆண்டு தொடக்கம் பழகுகின்ற வாய்ப்புக் கிடைத்தது. பல இடங்களுக்கு விடுமுறை நாட்களில் சிரமதானப் பணிக்குச் சென்றுள்ளேன். இவரால் நடாத்தப்பட்டு வந்த "தீவகம்" என்னும் பத்திரிகைக்கு தமிழ் திருத்துநராகவும் கணக்கு எழுதுநராகவும் கடமையாற்றியுள்ளேன்.

மேலும், இவர் நான் புங்குடுதீவு பல.நோ.கூ.சங்கத்தில் கடமையாற்றிய காலத்தில் தலைவராகவும் பொறுப்பேற்றுச் செயற்பட்ட செயல்வீரன். யோகர் சுவாமியின் பக்தர், இறை பக்தியுள்ளவர்.

அண்மையில் புங்குடுதீவில் மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வை நடாத்தி முத்திரை பதித்துக் கொண்டவர். இடப்பெயர்வினால் அல்லோல கல்லோலப் பட்டுக் கிடந்த வீடுகள், பாதைகளைச் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்து மிளிரச் செய்தவர்.

இவரது இழப்பு சர்வோதயத்துக்கு மட்டுமன்றி தீவகத்துக்கே இழப்பாகும். இவரது மறைவினால் துயருற்று இருக்கும் தாய், சகோதரி மற்றும் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் ஆறுதலடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி!

**க. கோபாலபிள்ளை**
கணக்காளர் / பதில் முகாமையாளர்

நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவையின் சிகரம் சாயலாமோ?

புங்குடுதீவு மண் பல வழிகளிலும் புனிதம் நிறைந்தது. காலாதி காலமாகப் பல புனிதர்களைப் பிரசவித்திருக்கிறது. அந்த வரிசையில் எம் கண்களுக் குள்ளாக நின்று காரியங்கள் புரிந்தவர்களில் அமரர் க. திருநாவுக்கரசு (J.P) அவர்களை மறந்துவிட முடியாது. பல்வேறுபட்ட ஆயுதக் கலாசாரத்திற்குள்ளும் அரசியல் அழுத்தங்களுக்குள்ளும் அமுங்கிப் போய்விடாது, அடங்கிப் போய் விடாது, தனது இலட்சியப் பயணத்தை சரியான வழியிலே நடத்திக் காட்டியவர். 'கதி' என்பது அவரது பெயரின் சுருக்கம். ஆனாலும், திக்கற்ற, உதவி தேடிய மக்களுக்குஅவரே "கதி" என்றிருந்த காலங்கள் அதிகம்.

சேவையின் சிகரமாய், அவர் விளங்கியமையும் என்றும் சிரித்த முகமும் சடாமுடியும் துணிகரச் செயற்பாடுகளும் அவரை மக்களோடு பிணைத்திருக் கின்றது. அவர் மரணித்து விடவில்லை. எம் ஒவ்வொருவரோடும் இணைந்திருக் கிறார். ஆயினும், அவரது பாதங்களைக் காணாது ஏங்கும் பாச உறவுகள் யாவர்க்கும் நேசத்திற்குரிய நெடுந்தீவு மக்கள் சார்பாகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் சார்பாகவும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கே. மோகன்,**
பொறுப்பாளர்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி,
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகத்தின் கோபுரக் கலசம் அமரர் திரு!

அலைகடல் சூழ் நடுவினிலே அழகான கிராமமாய் திகழும் புங்குடுதீவின் 12 வட்டாரங்களில் 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் உயர்திரு கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் எமது அன்பிற்கும் பாசத்துக்கும் உரிய பெருந் தலைவர். அன்னார் எமது இறுப்பிட்டி சனசமூக நிலையத்தின் ஆலோசகரும், ஆயுள்கால அங்கத்தவருமாவார். கடந்த 03. 10. 2001 அன்று எமது தீவக மண் ணிற்கு ஏற்பட்ட துயரத்தையும் துன்பங்களையும் நினைக்கும்போது நாம் அதிஷ்டமில்லாதவர்களா? என எண்ணத் தோன்றுகிறது. ஏனென்றால், எமது தீவக உப்புக் காற்றிலும் மண்ணிலும் அளவுகடந்த காதல் கொண்ட அமரர் பிறப்பில் இருந்து மறைவு வரை சொந்த மண்ணிலே வாழ்ந்து எமையெல்லாம் ஆறாத துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறையடி எய்திவிட்டார். "பிறப்புண்டேல் இறப்புண்டு" இது யதார்த்தம். ஆனால், ஒவ்வொரு இறப்புக்கும் ஈடு செய்ய யாரோ ஒருவர் தோன்றுவார். ஆனால், அமரரின் இறப்பை யார் ஈடு செய்வார்கள்? இக்கேள்விக்கு விடை காண முடியாத நிலையில் தீவக மக்கள் அநாதைகள் ஆகிவிட்டது போன்ற சித்தப் பிரமையால் துவண்டு போய் நிற்கின்றோம்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" இவ் வாக்கியத்தைப் பல புத்தகங்களில் படித்ததுண்டு. ஆனால், நேரில் பார்த்தது என்றால் அன்னாரின் பணிமனையில் தான். அமரர் திருநாவுக்கரசு அவர்களை நாம் எமது பெருந்தலைவர் என்று எண்ணித்தான் இதுவரையும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எம் தலைவரிடம் நாம் கண்ட செயற்பாடுகள், ஆன்மீக வடிவம், அன்பு வடிவம், அகிம்சை வடிவம், அரசியல் வடிவம், இலக்கிய வடிவம், எழுத்தாளர் வடிவம், சிறந்த பேச்சாளர் வடிவம், வீரவடிவம் இப்படி எல்லாவிதமான வடிவங்களிலும் கண்டோம். எமது கிராமம் சம்பந்தமாகப் பாரிய திட்டங்களை செயல் வடிவம் பெற வைப்பதற்காக வெளிநாடுகள், உள் நாடுகள் என இவர் அலைந்து திரிந்து எம் மண்ணை வளமாக்கி விடவேண்டுமென எத்தனை கனவுகளைக் கண்டார். ஆனால், காலத்தின் கோலம் வழிவிடவில்லை.

அரசியல் மாற்றம் எம்மை அலைய வைத்துவிட்டது. இதன் உளத்தாக்கம் தான் அன்னாரின் நோய்க்குக் காரணமாக அமைந்து விட்டது என்பது திண்ணம். அன்னார் எம் மக்களுக்காகச் செய்த செயற்பாட்டை எழுத்தில் எழுதுவதானால் இம்மலர் போதாது. 1000 பக்கங்களை கொண்ட பாரிய புத்தகம்தான் வேண்டும்.

எமது பெருந் தலைவர் அன்றைய அரசியலில் முத்திரை பதித்தவர். தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவராகவும் சிறந்த அரசியல் பேச்சா ளராகவும் திகழ்ந்தார். உயர்திரு கா. பொ. இரத்தினம் அவர்கள் ஊர்காவற்றுறைத் தொகுதியில் வேட்பாளராக நின்ற நேரம் இவரது பெயரும் அத்தொகுதியின் வேட்பாளர் பட்டியலில் இருந்தது. மூத்த உறுப்பினருக்கு இடம் கொடுத்து அடுத்த தேர்தலில் எமது தலைவர் பாராளுமன்றத்துக்கு செல்வார் என்று நாம் கனவு கண்டிருந்தோம். இந்நேரத்தில்தான் அரசியலுக்குத் துறவறம் கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எவ்வகையானால் என்ன, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என எண்ணியதன் விளைவாக உருவானதுதான் வட இலங்கை சர்வோதயம். இதன் ஸ்தாபகரும் அமைப்பாளருமான எமது தலைவர் வேள்வித் தீயாகி விட்டார்.

வீதிகள் புனரமைப்பு, குளங்களை ஆழமாக்கல், நன்னீர்த் திட்டம், கோமாதா பசி தீர்த்தல், அறக்கொடை வழங்கல், அன்னதானம் கொடுத்தல், நோயாளர் சிகிச்சை, குடிநீர் விநியோகம், மாதிரிக் கிராமம் அமைத்தல், மக்கள் கடை அமைத்தல், யாத்திரிகர் பணிவிடை செய்தல், நூல் நிலையம் அமைத்தல், காடு வளர்த்தல், சேமிப்பு முதலீட்டுத் திட்டம், இலக்கிய விழாக்கள் நடாத்துதல், பெரியோரைப் பேணுதல், முதியோரைக் கௌரவித்தல், விவசாய விரிவாக்கல், தொண்டர் படை அமைத்தல், ஆத்திசூடியை அழியவிடாது காத்தல், திருக்குறள் வழி நடாத்துதல், தியான சிந்தனையை வளர்த்தல் இப்படிப் பலதரப்பட்ட செயற் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டார். இவரது வெற்றிப் பாதையில் இன்று:

**குடியேற்றம்** : கேரதீவு சர்வோதய எழுச்சிக் கிராமம் வளர்ந்து நிற்கின்றது. இது இவரது ஆற்றலை வெளிப் படுத்தி நிற்கிறது.

**நன்னீர்த்திட்டம்** : எமது தீவக கிராமங்களை நன்னீர்த் திட்டத்தின் கீழ் உருவாக்க கள்ளியாறு கடல்நீர் ஏரியை வட கடலோடு உள்ள அதனது தொடர்பைத் துண்டித்து அணை, பாலம் அமைத்து நன்னீர் திட்டத்திற்கு ஆரம்ப வித்திடப்பட்டது.

**விவசாய விஸ்தரிப்பு** : பல குளங்கள் ஆழமாக்கப்பட்டு தரிசு நிலங்கள் விவசாயக் காணியாக மாற்றமடைய வைத்த மைக்கு கடைசியாக மறைவின் போதுங்கூட அடைக்காத்த குளம் சான்று பகர்ந்து நிற்கிறது.

**கோமாதா பசிதீர்த்தல்** : இத்திட்டப்படி வரண்ட காலப்பகுதியில் நாளாந் தம் 20 பனை வீதம் பனை ஓலைகளை வெட்டி பசுக்களுக்கு உணவாக்கி அவை உண்ணும் போது கண்குளிரப் பார்த்து மகிழ்ந்தது இறுதி வரை நடைபெற்ற ஒரு திட்டமாகும்.

**நூல் நிலையம் அமைத்தல்** : வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணம் அடை கின்றான். இதில் வெற்றி கண்ட எமது தலைவர் எதிர்கால சந்ததிக்கென ஆகக் குறைந்தது இருபத்தையாயிரம் புத்தகங்களை யாவது சேர்த்து அறிவாலயம் அமைக்க இறுதி வரை அரும்பாடுபட்டு அயராது உழைத்தவர்.

எமது தலைவர் ஆன்மீக வழி நின்று சுவாமி 'யோகர்' அவர்களின் ஆசீர்வாதம் பெற்று அறவழி நின்று அறக்கொடை புரிந்து திருவடிநிலை அமைத்து முற்றோதல் புரிந்து இறை வழிபாட்டை வெளிப்படுத்திய ஓர் ஆன்மீகவாதியாவார். தானங்களிலே சிறந்த தானம் அன்னதானம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எண்ணியவர் நல்லைக் கந்தனின் வீதியிலே சுவாமியின் நற் கருணையால் சிறந்த அன்னதானத்தை நடாத்தி எமது கிராமத்தின் பெயரைப் புகழடைய வைத்தவர். சுகபோக வாழ்வுகள் இவரது வாசற்படி வரை பல தடவைகள் உள் நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வந்தபோதெல்லாம் அதைத் தூக்கி எறிந்துவிட்டு ஏழைகளின் தோழனாக எளிமையின் சின்னமாக எம் மத்தியிலே எம் மண்மீது இறுதிவரை வாழ்ந்து தனக்கென ஒரு சகாப்தத்தையே உருவாக்கி விட்டார். அன்னார் எம் மக்கள் மீது மட்டுமல்லாது குடாநாடு முழுவதும் தனது சேவையை விஸ்தரித்து வெற்றி கண்டார். இவர் விட்டுச் சென்ற பணி மலை போல் காட்சி தருகிறது. அதில் நாம் ஒரு சிறு தொகுதியையேனும் செய்து முடித்து வைப்பதே. நாம் எம் தலைவருக்குச் செய்யும் இறுதி மரியாதையாக அமைந்திட முடியும்! அதற்கான ஆசீர்வாதத்தை அவரது ஆன்மா ஒளி வடிவாய் நின்று வழிகாட்டியாய் வழங்கிக் கொண்டேயிருக்கும். தீவகத்தின் கோபுரக் கலசம் என்றும் ஒளி வீசட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கு. சந்திரா**
கிராம அலுவலர்

இறுப்பிட்டி சனசமூக நிலையம்,
4ம் வட்டாரம், புங்குடுதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'திரு' பற்றிய சில நினைவலைகள்

மக்களுக்கும் தனது கிராமத்துக்கும் நாட்டுக்கும் மொழிக்கும், சமயத்துக்கும் சேவை செய்வதே மகேசன் சேவையாகும் என்ற பரிபூரணமான, உறுதியான, மன நம்பிக்கையுடன் தமது வாழ்நாளில் சேவை செய்தவர் அமரர் க. திருநாவுக் கரசு.

வட மாநில சர்வோதயத்தை அமைத்து அதன்மூலம் அரிய பல சேவை களைச் செய்தவர் அவர் என்பதை யாவரும் நன்கு அறிவர்.

தமது கிராமமான புங்குடுதீவில் யாவரும் போற்றத்தக்க வகையில் சிறந்த கட்டடம் அமைத்து, இப்பகுதி மக்கள் சர்வோதயம் மூலம் பயனடைய வழிவகுத்து உதவியவர்.

மக்கள் படும் சிரமங்களுக்கு உரியவகையில் தீர்வு கண்டு, நன்கு மகிழ்வுடன் அவர்கள் வாழ வேண்டும் என்ற உன்னதமான எண்ணத்துடன் ஒப்பற்ற சேவை யாற்றியவர் எமது அமரர் திருநாவுக்கரசு அவர்கள்.

அவரது மறைவு மிகவும் வருந்தத்தக்கதொன்றே. அன்னாரது செயல் திட்டங்கள், இவ்வமைப்பின்மூலம் மேன்மேலும் வளர்ந்து, மக்களுக்குப் பயனளிக்கும் என்பது திண்ணம்.

அன்னாரது ஆத்மசாந்தி வேண்டிப் பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பே இறைவன்!

**மு. க. திருலோகநாதன்**
ஸ்ரீசக்தி வர்த்தக நிலையம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த சமூக சேவைப் பெருந் தொண்டர்

வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும், பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமாகிய அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களை எனது சிறு வயதிலிருந்தே நன்கு தெரிந்த வகையில் அவரின் சிறந்த சிரமதானப் பணிகள் சமூகசேவைப் பணிகள் என்பனவற்றை நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன்.

1991ம் ஆண்டு புங்குடுதீவு மண்ணில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த பொழுது அவர் வன்னிக்குச் சென்று சிறந்த சமூகசேவைப் பணிகளைச் செய்தார். மீண்டும் புங்குடுதீவு மண்ணிற்கு வருகை தந்து பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தைப் புனரமைத்து அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு கிராம வளர்ச்சிக்குப் பெரும் பாடுபட்டு கிராமச் சிரமதானங்கள், கல்வி வளர்ச்சி, ஏனைய சங்க புனரமைப்புக்கள், சமூக சேவைகள் போன்ற வற்றிற்கு தன்னையே முழுமையாக அர்ப்பணித்துப் பெரும் பாடுபட்டார்.

11.04.2001ல் கிராம அபிவிருத்திச் சங்க மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவை கிராம வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டே கொண்டாடினார். அதன்போது கிராம சிரமதானம், கிராமப் பெரியார் பாத பூசை, கிராம முதியோர் விருது, தேசிய சேமிப்பு வங்கிச் சேவை, ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்புச் சேவை, அரச திணைக்களங்கள் மாநாடு, தீவக லயன்ஸ் வைத்திய முகாம் போன்ற நிகழ்வு களை உள்ளடக்கி இரு வார நிகழ்வுகளைச் செய்து மேலும் கிராம அபிவிருத்திக் கான திட்டங்கள் பலவற்றைத் தொகுத்து அரச திணைக்கள மாநாட்டின்போது உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பித்தார்.

13.01.2001ல் இருந்து ஐந்து நாள் நிகழ்வாக ஆத்திசூடி முற்றோதல் விழா நடத்தி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டினார். ஒரு நிர்வாகம் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதனை அவரிடமிருந்தே கற்க வேண்டும். தலைமை வகிப்பதிலும் திட்டங்களை அமைத்து செயற்படுத்துவதிலும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளைப் பேணுவதிலும் அவருக்கு நிகர் எவருமில்லை என்றுதான் கூறமுடியும். கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு புதிய கட்டிடம் அமைப்பதற்குத் தேவையான காணி ஒன்றை ஒழுங்கு செய்து நன்கொடை யாகப் பெற்று, கட்டிடம் அமைவதற்கு பெரும் பாடுபட்டிருந்தார். அரசாங்க நிதியையும் கோரி, இரண்டு இலட்சம் ரூபாய் பெறும் தறுவாயில் அவரின் திடீர் மறைவு நமக்குப் பெரும் அதிர்ச்சியையும் மன வேதனையையும் தருகிறது.

அவரின் இறுதி மூச்சிலும்கூட சேவையை நோக்கமாகக் கொண்டுதான் செயற்பட்டுள்ளார் என்று அறிந்தோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய யோகர் சுவாமிகளின் பாதார விந்தங்களை வேண்டுகின்றேன்!

**பூ. ஸ்ரீகாந்தன்**

பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்,
புங்குடுதீவு - 03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புங்குடுதீவு மண்ணின் அருந்தவப் புதல்வா!

அன்புக்குரிய திருநாவுக்கரசு அவர்களுடன் 1962ம் ஆண்டு முதல் அவர் இறையடி சேரும்வரை மிக நெருங்கிய உறவுடன் பழகி வந்தேன். அவருடன் இணைந்து அரசியல் வாழ்வில் பல போராட்டங்களை நடாத்தியதுடன் புங்குடுதீவு மண்ணில் மட்டுமல்லாது பல பிரதேசங்களிலும் சிரமதானப் பணி களையும் பல அபிவிருத்தித் திட்டங்களையும் அவரது சொந்த முயற்சியால் செய்து வந்தோம். 2000ம் ஆண்டு பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனம் அமைக்கப்பட்டபோது அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் தலைவராக இருந்து புங்குடுதீவு விவசாயத்தினை வளர்ச்சியுறச் செய்தார். அத்தோடு விவசாயப் போதனாசிரியரின் ஒத்துழைப்புடன் புங்குடுதீவு வாழ் விவசாயப் பெருமக்களுக்கு விவசாயப் பயிற்சிகளையும் பெற்றுக் கொடுத்தார்.

அத்தோடு கால்நடைகளுக்கான தடுப்பூசி, பழ மரங்கள், தென்னை மரங் களுக்கான கிருமிநாசினிகளையும் அத்திணைக்களங்களிடம் இருந்து பெற்று அவற்றைத் தாமே விசிறி அம்மரங்களை நோயினின்றும் தடுத்த பெருமையும் அவரையே சாரும். இப்படியாக எம் மண்ணுக்கு அரிய பல தொண்டுகளை ஆற்றியதோடு தனது இறுதி மூச்சுவரை போராடினார். இதற்கு எடுத்துக்காட்டாக, அவரது வாழ்நாளின் இறுதிக் காலத்தில் கூட அடைக்காத்த குளம் புனரமைப்பு வேலைகளை நடத்தி முடித்ததோடு, கொழும்பில் மேலதிகாரி களைச் சந்தித்து புங்குடுதீவின் இன்றைய நிலை பற்றியும், அபிவிருத்திகள் பற்றியும் ஓர் மகாநாடு நடத்தினார். இவ்வாறு அவர் பணி தொடர்கையில் 3.10.2001 அவர்தம் சுகயீனம் காரணமாக இறைவனடி சேர்ந்தார். இவரது இழப்பு எமது மண்ணிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். இன்று புங்குடுதீவு மண் தனது அருந்தவப் புதல்வனை இழந்து தவிக்கின்றது! அவரது பணியினை நாமும் தொடர்வோமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நா. கருணானந்தசிவம்**
செயலாளர்,
பெருங்காடு தெற்கு,
விவசாய சம்மேளனம், புங்குடுதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘வரலாற்றில் ஒரு வைர ஏடு’

பிறந்தவரெல்லாம் இறப்பது உண்மையே என்றாலும் ஒரு சிலரின் இறப்பைத் தான் உலகம் தாங்காமல் அழுவதுண்டு. தாளாது தவிப்பதுண்டு. அந்தவகையில் எம் தமிழர் சமுதாயம் என்றுமே மறக்காத ஒரு நாமம் அமரர் கந்தையா திருநாவுக்கரசினுடையது.

கல்வி, அரசியல், பொருளாதாரம், சமூக நலன் என்பவற்றில் தனது தடம் பதித்தவர் அமரர் ஆவார். தன் சொந்த வாழ்க்கை நலன்களைத் துறந்து, குடும்ப பந்தபாசங்களைத் தாண்டி சமூகத்துக்காகத் தன்னை அர்ப்பணித்தார் திரு. மனிதநேய உணர்வு மட்டுமே அவரது சொத்தாக இருந்தது. இறக்கும்வரை அது அவரை விட்டுக் கழன்றிடவில்லை.

தான் பிறந்த மண்ணை முன்னிறுத்தி அதற்கப்பால் பிறர் துயர்துடைக்கும் பெற்றியால் வட இலங்கை முழுவதுக்குமென ஓங்கி உயர்ந்தது அவரது உன்னதத் தொண்டு.

“என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை”

என்ற வள்ளுவன் வாக்கிற்கு ஒப்ப பிரதிபலன் எதுவுமே எதிர்பாராமல் உழைத்த உண்மைத் தொண்டின் சொந்தக்காரனாக வாழ்ந்த ‘திரு’ எம்முன்னோர் எமக்களித்த அருங்கொடைகளாம் தான, தர்மம், இரக்கம், ஈகை, அன்பு, கல்வி, சான்றாமை என்பவற்றைச் சிரமேற்றி வாழ்ந்ததுடன் வருங்காலச் செல்வங்களாம் சிறார்களும் தேர்ந்திட, ஓர்ந்திட உழைத்தார்.

‘திரு’வின் மனவைராக்கியம் பிரசித்தமானது. ‘மலையே சரிந்தாலும் தலையே சும’ என்று தோள்கொடுக்கும் துணிவாளன் திரு. அத்துணிவின் துணையுடன் அவன் சாதித்தவை பலப்பல.

“நாற்றிசையும் புகழ்பூக்கும் நற்றீவாம் புங்குடுதீவில்
ஊற்றுநீராய் சுனைநிரப்பும் உத்தமராம் திருநாவுக்கரசு
ஆற்றிய சேவைகளை ஆர்மறப்பார் அவனியிலே
போற்றுகின்றோம் இறையடியை அப்புண்ணியனின் ஆத்மா
நேர்த்தியுடன் நிலைபெறவே நினைந்து.”

**தம்பிராசா குழந்தைவேல்**
எஸ். எஸ். ஆர். அன் கோ
அம்பிகை களஞ்சியம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகத்தில் ஒரு சேவையாளன்

புங்குடுதீவு யாழ் குடாநாட்டோடு ஒட்டிக் கொண்டிருக்கும் சிறிய தீவாயினும் அது பல சாதனையாளர்களையும் கல்விமான்களையும் சமூக சேவையாளர் களையும் தமிழ்கூறு நல்லுலகிற்குத் தருவதற்குத் தவறியதில்லை. அவ்வாறு புங்குடுதீவு பெற்றளித்த சேவையாளர்களில் ஒருவராகவே தொண்டர் க. திருநாவுக்கரசு அவர்களும் நிற்கிறார் என்றால் அது மிகைப்பட்ட கூற்றாகாது.

இவர் பல்திறன் வாய்ந்த சேவையாளராக நம்முன் நிற்கிறார். இவர் இளைஞ ராக இருந்த காலத்தில் அன்று அரசியலில் மிகுந்த அக்கறை கொண்டவராக இருந்தார். அக்காலத்தில் தமிழரசுக் கட்சியின் இளைஞர் பிரிவுக்குத் தலைமை தாங்கி தன் செயற்றிறனை அதிலும் பதிய வைத்தார்.

பின்னர் சமூகசேவையில் ஈடுபட்டார். இக்காலத்தில் தென்னிலங்கையில் பிரபல்யம் பெற்றிருந்த சர்வோதய அமைப்போடு தன்னை இணைத்துக்கொண்டு ஒரு சமூக சேவையாளனாகத் தன்னை மக்கள்முன் நிறுத்தினார். இன்னும் இக்காலத்தில் 'தீவகம்' என்ற மாதப்பத்திரிகையை நடத்தி அதில் தனது கொள்கைகளை பிரகடனப்படுத்தியதோடு ஓர் பத்திரிகையாளனாகவும் தன்னை வெளிப்படுத்தினார்.

இவற்றின் மத்தியில் 'சிவதொண்டனோடு' தொடர்புகொண்டு யோகர் சுவாமி அவர்களின் ஆத்மீகப் பணிக்குள் தன்னையும் இணைத்துக் கொண்டார். இவ்வாறு ஒவ்வொரு தளத்திலும் தன்செயல் வேகத்தை வெளிப்படுத்திய அமரர் திருநாவுக்கரசு முழுக்க முழுக்க ஒரு பொதுநலத் தொண்டனாகக் கடைசிவரை இருந்தார். இறக்கும் தறுவாயிலும் அத்தகைய ஒரு பொதுநலச் சேவைக்கு உரியதான கொழும்பு - புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகத்தை அவர் உருவாக்கிவிட்டுச் சென்றது அவர் இவ்விஷயங்களில் எத்தகைய அர்ப்பணிப் போடு இயங்கினார் என்பதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

வாழ்க அவரது நாமம்!
வெல்க அவர் விட்டுச்சென்ற பணிகள்!

**சி. முருகானந்தவேல்**
பொருளாளர்

கொழும்பு - புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டுக்கு ஒரு தொண்டர் திரு அண்ணர்

புங்குடுதீவு மண்ணில் சங்கமமாகிவிட்ட அமரர் திரு. கந்தையா திருநாவுக் கரசு அண்ணர் அவர்கள் புங்குடுதீவு மண்பற்று உள்ளவர். புங்குடுதீவு மக்களின் நன்மதிப்பையும் பெற்றவர். தான் பிறந்த மண்ணுக்காகப் பலவழிகளிலும் தொண்டாற்றியவர். தனக்காக வாழாது மக்களுக்காகவே வாழ்ந்தவர். புங்குடுதீவின் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தி கஷ்டப்பட்ட அம் மக்களின் பலகுறைகளைத் தீர்த்து வைத்தவர். தனக்குச் சரி என்று பட்டதைத் துணிந்து கூறியவர். பல இடையூறுகளுக்கு மத்தியில் தனது தொண்டினைத் தொடர்ந்து கொண்டே இருந்தவர். அவர் தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினராகவும் இளைஞர் கழகம், கிராம சபை, கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இலங்கை சர்வோதயம் இன்னும் பல பொது அமைப்புகளில் பதவி வகித்து வடமாகாண மக்களுக்குக் குறிப்பாக புங்குடுதீவு மக்களுக்குத் தொண்டாற்றியவர்.

இலங்கை சர்வோதயம் தமிழ் மக்களின் அணுகுமுறையில் நடந்து கொண்ட விதம் விரும்பாததால் அதிலிருந்து விலகி வட இலங்கை சர்வோதயம் என்னும் அமைப்பை உருவாக்கி அதன்மூலம் சேவையைத் தொடர்ந்தார்.

கடைசியாகப் புங்குடுதீவு மக்களின் அபிவிருத்திக்காக உள்நாட்டு, வெளி நாட்டு பொது ஸ்தாபனங்களின் மூலம் உதவியையும் பெறப் பலமான அமைப் பொன்று தேவையெனக் கருதி கொழும்பிலிருந்து இயங்குவதற்காகக் கொழும்பு - புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகம் என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைத்தார். அன்றுதான் அவரை நாம் கடைசியாகத் தரிசித்த நாள். அன்று அவர் நோயினால் பட்ட அவஸ்தையைப் பார்த்த மக்கள் எல்லோரும் கண் கலங்கினார்கள். அந்த அமைப்பை உருவாக்க அவர் எடுத்த முயற்சியைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. சுகவீனத்துடன் கூட்ட அழைப்பிதழ்களை எடுத்துக்கொண்டு உரியவர்களுக்குக் கொண்டு போய்க் கொடுக்கும்போது பல மாடிகளில் ஏறி இறங்க வேண்டியிருந்தது. அப்போது அவர் சில மாடி வீடுகளில் இருந்து இறங்கக்கூடக் கஷ்டப்பட்டார்.

இப்படித் தன்னுடைய உடம்பையும் கவனிக்காமல் புங்குடுதீவு மக்களுக் காகக் கடைசி வரை உழைத்தார். பல கஷ்டங்களுக்கு மத்தியில் அவரால் உருவாக்கப்பட்ட கொழும்பு - புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகம் அவர் எந்த நோக்கத்திற்காக ஆரம்பித்து வைத்தாரோ அதை நிறைவேற்றப் பாடுபட வேண்டும். அப்போதுதான் அவருடைய ஆத்மா சாந்தி அடையும். அதுதான் நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

அவரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபொழுது மக்கள் எவ்வளவு ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் துயரத்தைப் பகிர்ந்து கொண்டார்கள். அங்கு நடைபெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரங்கல் உரைகளைக் கேட்டபொழுது அவர் தன் மண்ணுக்காக எவ்வளவு உதவி செய்தார் என்பதை அறியக்கூடியதாக இருந்தது. அதேபோல் புங்குடுதீவில் அவரின் ஈமைக்கிரியைகள் நடைபெற்றபோது பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டு புங்குடுதீவு மைந்தனுக்கு தங்கள் அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

இப்படி எல்லோருடைய மதிப்பைப்பெற்ற எங்கள் தொண்டரை இழந்து தவிக்கிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், வட இலங்கை சர்வோதய தொண்டர்கள் ஆகியோருக்கு எங்கள் பெரியபுலம் சனசமூக நிலையத்தார் சார்பாகவும் புங்குடுதீவு மக்கள் சார்பாகவும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**க. தேவதாஸ்**
தலைவர்,
பெரியபுலம் சனசமூக நிலையம்,
புங்குடுதீவு - 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூகப்பணிக்கொரு தொண்டர் திருநாவுக்கரசு

மானிட வாழ்வியலுக்குள்ளே மனிதம் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. இந்த மனிதமே மனிதநேயமாக மாறி சமூக, சமுதாய அமைப்புகளின் வாழ்க்கைக் குள்ளே பங்குடைமையாக்கப்படுகின்றது. இந்தப் பங்குடமையானது ஒரு மனிதனின் கட்டாய சமூகப்பணியை உணர்த்தி நிற்கின்றது. இந்தப்பணியே சமுதாயத்தில் ஒரு மனிதனை அளக்கும் அளவுகோலாகும். இந்த அளவு கோலை மையமாக வைத்துத்தான் நம் முன்னோர்களின் நல்வழிகளான அறம், பொருள், இன்பம் என்ற மூன்று அங்கங்களிலும் வாழ்க்கையை வகுத்தார்கள். இவ்விவகாரங்களால் உண்டாக்கப்படக்கூடிய விருட்சங்களே மனித தர்மத்தைப் போதிக்கக் கூடியதும் சாதிக்கக்கூடியதுமாக மலர்கின்றது. இச்சாதனைகளின் நிமித்தம் இம்மனிதனை நாம் ஆய்வு செய்யும்போது ஒரு நாட்டின் இன ஒற்றுமை, மொழி, தாய்மொழிப்பற்று, மண்ணின் பற்று, மக்களின் கலாசார, பண்பாட்டு வாழ்க்கைக்காகத் தன்னாலான அபிவிருத்தி வேலைகளுக்காக ஊரோடு ஒத்துழைக்கும் நல்ல இதயமுள்ள ஒரு சமூகத் தொண்டனை இங்கு காண்கிறோம்.

குடும்பத்தின் சூழலுக்குள் மாத்திரம் தன்னை முடக்கிக் கொள்ளாமல் தான் பிறந்த நாட்டுக்கும் அந்த மண்ணுக்கும் தாய் மொழியின் வளர்ச்சிக்காகவும் தன்னை சமூகத்திற்காக அர்ப்பணித்துக்கொண்ட ஒரு தியாகியை இங்கு காண்கிறோம். தன் குடும்ப உறவுகளைக்கூட ஒருபுறம் தள்ளிவைத்து இருபது வயது முதல் இறக்கும்வரை மக்கள் சேவையே பெரிதென எண்ணி செயற்பட்ட கர்மவீரர் அமரர்.

திரு கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் புங்குடுதீவு மண்ணை மட்டும் நேசிக்கவில்லை. வடமாகாண மக்களையும் ஒன்று சேர்த்த பெருமை திருவுக்கு உண்டு. திருவின் நாவசைந்தால் நாடே அசையும்.

நினைத்த கருமம் முடிப்பதில் நீயுமொரு ஞானி - இன்று
நீர் துளிர்த்த இதயங்களில் நின்றாடும் ஒரு தோணி

என்ற வாக்கியத்திற்கு ஏற்ப தன் நாட்டையும் தன் மண்ணையும் நேசித்து தனக்கென வாழாமல் பிறருக்காக வாழ்ந்து நோயுற்றபோதும் தன் உடல் நிலையைப் பாராது சேவை செய்து 3. 10. 2001 புதன் கிழமை சிவயோக சுவாமி அவர்களின் திருவடியின்கீழ் இறைபதம் எய்திய என்மதிப்பிற்கும் எனது அன்பிற்குமுரிய 'திரு' மாமாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

மருமகன்
**கணேசு மகாலிங்கம்**
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமனிதனைக் கண்டேன்

சமூகத்தின்பால் அக்கறைகொண்டு தன்னை அர்ப்பணித்து பணியாற்று பவன் மனிதனாகின்றான். அதாவது, தனது மொழிக்காக அதன் கலாசார பாரம் பரியங்களை வளர்ப்பதற்காக, பிரதேசத்தின் அபிவிருத்திக்காக தன்னை முழுமை யாக ஈடுபடுத்தி செயலாற்றுபவன் மக்கள் தொண்டன் ஆகின்றான். அந்த வகை யில் அமரர் திருநாவுக்கரசு ஐயா அவர்கள் ஒரு மாமனிதனாகத் திகழ்ந்தார்.

தற்போதைய யுத்த நிலையாலும் இராணுவ நடவடிக்கையாலும் சின்னா பின்னமாகிப் போன எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற விடாப் பிடியான முயற்சியில் அமரர் கந்தையா திருநாவுக்கரசு ஐயா அவர்கள் ஈடுபட்டு இருந்ததை என் கண்ணூடாக நேரில் கண்டேன். மருத்துவம் செய்வதற்காக கொழும்பு சென்றிருந்த போதிலும் தீவக அபிவிருத்தியிலேயே திருநாவுக்கரசு ஐயா அவர்களுக்கு அக்கறையும் ஆர்வமும் இருந்தது. ஆனாலும் கொழும்பு வாழ் புங்குடுதீவு மக்களைச் சேர்த்து அபிவிருத்திக் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்யும் பொழுதும் பரந்துபட்டே சிந்தித்தார்.

வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் இந்த அபிவிருத்திக் கழகத்தின் சேவை கிடைக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

ஒரு முறை அவர் ஏற்பாடு செய்து நடாத்திய ஆத்திசூடி, முற்றோதல் விழாவுக்கு என்னையும் விருந்தினராக அழைத்திருந்தார். அங்கு அவர் உரையாற்றும்போதும் தானும் நானும் எதிரும் புதிருமான கட்சியில் இருந்தமையைக் (அதாவது, திருநாவுக்கரசு ஐயா அவர்கள் தான் முதலில் தமிழரசுக் கட்சியில் இருந்ததைக்) குறிப்பிட்டு ஆனாலும் நாங்கள் எல்லோரும் பிரதேசத்தின் வளர்ச்சிக்காக, சுபீட்சத்துக்காக சேவை செய்பவர்கள், ஒன்றி ணைந்து செயல் ஆற்றுபவர்கள், நண்பர்களாகி விட்டோம் என்றார்.

இப்படியாக இவரது சமூகப்பணியில் அனைத்துத்துறையும் வியாபித் திருந்தது. பல்துறைகள் சார் அனுபவமும், ஆற்றலும் அவர் பெற்றிருந்தார். இவரையும் இவரின் சமூகப் பணிகளையும் கூறுவதாக இருந்தால் நாட்கணக் காகக் கூறலாம்.

திருநாவுக்கரசு ஐயா அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப் பாகும். இவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலி இவர் விட்டுச் சென்ற சமூகப் பணியை முன்னெடுத்துச் செல்வதே ஆகும். இவரது பிரிவால் துயருற்று வாடும் தாயார், சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர்கள், சர்வோதயப் பணியா ளர்கள், புங்குடுதீவு வாழ் மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங் களைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எங்கும் எழில் வீசும் நயினை நாகம்மையின் பாதார விந்தங்களை வணங்கி வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

**நமசிவாயம் கருணாகர குருமூர்த்தி** ஜே.பி.யு.எம்
தவிசாளர்

வேலணை பிரதேச சபை,
வங்களாவடி, வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்தவர் திரு அண்ணர்

செந்தமிழ்ப் பண்பும் சிவநெறி வாழ்வும் அந்தமில்லாத இன்ப அழகும் கொண்ட ஈழத்திருநாட்டிலே மணிமுடியாகத் திகழ்வது யாழ்ப்பாணம். இதற்குத் தென்பகுதியில் சப்த தீவுகளில் புங்குடுதீவு என்னும் புகழ் பூத்த பொன்னகரில் அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் வாழ்ந்தார். அண்ணர் திரு அவர்களுடன் கடந்த 30 வருடங்களாகப் பழகிய நட்பு இருக்கிறது. இவர் ஒரு சாதாரண கார்ச் சாரதியாக இருந்து பின்னர் கார் உரிமையாளராக மாறினார். அக்காலத்தில் எந்நேரமும் அறிஞர் அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் எழுதிய நூல்களை நன்றாக வாசித்தவர். அத்துடன் கார் ஓடுகின்ற வேளையிலும் நூல் வாசிப்பதை மேற்கொண்ட உத்தமன் ஆவார்.

அத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியில் முன்னின்று உழைத்து பல போராட்டங்களில் கலந்துகொண்டு அரசியலில் தனக்கென ஒரு முத்திரையைப் பொறித்தவர். தந்தை செல்வநாயகம், அமரர் அமிர்தலிங்கம் போன்றவர்களின் அரவணைப்பைப் பெற்றவர். அது மட்டுமல்ல தமிழரசுக் கட்சியின் சிறந்த மேடைப்பேச்சாளராகவும் திகழ்ந்தவர். பிற்காலத்தில் அரசியலிலிருந்து ஒதுங்கி மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற எண்ணத் துடன் ஆரியரத்தினா தலைமையிலான சர்வோதயத்தில் தொடர்பு வைத்து வட மாகாண அமைப்பாளராக நியமனம் பெற்று அதன் தலைமைக் காரியால யத்தைப் புங்குடுதீவில் அமைத்து அமரர் கு. வி. செல்லத்துரை, நாக. பத்மநாதன் போன்றவர்களின் கூட்டுமுயற்சியுடன் சிறந்த முறையில் தொண்டாற்றினார். சர்வோதய நன்கொடையைப் பயன்படுத்தி புங்குடுதீவிலுள்ள அனைத்துக் குளங்களையும் ஆழமாக்கி புனரமைத்தார். அத்துடன் சிறிய ஒழுங்கைகள் அனைத்தையும் வாகனப் போக்குவரத்துச் செய்யக்கூடிய பாதையாக சர்வோதய செலவிலேயே மாற்றியமைத்தவர். இதனைப் புங்குடுதீவு வரலாறு மறக்காது.

தலைமன்னார், இராமேஸ்வரம் செல்லும் கப்பல் பயணிகளுக்கு தலை மன்னாரில் தங்குமிட வசதிகள், உணவுகள் இல்லாத நிலையை உணர்ந்து தலை மன்னாரில் ஒரு சர்வோதய கட்டிடத்தை அமைத்து அனைவருக்கும் குறைந்த செலவில் தங்குமிட வசதியும், உணவும் வழங்கினார். வடமாகாணம் முழுவதற்கும் கிளைகளை அமைத்து செயற்றிட்டங்களை விரிவுபடுத்தினார். அக்காலத்தில் ஏற்பட்ட நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஆரியரத்தின தலைமையிலான சர்வோதயத்தில் இருந்து தானாகவே விலகி, தனக்கென ஒரு கொள்கையை அமைத்து, வட இலங்கை சர்வோதயத்தை உருவாக்கி, இறக்கும் வரையும் தனது சேவையைச் செய்துகொண்டு இருந்தார்.

இவர் மானிடர்களுக்கு மட்டும் சேவை செய்தவர் என்று கருதிட முடியாது. மிருகங்களுக்கும் அண்மைக் காலத்தில் பனையோலையை பச்சையாக வெட்டி உணவாகக் கொடுத்தார். தற்போது வட இலங்கை சர்வோதயத்தை நிர்வகிப்பதற்காக செல்வி ஜமுனா பொன்னம்பலம் அவர்களையும் செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புஸ்பவதி கந்தையா அவர்களையும் வளர்த்துள்ளார். அவர்கள் அண்ணன் திரு அவர்களின் சேவையை மேலும் வளர்ப்பார்கள் என்பதில் எமக்கு ஐயம் இல்லை.

புங்குடுதீவில், வடக்கே கேரதீவு என்பது வனாந்தரப் பகுதிபோல இருந்தது. அதில் நல்ல மணலும் நன்னீரும் காணப்பட்டது. அக்காலத்தில் அக்காட்டில் எல்லோரும் கட்டிடத் தேவைக்காக மணல் அள்ளி எடுத்தமையால் காடு சிறிது அழிக்கப்பட்டது. இதனைத் தடுக்கவேண்டும் என அண்ணர் திரு அவர்கள் உணர்ந்து உடனே அதனை குடியேற்றத்திட்டமாக மாற்றவேண்டும் என நினைத்து அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர் போன்றவர்களுடன் தொடர்புகொண்டு அக்காணியை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கச் செய்தவர். இதனால் கேரதீவு என்னும் பிரதேசத்தைச் சர்வோதய கிராமமாக மாற்றினார்.

அண்ணர் திரு அவர்கள் "கூட்டுறவே நாட்டு உயர்வு" என்ற குறிக்கோளிலும் வாழ்ந்தவர். அதற்கு எடுத்துக்காட்டாகப் புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் கடமை ஆற்றினார். அக்காலத்தில் கூட்டுறவை சிறந்தமுறையில் வளர்க்க வேண்டும். என்ற எண்ணத்துடன் திறமையாக நடாத்திய வேளையில் ஒரு தடவை ஊழியர்களுடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டபோது ஊழியர்கள் லொறியிலிருந்து பொருட்களை இறக்க மறுத்த அந்த வேளையில் தான் தலைவர் என்ற நிலையை மறந்து தானே அந்த லொறியிலுள்ள அனைத்துப் பொருட்களையும் சுமந்து களஞ்சியப் படுத்திய ஒருவர் என்பதையும் யாரும் மறக்கமுடியாது. என்றும் எப்போதும் எந்த நேரமும் மக்கள் பக்கமே தனது நோக்கத்தை வைத்திருப்பவர். இதனால் மக்கள் அவரைத் தெய்வமாகப் போற்றுகின்றார்கள்.

கடந்த வருடம் எமது பாடசாலையாகிய புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலத்தில் நிறுவனர் தினவிழா கொண்டாடப்பட்டது. அப்போது நிறுவனர் அமரர் பசுபதிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் சேவையையும் நினைவுப் பேருரையாக நிகழ்த்தினார். இதனை எமது பாடசாலைச் சமூகம் மறக்கமுடியாத நிகழ்வாகக் கருதுகின்றது. இது மட்டுமல்லாது புங்குடுதீவு மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற நல்நோக்குடன் ஆத்திசூடி விழாவைக் கொண்டாடி அதன்மூலம் ஆத்திசூடியை முற்றாகப் பிழையின்றி ஓதி முடித்த மாணவருக்கு பணப்பரிசு வழங்கி கௌரவித்தார். இவற்றுடன் நின்றுவிடாது யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து அரச திணைக்களத் தலைவர்களையும் அழைத்து புங்குடுதீவில் ஒரு மகாநாட்டை நடாத்தினார். அதில் பல்வேறு உடனடித் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டன. அத்துடன் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய 30 திட்டங்களையும் எடுத்துக் கூறினார். இதனை நிறைவேற்றத் தங்களாலான முயற்சியைச் செய்வதாக திணைக்களத் தலைவர்கள் உறுதியளித்தனர்.

திரு அண்ணர் அவர்களை இறுதியாகக் கொழும்பு புறப்படுவதற்கு முன்னர் யாழ்ப்பாண அலுவலகத்தில் நான் கடைசியாகச் சந்தித்தபோது "எனது உடல் நிலையை கொழும்பு சென்று வைத்திய நிபுணர்களிடம் காட்டி ஆலோசனை பெற்ற பின்னர் கொழும்பிலுள்ள நம்மவர்களையும் சந்தித்து எதிர்காலத்தில் நாட்டை வளம்படுத்த நல்லதோர் திட்டத்தை உருவாக்குவோம்" எனக் கூறிச் சென்றவர் இரண்டு கிழமை சென்றதும் மரணமானார் என்ற செய்தியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வானொலியில் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தோம். இது புங்குடுதீவு மக்களுக்கு ஒரு பேரிழப்பாகக் கருத வேண்டியுள்ளது.

அண்ணர் திரு அவர்கள் காந்தீயக் கொள்கையையும் யோக சுவாமியின் ஆசியையும் பெற்றவர். அதன் காரணமாக புங்குடுதீவில் யோக சுவாமியார் அஸ்தியை வைத்து யோக சுவாமி மடாலயம் ஒன்றை அமைத்து அதனை வழிபாடு செய்து வந்தவர். அப்படியாக வாழ்ந்து அமரத்துவம் எய்திய சிவத்தொண்டன் திருநாவுக்கரசுக்கு நமது இதய அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது காந்தியக் கொள்கைக்கு மதிப்பு அளித்து வாழ்வோமாக.

அன்பே சிவம்.

ஓம் சாந்தி!

**எஸ். கே. சண்முகலிங்கம்**
அதிபர்

யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம்
புங்குடுதீவு - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்திக்க வைத்த செயல் வீரர்

அமரர் திரு. கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் மறைவு அனைவரையும் மனம் நெகிழ வைத்துள்ளது. மக்கள் சேவையே மகேசன் சேவையென வட இலங்கை சர்வோதயத்தை ஏற்படுத்தி புங்குடுதீவு மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, வீட்டு வசதி, வேலை வாய்ப்புக்கள், தையல் பயிற்சி போன்ற பல பணிகளை செவ்வனே செய்துள்ளார். நல்லைக்கந்தன் உற்சவ காலத்தில் அடியார்களின் தேவை கருதி தாகசாந்தி நிலையம், அன்னதான மடம் என்பன அமைத்துச் சேவை செய்த இவரது பணிகள் மக்களைச் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டியது. இவரது மறைவால் துயருறும் குடும்பத்தினரை இறைவன் ஆசிர்வதிக்கவும் அமரர் திரு கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பன்
**கலாசூரி. என். கே. பத்மநாதன்**
(நாதஸ்வரம்)

199/4, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.
16. 10. 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளில் அன்பு செலுத்தும் பண்பாளன்

நிமிர்ந்த நடை, நேரிய பார்வை, உற்சாகம் நிறைந்த உள்ளம், நல்ல காரியங்களைச் செய்யத் துடிக்கும் மனம், அநீதிகளைக் கண்டிக்கும் துணிவு, சிறந்த சமூகத்தை உருவாக்கத் துடிக்கும் நோக்கம், மலர்ச்சி நிறைந்த முகம், குழந்தைகளிடமும், முதியோர்களிடமும் அன்பு செலுத்தும் பண்பு இவைதான் அமரர் திருநாவுக்கரசு அவர்களிடம் காணப்பட்ட உட்புற - வெளிப்புறத் தோற்றப்பாடு.

சிம்மக் குரலோன் திருநாவுக்கரசு அவர்கள் தனது பேச்சுத் திறனாலே சபையைக் கவரக்கூடியவர். இளம் வயதிலேயே சர்வோதய இயக்கக் கொள்கைகளால் கவரப்பட்ட அமரர் அவர்கள் அவ்வியக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். தமிழ் மக்களின் சமய, சமூக, கல்வி, பண்பாட்டுத் துறைகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் இவர் இவ்வியக்கத்தினூடாக ஆற்றிய பணி அளப்பரியது.

வட இலங்கை சர்வோதய அமைப்பின் தோற்றத்திற்குப் பெரும் பங்காற்றிய அமரரவர்கள் இறுதி மூச்சு வரை அதன் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். தான் பிறந்த கிராமத்தையே சர்வோதய நகராக்கி அங்கு பல பணிகளைச் செய்ததை அனைவரும் அறிவர்.

பொதுவாழ்வில் தன்னை இணைத்துக் கொண்ட அவர் கடமையின் நிமித்தம் கொழும்பு சென்றபொழுது இவ்வாறான ஒரு சோக நிகழ்வு ஏற்படு மென்று யாரும் நினைத்திருக்கவில்லை. இன்றைய சூழ்நிலையில் புங்குடுதீவில் ஒரு துணிச்சல் மிக்க மனிதராக வாழ்ந்த அமரர் திருநாவுக்கரசு அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

அவரை இழந்து தவிக்கும் சர்வோதய அமைப்பினர்க்கும் உறவினர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமரரின் ஆத்மா சாந்தியடைய இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி!

தீவகம், வேலணை
18. 10. 2001

**ப. விக்னேஸ்வரன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னலமற்ற சேவையாளர்

அமரர் திருநாவுக்கரசு அவர்களை நான் நீண்டகாலமாக நன்கறிவேன். 1950களின் பிற்பகுதியிலும் 1960களின் முற்பகுதியிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துடிப்பான பேச்சாளராக இருந்த காலத்திலும் அதன் பின்னர் சர்வோதயத்துடன் தன்னை முழுமையாக இணைத்துத் தனது தன்னலமற்ற சேவையினைத் தீவகத்திலிருந்து தலைமன்னார் வரை வியாபித்து நடைமுறைப் படுத்தி வந்ததனையும் நான் நன்கறிவேன். பொது சேவையில் மட்டுமல்லாமல் ஆத்மீக வழியிலும் தன் காலடி பதித்தார். பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்த துடன் சுவாமி விவேகானந்தரையும் யோகர் சுவாமிகளையும் தமது குருவாகக் கொண்டு தனது ஆத்மீகப் பணிகளையும் தொடர்ந்தவர். தனது கருத்துக்களைத் திறந்த மனத்துடனும் வெளிப்படையாகவும் சொல்லும் நெஞ்சுரம் மிக்கவர் திருநாவுக்கரசு.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையினால் தனது பணிகளைத் தீவகத்துள்ளும் குடாநாட்டில் சில பகுதிகளுக்கும் சுருக்கிக்கொண்டு அப்பணி களைத் திறமையாகச் செய்தவர். ஆத்திசூடி முற்றோதுதல், மரங்களுக்குப் பூசை போன்ற காட்சிகளை நேரில் பார்த்து என்னை வியக்க வைத்த பெருமகனார் அவர்.

அமரர் திருநாவுக்கரசுவினைக் கொண்டு பன்நாட்டு நிறுவனங்களின் உதவியுடன் புங்குடுதீவு, நயினாதீவு போன்ற இடங்களுக்குப் பயன் தரும் திட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்த இருந்தவேளையில் அன்னார் கொழும்பில் திடீரென மறைந்தது எம்மையெல்லாம் அதிர்ச்சிக்கும் அளவு கடந்த சோகத் திற்கும் உள்ளாக்கிவிட்டது.

அன்னாரின் வழிவந்தவர்கள் அவர் விட்டுச் சென்ற பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற அவர்களுக்கு இறையருள் வேண்டுவதுடன், அமரர் திருநாவுக்கரசு அவர்களின் ஆத்மா சாந்தியடைய கிராஞ்சயம்பதி முருகனின் அருள் கிடைக்கட்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

**செ. இரத்தினம்,**
பிரதேச செயலர்,
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்ணையும் மக்களையும் நேசித்த மக்கள் தொண்டன்

வட இலங்கைச் சர்வோதய அமைப்பாளரும், புங்குடுதீவு கமநல கேந்திர நிலையக் குழுத் தலைவரும், பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் பிரதேச செயலக மட்டச் சிறுவர் கண்காணிப்புக் குழுவின் உப தலைவரும் பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனத் தலைவரும் பெருங்காடு தெற்கு கிராம மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுவின் ஆலோசகரும் பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்தி மாதர் சங்கப் போஷகரும் சமாதான நீதவானும் சமூக சேவையாளனும் மக்கள் தொண்டனுமாகிய "சர்வோதய திலகம்" கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் 2001. 10. 03ஆந் திகதி திடீர் மறைவெய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையுமடைந்தேன்.

புங்குடுதீவின் ஒளி விளக்காகத் திகழ்ந்த திருநாவுக்கரசு அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து புங்குடுதீவு சோகக் கடலில் மூழ்கியது. கண்ணீர் வடித்தது. அறிவாற்றலும் ஆளுமையும் செயல் திறனும் கடமையுணர்வும் நெஞ்சுறுதியும் கொண்ட தன்னிகரில்லாத் தலைவனைப் புங்குடுதீவு மண் இழந்து நிற்கிறது.

குருநாதன் யோகர் சுவாமிகள் அடியொற்றி சமயப் பணிகள், பொதுப் பணிகள், சமூகப் பணிகள், அறப்பணிகள் ஆற்றிவந்த செயல் வீரனை, உத்தம தலைவனை உலகம் இழந்துவிட்டது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் திரு வாக்கை தனது தாரக மந்திரமாகக் கொண்ட அமரர் க. திருநாவுக்கரசு அவர்கள் அதன் வழியே புங்குடுதீவு மக்களுக்காக 1960ம் ஆண்டு தொடக்கம் தன்னை அர்ப்பணித்து ஆற்றிய சேவைகள், நற்பணிகள் சொல்லில் அடங்கா. அன்னார் 1964ம் ஆண்டு தொடக்கம் 1968ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் புங்குடுதீவிலுள்ள விவசாயப் பெருமக்களினதும் கால் நடைகளினதும் நன்மை கருதி குளங்களை வெட்டிப் புனரமைத்தும் பொதுமக்கள் நலன் கருதி பொதுக் கிணறுகள் தோண்டியும் கிராம வீதிகளைப் புனரமைப்புச் செய்தும் பொதுக் கட்டிடங்களை நிர்மாணித்தும் பெருஞ்சேவை செய்தார்.

1972ம் ஆண்டு ஆடி மாதம் 23ம் நாள் சர்வோதய இயக்கத்தின் வட பகுதிக்கான அமைப்பை நமது ஊரில் அமைத்தார். இவ்வமைப்புக்கு வட பகுதியில் தொண்டர்களை உருவாக்கினார். இதனால் ஏழை மக்கள் பலர் வேலை வாய்ப்புப் பெற்றுப் பெரிதும் நன்மையடைந்தார்கள். மேற்படி அமைப்பினூடே தனது நற்பணிகளை வடபகுதி மக்களுக்கும் விரிவாக்கம் செய்தார். பல செயற்கரிய திட்டங்களைத் தீட்டி கிராமங்கள் தோறும் சமூகப் பணிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் சிரமதானப் பணிகளையும் மேற்கொண்டு, கிராம மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கும் நலன்களுக்கும் ஏற்புடைய அரிய பல பணியினை முன்னெடுத்தார். இதனால் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அவரது சேவையினைப் பெற்று நன்மையடைந்தார்கள். 1973ம் ஆண்டு தொடக்கம் 1982ம் ஆண்டு வரை புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக அரச நியமனம் பெற்று வைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாலையின் குறைபாடுகள், செய்யப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரியப்படுத்திய அமரர் திருநாவுக்கரசு அவர்கள் வைத்தியசாலையில் வசதிகளற்ற நிலையிலிருந்த மகப்பேற்று விடுதியை விசாலமாகக் கட்டி, மருத்துவ உபகரணங்களும் தருவித்து தாய்மார் களின் உளநலனுக்காக விடுதிச் சுவர்களில் மழலைகளின் உருவங்களையும் வரைவித்தார்.

இவ்வாறாக புங்குடுதீவு மக்களுக்கு அவர் பணி தொடர்ந்த வேளையில் நாட்டிலேற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் 1991ம் ஆண்டு ஐப்பசி மாதம் புங்குடுதீவு மக்கள் புலம் பெயர்ந்து ஏதிலிகளாகச் சென்றபோது அம்மக்களுக்கு இருப்பிட வசதிகள் செய்தும் உண்டி கொடுத்தும் தன்னாலான உதவிகள் புரிந்துவந்தார். பின்னர் 1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது புலம்பெயர்ந்து கிளிநொச்சி சென்று அங்கும் நாதியற்ற மக்களுக்கு தனது பணியினைத் தொடர்ந்தார்.

1997ம் ஆண்டு பங்குனி மாதம் பதிமூன்றாம் நாள் வன்னியிலிருந்து மீண்டும் புங்குடுதீவின் தலைமைக் காரியாலயத்திற்கு வந்து சேர்ந்தார். சர்வோதய நிலைய நிர்வாக உத்தியோகத்தர் செல்வி. பொ. ஜமுனாதேவி அவர்களும் வந்திருந்தார். ஏற்கனவே தலைமையகத்தை நிர்வகித்தும், பராமரித்தும் வந்த அன்னாரது சகோதரி செல்வி. க. புஸ்பமணி, தாயார் க. பார்வதிப்பிள்ளை அவர்களுடன் இணைந்து முன்பு போன்றே மண்ணுக்கும், மக்களுக்கும் சேவையாற்றத் திட்டமிட்டார்.

புங்குடுதீவு சூனியப் பிரதேசமாகக் காட்சியளிப்பதையும் இங்கிருக்கும் மக்கள் அடிப்படை வசதியே இல்லாமல் நடைப்பிணங்களாக வாழ்வதையும் எண்ணி மனம் வருந்தினார். நான் அவரைச் சந்திக்கும் போதெல்லாம் ஊர் நிலைமையையும் மக்கள் படும் அவலங்களையும் கஷ்டங்களையும் இவற்றிற்கு எவ்வாறு உதவலாமெனவும் என்னுடன் கதைத்துக் கவலை கொள்வார்.

இந்நிலையில் சமகாலத்தில் தன்னாலான பணிகளை கிராமத்துக்கு ஆற்றத் தொடங்கினார். சிரமதானப்பணி மூலம் புங்குடுதீவு பிரதான வீதிகள், கிராம வீதிகளைத் துப்புரவு செய்தார். புங்குடுதீவு 3ம் வட்டாரத்தில் (பெருங்காடு தெற்கு) பல பொது அமைப்புக்களை உருவாக்குவதற்கு தனது பூரண ஒத்துழைப்பை நல்கினார். அந்தப் பொது அமைப்புகளுக்கு மக்கள் ஏகமனதாக அமரர் திருநாவுக்கரசு அவர்களையே தலைமைப் பொறுப்பை வகிக்குமாறு தெரிவு செய்தனர். அந்த அமைப்புக்களை மிகச் சிறப்பாக வழிநடாத்தி அவ்வமைப்புக் கள் மூலமாக தனது சொந்தப் பணத்தைச் செலவிட்டு, மக்களுக்கும் கிராமத்துக்கும் அரும்பெரும் தொண்டாற்றினார். குறிப்பாக, புங்குடுதீவு, நயினா தீவு, நெடுந்தீவு விவசாய மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இயங்காமல் இருந்த புங்குடுதீவு கமநல கேந்திர நிலையத்தை மீண்டும் இயக்குவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைத்து அந்நிலையத்தை தற்காலிக கட்டிடத்தில் இயங்க அனுமதி பெற்று மூன்று தீவு விவசாயப் பெருமக்களையும் அழைத்து விழா எடுத்து தனது தளபாடங்களை நிலையத்திற்கு தற்காலிகமாக வழங்கி கமநல கேந்திர நிலையத்தை உருவாக்கினார். புங்குடுதீவில் ஐந்து விவசாய சம்மேளனங்கள் அமைப்பதற்கும் அவரே காரணகர்த்தாவாக விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெருங்காடு தெற்கு கிராம மட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுவுக்கு முன்னாள் உபதலைவராகவும் இந்நாளில் ஆலோசகராகவும் இருந்து சிறுவர்களின் முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் மன எழுச்சிக்குமான திட்டங்களை முன்வைத்து அதற்குத் தனது பங்களிப்பை நல்கி நடைமுறைப் படுத்தினார். அறிவு வளர்ச்சிக்காக முன் பள்ளிகள் அமைத்து, ஆத்திசூடி முற்றோதல் விழாவையும் மாலை நேர வகுப்புக்களையும் சிறுவர் வாசக வட்டத்தையும் நடாத்தினார்.

சிறுவர்களின் முன்னேற்றத்திற்காக தேசிய சேமிப்பு வங்கியினரைப் புங்குடுதீவுக்கு அழைத்து சிறுவர் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து சிறுவர் களின் முன்னேற்றத்திற்கு வித்திட்டார். சிறுவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு புங்குடுதீவு சிவன் தேவஸ்தானத்தில் வெள்ளிக்கிழமை தோறும் பஜனை வழிபாட்டினை நடாத்த ஆலய குருவான சிவஸ்ரீ. ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் மூலம் ஏற்பாடு செய்தார். சிறுவர்களை தெய்வமாக மதிக்கும் அமரர் திருநாவுக்கரசு அவர்கள் சிறுவர்கள் சிறந்த பண்பாளர்களாகவும் நல்லொழுக்க சீலர்களாகவும் அறிவாற்றல் உடையவர்களாகவும் திகழ வேண்டுமெனவும் பேரவாக் கொண்டு சிறுவர்களுக்காக அரும்பாடுபட்டார். அருகிவரும் தமிழர்கள் பண்பாட்டுக் கலை கலாசாரத்தையும் தமிழர் மரபுகளையும் எடுத்துக்கூறி அவர்களை வழிப்படுத்தினார். இப்படி அவர் தமிழ் மக்களுக்கும், நாட்டிற்கும் ஆற்றிய சேவைகளை, தொண்டைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். அமரர் திருநாவுக்கரசு அவர்கள் புதிய தலைமுறைக்காய் பாடுபட்டுப் பணிபுரிந்த ஒப்பற்ற தலைவன். மண்ணையும் மக்களையும் உயிராய் நேசித்த மாண்புமிகு மக்கள் தொண்டன். மனித குலத்திற்கு மட்டுமல்ல, கோமாதா குலத்திற்கும் ஜீவோதய சேவை செய்த மாமனிதன். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த இப் பெருமகனின் இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

நாற்பது வருடங்களுக்கும் மேலாகத் தன்னை அர்ப்பணித்து மக்கள் சேவையே மகேசன் சேவையென இறுதி மூச்சுவரை மக்களுக்காகச் சேவையாற்றி மறைந்த மாவீரனுக்கு, அந்த ஜீவாதானிக்கு நாம் செலுத்தும் அஞ்சலி அவர் பணி தொடர்வதேயாகும். அன்னாரின் மறைவால் துயருற்றிருக் கும் தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், சர்வோதய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய குருநாதன் யோகர் சுவாமிகளின் பாதார விந்தங்களை வேண்டுகிறேன்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமையுடைத் திவ்வுலகு"
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

புங்குடுதீவு மத்தி, மேற்கு J/30
பெருங்காடு தெற்கு, கிராமமட்ட
சிறுவர் கண்காணிப்புக்குழுத் தலைவர்

**எஸ். பி. விநாயகமூர்த்தி**
கிராம உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவைக்கு ஓர் உத்தமன்

தீவக மாதாவின் அருந்தவப் புதல்வனும் இறுதி மூச்சுவரை வட இலங்கை சர்வோதயப் பொறுப்பாளருமாகப் பணியாற்றிய அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் மறைவு எமது தீவகத்தைப் பொறுத்தமட்டில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

தனது முகத்தில் ஒளி வீசுகின்ற பக்தி, அகிம்சை, கருணை, தியாகம், சத்தியம், கடமை, பொறுமை, அன்பு, சமதர்மம் போன்ற காந்தீயப் பண்புகள் மூலம் மக்களைத் தன்பால் அணைத்துக்கொண்ட உத்தமர் அமரர் திருநாவுக்கரசு என்றால் மிகையாகாது.

"பணி செய் பலனை எதிர்பாராதே" என்கின்ற பகவத் கீதையின் கொள்கையைத் தன் வாழ்வின் முக்கிய நடைமுறையாகக் கொண்டு **மாணி**யென வாழ்க்கை முற்றும் சமூகத்தொண்டு புரிந்த உத்தமம். இதன் அடிப்படையில் மிகவும் கஷ்டமான காலத்திலும் நமது தீவகத்திற்கு பல விதத்திலும் அரும்பணி யாற்றி அமரத்துவம் அடைந்த அமரர் அவர்களின் ஆத்மா சாந்தி அடையத் தனக்குவமை இல்லாதான் தாள்களை இறைஞ்சி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**க. அரசரத்தினம்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோட்டக் கல்விப் பணிமனை,
நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பர் பணிசெய்து ஆளானவன்!

அமரர் சர்வோதயம் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் மரணச் செய்தி கேட்டு, அவரை அறிந்தவர் அனைவரும் குறிப்பாக, தீவுப்பகுதி மக்கள் சொல்லொணாத் துயரில் மூழ்கினர்.

தனக்கென வாழாது, ஈழத் தமிழினம் நிமிர்ந்து நிற்கவேண்டுமென்ற ஆர்வத்தோடு செயற்பட்டவர்.

தான் பிறந்த மண்ணும் அதனை அடுத்துள்ள தீவுப்பகுதி அனைத்துமே பல வளங்கள் பெற்று சிறப்புடன் வாழவேண்டுமென்று எண்ணிய பெருமகன். காலமும் இடமும் நோக்காது, படித்தவர் பாமரர் என்று பாராது, உயர்வு தாழ்வு எதனையும் கருதாது, அன்புடன் அனைத்து மக்களையும் நேசித்தவர்.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற முதுமொழிக்கு ஏற்ப சர்வோதயம், தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றில் பொறுப்பான பதவி களை ஏற்று, அறப்பணிகள் பல புரிந்த அருளாளன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவைகளைத் தனது வாழ்வில் மிக உறுதியோடு கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் மட்டுமன்றி, தன்னோடு சேர்ந்தவர்கள் அனைவரும் இத்தகைய நல்வாழ்வு வாழவேண்டும் என்ற மனப்பாங்கும் உடையவர்.

தற்போது நாட்டில் நிலவும் போர்க்காலச் சூழ்நிலை காரணமாகப் புங்குடுதீவு மக்கள் பல்வேறு இடங்களில் சிதறுண்டதுடன் ஊரும் சிதைந்து சின்னா பின்னமாகி விட்டதென்பதையிட்டுப் பெரும் கவலைப்பட்டார்.

"தாய்நாட்டில் அன்பு கொளாதவன்
எந்நாட்டிலும் அன்புகொளான்;

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானிலும் நனிசிறந்தனவே!"

எனும் பெரியோர் வாக்கிற்கேற்ப தான் பிறந்த மண்ணின் இன்றைய நிலையை எடுத்து விளக்கிக்கூறி, அதன் அபிவிருத்தி தொடர்பாகப் பல செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்த எண்ணி, கொழும்பு சென்ற வேளை இவரின் மரணம் நிகழ்ந்ததையிட்டு அனைவருமே மிக்க கவலையும் வேதனையும் துயரமும் அடைந்தனர்.

நோயுற்று அயராமல், நொந்து மனம் வாடாமல், மற்றோர்க்குப் பாரமாய்ப் பாயிற் கிடவாமல் அவரது உயிரை இறைவன் எடுத்துவிட்டான். எனினும் அவர் செய்த பணிகள், செய்து முடிக்க எண்ணிய செயற்திட்டங்கள் எதிர்காலத்தில் எந்த அளவில் நிறைவேறும் என்பதை இன்று எம்மால் கூற முடியாதுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

'அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே'

என்ற அமுத வாக்குகளுக்கேற்ப வாழ்ந்த அமரர் திருநாவுக்கரசின் திடீர் மரணம் எம்போன்ற பலரைப் பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

**"அறிய வேண்டியவையெல்லாம் அறிந்து, பொறுமைக் குணம் உடையவராய் அஞ்சத்தக்க பழிபாவங்களுக்குப் பயந்து, தாம் செய்யும் காரியத்தையெல்லாம் உலகத்தார் மகிழும்படி செய்து, அதனாற் பெறும் பயன்களால் இன்பமடைந்து வாழ்கின்ற தன்மை உடையவர் எப்போதும் துன்பமடைந்து வாழுதல் இல்லை"**

என்ற நாலடியார் வாக்கிக்கேற்ப வாழ்ந்து மறைந்துவிட்டார் அமரர் சர்வோதயம் திருநாவுக்கரசு அவர்கள்.

தீவுப்பகுதிகளுக்கான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தபோது, நெடுந்தீவிற்கும் அளப்பெரிய பணியாற்றியவர். சர்வோதயத்தின் மூலம் பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த முயன்ற பொழுதும் நாட்டின் நிலை அதற்கு இடம்கொடுக்கவில்லை.

நெடுந்தீவு மக்கள் படகுச் சேவையின்றி அந்தரித்து நின்ற காலங்களில் அன்புடன் அரவணைத்து, உணவும் உறையுளும் வழங்குவதில் அவரும் அவரது குடும்பத்தினரும் காட்டிய பண்புகள் அவர்களுக்கே உரிய சிறப்பியல்புகளாகும்.

1985 ஆண்டு குமுதினிப் படுகொலை நிகழ்வின்போது பலருடன் இணைந்து அவர் ஆற்றிய பணியினை எம் தீவக மக்கள் மறக்க முடியாது.

"உற்றவர் நாட்டவர் ஊரார் - தமக்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவமாவது கண்டோம் - இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றுமில்லை
பக்கத்திருப்பவர் துன்பம் - தன்னைப்
பார்க்கப் பொறாதவன் புண்ணியமூர்த்தி"

என்ற பாரதியாரின் வாக்குக்கு ஏற்ற புண்ணியமூர்த்தியாக வாழ்ந்து மறைந்தவர் அமரர் திருநாவுக்கரசு.

அவரது பணியினை, அவரது சகோதரிகளும் அன்பர்களும் எதிர்காலத்தில் முன்னெடுத்துச் செல்வார்களாக.

அன்னாரை இழந்து துயருறும் அன்புத் தாயார், சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் நெடுந்தீவு மக்கள் சார்பில் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**புலவர். ஏ. டபிள்யூ. அரியநாயகம்** ஜே.பி.யூ.எம்

தலைவர், பிரதேச சபை,
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்ல குரு நாதர்

உன் வாழ்வை அர்ப்பணித்து
ஊருக்காய் உழைத்தவரே!
எம் மக்கள் உயர்விற்காய்
ஏற்றம் பல செய்தவரே!
தம்முடைய திறனாலே
தமிழ் மணக்கச் செய்தவரே!
உம்முடைய திரு உருவை
உயிர் உள்ளவரை நாம் மறவோம்!

உம்முடைய செயல்கள் எல்லாம்
எம் இதயத்தில் குடி இருந்து
எம்மை வழி நடத்துதையா!
ஏழைகளின் காவலரே!
பாமர மக்களுக்காய்
பல திட்டம் தாம் வகுத்து
பாரினிலே அவர்கள் உய்ய
பக்குவமாய் வழி காட்டி
ஊர் உலகம் மெச்ச
உயர்ந்து நட என்று வைத்தாய்!

தங்கத் தமிழ் எழுத்து தரணி எல்லாம் ஒலி பரப்பி
சிங்கக் குரலாலே சீறிவரும் செந்தமிழை
பங்கப்படாமல் பார் முழுதும் நீ பரப்பி
எங்கள் குலம் காத்து ஏறுநடை போட்டவரே!
இளைஞர் கழகம் என்று இளைஞர்களை ஒன்றுகூட்டி
இயல் இசை நாடகத்தை இயற்றி எழில் ஊட்டினாயே!
சர்வோதயம் என்று சக்திமிகு ஒன்றியத்தை
தனியாக நீ இருந்து தம்பட்டம் அடிக்காமல்
எளிமையாக நீ காத்து எம்மக்கள் இடர் களைய
உழைத்தாயே!

நீர்த் தேக்கம் குடியேற்றம் நிலம் இல்லார்க்கு நிலம்
பல திட்டம் நீ போட்டு பாகுபாடின்றி நிறைவேற்றி
பல குடிகள் உயர்வதற்கு பக்கபலமானவரே!
பறந்து போனாய் என்ன செய்வோம்
பாவிகளும் நாங்கள் ஆனோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உம் வாழ்வின் இலட்சியத்தை
உண்மையிலே நாம் கூற
எம் அறிவும் போதாது என்ன செய்வோம்!
எழுதி முடிப்பதற்கும் எழுத்தாணி கூர் மழுங்கும்
அவ்வளவு செயல்கள் எல்லாம் அகிலத்தில் நீ செய்தாய்!
அதைக் கூற முடியாது ஆ இனமே கண் கலங்கும்!

எங்களுக்கு இனி யாரும் இங்கு வர மாட்டார்கள்!
தங்கத் திரு மகனே உங்கள் திருவடியால்
எங்களை ஆட்கொண்டு எமக்கு வழிகாட்டி
எங்கள் குருநாதனாய் எமக்கு ஒளி ஊட்டி
உங்கள் செயல்கள் எல்லாம் இங்கு மீண்டும் மிளிர்வதற்கு
எங்களுக்கு குருவாக எம் அருகில் நீ இருந்து
எம்மை வழி நடத்துவாய் நம் தேசத்தை
உயர்த்திடுவோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**க. அஜந்தன்**
சமுர்த்தி உத்தியோகத்தர்

3ம் வட்டாரம்,
புங்குடுதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகத்தின் மாமனிதர்

தீவகத்திற்குப் புகழ் சேர்த்த பெருமக்கள் வரிசையிலே அமரர் திரு. க. திருநாவுக்கரசு அவர்களுக்கு சிறப்பான ஓர் இடமுண்டு. அவர்கள் தான் பிறந்த மண்ணின் வளத்தையும் தம் மக்களின் வாழ்வின் சுபீட்சத்தையும் கருதி அயராது உழைத்தார். நாடும் ஏடும் போற்றிட தன்னம்பிக்கை, விடாமுயற்சியுடன் மக்கள் சேவையே குறிக்கோளாகக் கொண்டு அயராது உழைத்தவர். தமிழர் வாழ்வு மலர்ந்திட மகிழ்வோடு பணி புரிந்தவர். வட இலங்கை சர்வோதய அமைப்பாளராய் பணிகள் பல ஆற்றி, ஏழைகள் வாழ்வில் ஏற்றம் கொடுத்தவர். தமிழர்தம் பண்பாடுகள் மங்கிவிடாது சைவமும் தமிழும் தழைத்திட கிராமங்கள் தோறும் விழாக்கள் பல எடுத்து வழிப்படுத்தியவர். ஆன்மீக வழி நின்ற அறங்காவலர், தேசத் தொண்டன், ஆதரவுக் கரம் பற்றியவர்களுக்கு ஆறுதல் தந்த அமைப்பாளர். அன்பால் மக்களைக் கவர்ந்த அருந் தவப் புதல்வன். தீவகத்தைக் காத்து நின்ற தீந்தமிழ் காவலன். புங்கை நகரை வளமும் புகழும் கொண்ட பூமியாக உருவாக்க எழுச்சியடைந்திடும் பல திட்டங்களை அமைத்துத் திறம்படச் செயலாற்றி ஊரே போற்றிட, பொலிவுறச் செய்தவர். சிறந்த பண்பாளன். சிறந்த மேடைப் பேச்சாளன். புங்கை நகர் இவரால் பெருமை பெற்றது.

தூய எண்ணம், நேர்மையான எளிய வாழ்க்கை, தன்னலமற்ற சேவை, கம்பீர மான தோற்றம், புன்னகை தவழும் முகம், இனிமையான பேச்சு இவைகளினால் தமிழ் மக்களிடையே ஓர் உயர்ந்த மனிதராக மதிக்கப்பட்டார்.

வெள்ளை வேட்டியும் சட்டையும் அவரின் உள்ளத்தின் தூய்மை
அமைதியும் அடக்கமும் அவரின் குணத்தின் வடிவம்
கடமையும் கட்டுப்பாடும் அவரின் உயர்நிலை அடித்தளம்
சேவையும் தொண்டும் அவரின் பிறப்பின் கொடை
சிந்தனையும் செயற்பாடும் அவரின் உழைப்பின் அறுவடை
நன்மையும் தீமையும் அவரின் மனதின் வலிமை
விடா முயற்சியும் தொண்டும் அவரின் இறுதி மூச்சு
ஊரும் உறவும் அவரின் ஆத்மாவின் சாந்தி.

நாடு எனக்கு என்ன செய்தது என்று எண்ணுவதை விட்டு
நாட்டிற்காக நான் என்ன செய்தேன் என்று எண்ணி,
செயல் மூலம் வாழ்ந்து காட்டியவர். தீவகத்தின் வரலாற்றில் பல
சிறப்பான தடயங்களை பதித்துச் சென்றுள்ள அமரர் திருநாவின்
புகழ் வாழ்க! அன்னாரின் ஆத்மா சாந்தியடைக!

**த. தட்சணாமூர்த்தி**
திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்

பிரதேச செயலகம்,
வேலணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைமைத்துவப் பண்பு கொண்டவர்

பிறந்த மண்ணின் மீது பற்று - மக்கள்பால் நேசம் - நாட்டின் மேம்பாட்டில் இடையீடில்லா சிந்தனை - தலைமைத்துவ ஒழுங்கு - இன்முகம் காட்டி எவரையும் உபசரிக்கும் பண்பு - எளிமையும் அடக்கமும் அறிவும் ஒருங்கே அமைந்த பண்பாளர் அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்கள். எத்தகைய விடயங்களையும் நேர்த்தியாகவும் நிதானமாகவும் அணுகி வெற்றி காண்பதில் சிறந்து விளங்கினார் அவர்.

இனத்திற்கும் மண்ணுக்கும் காலம் அறிந்து கருமங்கள் ஆற்றியதால் மக்களின் இதயங்களில் இடம்பெற்றவர் அமரர் சர்வோதயம் திருநாவுக்கரசு.

தீவகத்தின் தனித்துவமும் பாரம்பரிய பண்பாடுகளும் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்பதில் தளராத ஊக்கம் கொண்டு பல வழிகளிலும் பல்வேறு மட்டங்களிலும் சர்வோதய அமைப்பின் மூலம் உழைத்தவர்.

தீவகத்தின் பாரம்பரியங்கள் சிதைவடையாமல் தொடர்ந்து பேணப்படுவதற்கு பல ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு உழைத்த வேளையில் காலன் அவரைக் கவர்ந்து கொண்டமை ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவரது இலட்சியங்கள் நிறைவேற நாம் அனைவரும் ஒருமித்து உழைப்போமாக.

**லயன். சோ. விக்கினேஸ்வரன்**
பட்டயத் தலைவர்

**தீவக லயன்ஸ் கழகம்,**
காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் உள்ளத்தில் வாழ்கின்றார்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று".

என்ற வான்புகழ் வள்ளுவரின் வாக்குக்கிணங்க வையத்தில் புகழோடு தோன்றி வாழ்வாங்கு வாழ்ந்து தன்னலமற்ற சேவைகள் ஆற்றி மக்களின் மனத்தில் இடம்பெற்று இறைபதம் அடைந்த உயர்திரு கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் 'வட இலங்கைச் சர்வோதயம்' என்ற பாரிய பொதுச்சேவை அமைப்பின் அதிபதியாவார். இதன்மூலம் மக்களின் சேவைக்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட தியாகசீலன் ஆவார்.

வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியாக இருந்து 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என வாழ்ந்து வந்தார். யோகர் சுவாமி அவர்களைத் தனது கடவுளாகவும் குருவாகவும் ஏற்றுக்கொண்டு அவரின் உபதேசங்களின்படி வாழ்ந்தார். தான் பிறந்த மண்ணாகிய புங்குடுதீவு மண்ணையும் நேசித்தும், பூசித்தும் வந்தார்.

கடவுள் பக்தி, கருணை, நேர்மை, துணிவு, தன்னம்பிக்கை, சேவையில் விசுவாசம், சுறுசுறுப்பு, விடாமுயற்சி ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டவர். எல்லா ஜீவராசிகளையும் மதித்தும் போற்றியும் வாழ்ந்ததோடு, இயற்கையின் வனப்பில் இன்பமும், மிருகங்கள், பறவைகள் போன்றவற்றின் மகிழ்ச்சியில் மனநிறைவும் கண்டவர்.

இத்தனை உயர்ந்த பண்புகளைக் கொண்ட அறங்காவலர், சேவையின் வள்ளல், தியாகதீபம் உயர்திரு. கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் இறைவனடி சேர்ந்தார். "மரணம் அவர்களை அழிப்பதில்லை" என்ற ஞானமொழிக்கு ஏற்ப அவர் மரணத்தை வென்று மக்கள் உள்ளத்தில் வாழ்கின்றார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**திரு. க. தர்மகுணசிங்கம்**
அதிபர்,
யா / புங்குடுதீவு ம.வி.
புங்குடுதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிஞருக்குதவும் அருந்தகவற் களஞ்சியம்
## திருநாவுக்கரசு

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு."

- திருக்குறள்

உலகிலே காலம் தோறும் பலவகையான மக்கள் பல்வேறு இலட்சியங் களுடன் வாழ்ந்து மறைந்துள்ளனர்; மறைந்து வருகின்றனர். இவர்களில் ஒரு சாரார் தம் நலமே சிறந்ததெனச் செயற்படுவர். பிறிதொரு சாரார் தம் நலனுடன் பிறர் நலனையும் கருத்திற்கொண்டு செயற்படுவர். இன்னொரு சாரார் தம் நலனைவிட்டுப் பிறர் நலனிலே குறிப்பாக நலிந்த சமூகப் பிரிவினரின் நலனில் ஈடுபடுவர். இத்தகையோர் தொகை மிகக் குறைவாகவே இருப்பினும் இவர்கள் ஒரு சமூகத்தின் ஆணிவேர் போன்றவர்கள். "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" என இத்தகையோரின் சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டு இவர்களாலே தான் இந்த உலகம் இயங்குகின்றதெனப் பழந்தமிழ்ப் புலவன் ஒருவன் புறநானூற்றிலே விதந்து பாடியுள்ளான். இத்தகையோரின் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவராகவே சமீபத்தில் இறைவனடி சேர்ந்த வட இலங்கைச் சர்வோதய அமைப்பாளராகிய திரு. க. திருநாவுக்கரசு விளங்கினார்.

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி 4ஆம் வட்டாரத்திலே 1939இல் திரு. அ. கந்தையா பார்வதிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த இவர் பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர் சிலகாலமாக வர்த்தக நிறுவனங்களிலே கடமை யாற்றினார். பின்னர் சென்ற நூற்றாண்டின் ஐம்பது, அறுபதுகளில் தமிழரசுக் கட்சியிலே இணைந்து அக்கட்சியின் ஒரு பிரதான பேச்சாளராகவும் வாலிப முன்னணியின் செயலாளராகவும் சிறப்பாகச் செயற்பட்டார். அக்காலகட்டத்திலே வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று மக்களை நேரடியாக அறியவும் அவர்களுடன் பேசவும் தமக்கு வாய்ப்புகள் கிட்டியதாக அவரே மிக மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

பின்னர் அரசியலிலிருந்து ஓரளவு விலகிச் சர்வோதய சிந்தனைகளில் ஈடுபட்டார். இதன்மூலம் மக்களுக்குச் சிறந்த சேவை செய்யக்கருதி இலங்கைச் சர்வோதய இயக்கத் தலைவரான கலாநிதி ஆரியரத்னாவுடன் சேர்ந்து சர்வோதயக் கருத்துக்களை வடஇலங்கையில் செயற்படுத்துவதில் ஆர்வம் காட்டினார். இது தொடர்பாக இலங்கையின் சில இடங்களிலே நடைபெற்ற பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகளிலே பங்கு பற்றினார். பின்னர் இலங்கைச் சர்வோதயத்திலிருந்து விலகி வட இலங்கைச் சர்வோதயம் என்ற அமைப் பினைப் புங்குடுதீவில் நிறுவி அதன்மூலம் சர்வோதயக் கருத்துக்களைச் செயற் படுத்தினார். அதேவேளையில் யாழ்ப்பாணத்திலே சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்த பெரிய சமய ஞானியாகிய யோகர் சுவாமிகளின் போதனைகளிலீடுபாடு கொண்டு இறுதிவரை அவரைத் தமது ஞான குருவாகவும் தெய்வமாகவும் கருதினார். அவருடைய நிறுவனத்திலுள்ள அணையாத தீபமும் யோகர் சுவாமிகளுடைய ஆலயமும் இவ்வகையில் நன்கு குறிப்பிடற்பாலன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவப் பருவம் தொட்டு இவர் மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப் பாங்கும் மனத்துணிவுமுடையவராக விளங்கி வந்தார். எப்பொழுதும் ஏதோ ஒரு விடயம் பற்றி அறியும் ஆவலுடையவராகவும் மக்களுக்குத் தேவையான வற்றைச் செய்வதில் ஆர்வமுள்ளவராகவும் விளங்கினார். பல விடயங்களை - அவற்றை அறிந்தோரிடம் நேரில் கேட்டு அறிபவராகவும், பல நூல் நிலையங் களில் உள்ள பல நூல்களை வாசித்துக் கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தும் இலங்கினார்; மக்களுடைய சேவைக்கான மனோபாவம், திடகாத்திரம், தக்க அறிவு, செயல்திறன் உடையவராகவும் இருந்தார். தனது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் மக்கள் சேவைக்கே தம்மை அர்ப்பணித்தார்.

இவர் சிறந்த தமிழ்ப் பேச்சாளர். "வார்த்தை பதினாயிரத்தொருவர்" என்ற மூதுரைக்கேற்ற முன் உதாரண புருஷர்களிலிவரும் ஒருவர். ஒருவருக்குப் பெற்றோரிடும் பெயருக்கேற்ப அவரின் குணாதிசயங்கள் சிலவாவது சில வேளைகளில் அமையலாம். இந்தவகையில் மூத்த சைவ நாயனாரும் செஞ் சொற் செல்வருமாகிய நாவுக்கரசர் போலச் **சென்ற நூற்றாண்டிலே புங்குடு தீவில் இரு திருநாவுக்கரசுகள் இருந்தனர். இவர்களுள் மூத்த திருநாவுக்கரசு (நாவேந்தன்) த. திருநாவுக்கரசு அதிபர். இளைய திருநாவுக்கரசு க. திருநாவுக் கரசு. ஒருவர் பின் ஒருவராக இருவரும் இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் அமரத்துவம் அடைந்து விட்டனர்.** "கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" எனும் திருவள்ளுவரின் திருவாக்கிற்கு இருவரும் நல்ல எடுத்துக்காட்டுகளாவர். ஆனால், இளைய திருநாவுக்கரசு அப்பர் சுவாமிகளைப்போல நைஷ்டிகப் பிரமச்சாரி; சமூகத் தொண்டர்; "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற உயர்ந்த இலட்சியம் உடையவர்: சிறந்த கர்மவீரர். தமது வாழ்க்கையின் பிற்கட்டத்திலே யோகர் சுவாமிகளின் சிந்தனைகளில் ஈடுபட்டு ஆத்மீகத்தோடு கூடிய சமூகசேவை செய்து வந்தார் என்பது ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற நோக்குடன் சர்வோதயம் மூல மாக இவர் வட இலங்கையிலே பல பணிகளிலீடுபட்டவர். குறிப்பாகத் தீவகத்தின் சமூக, பொருளாதார மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு செயலாற்றினார்; பல இளைஞர்களையும், யுவதிகளையும் சர்வோதய சேவையில் இணைத்துப் பணி செய்தார். குறிப்பாகப் புங்குடுதீவின் அபிவிருத்திக்காகப் பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தியவர். இவரின் சேவைகள் மனித குலத்திற்கு மட்டுமன்றி மாடுகள், ஆடுகள் முதலிய மிருகங்களிற்குமான சேவை களையும் உள்ளடக்கிய தாகும். வட இலங்கையிலே நிலவி வரும் குழப்பகரமான சூழ்நிலையால் இவரின் நோக்கங்கள் நிறைவேறவில்லை. இது குறித்தும் அவருக்குக் கவலையிருந்தது.

சர்வோதயம் சார்பாக அவர் புங்குடுதீவிலும் பிற இடங்களிலும் மேற் கொண்ட சமூக, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் அவ்வவ் இடங்களை மேம்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டவை. தாம் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை அவ்வத்துறை சார்ந்த நிபுணர்களின் அறிவுரை களைக் கேட்ட பின்னரே அவற்றை அவர் செயல்முறைக்குக் கொண்டு வந்தார். ஒரு திட்டமின்றி ஒன்றையும் செய்திலர். அதே வேளையில் தான் சரியான நடவடிக்கையைத் திட்டமிட்டு மேற்கொள்ளும்போது எவர் எதிர்த்தாலும் எளிதிலே விட்டுக் கொடுக்கமாட்டார்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

எனும் தமிழ்மறைச் செய்யுட்களுக்கு அவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவர். சொல்லும் செயலும் அவரிடத்தில் நன்கு இணைந்து காணப்பட்டன. அதே வேளையில் தமது ஆளுமைத்திறன், அறிவுத்திறன், செயற்றிறன் முதலியனவற்றால் தான் சரியென நன்கு உணர்ந்தவற்றை நன்கு செயற்படுத்தியவர். எத்தகைய எதிர்ப்பையும் மனத்துணிவுடன் சாத்விக முறையிலே சமாளித்து விடுவார். கண்டிக்கவேண்டியவற்றைக் கண்டிக்கத் தயங்கமாட்டார். அவரிடத்தில் ஒரு புறத்திலே அஞ்சா நெஞ்சமும் வீரமும் மறுபுறத்தில் அன்பும் அருளும் காணப்பட்டன.

வட இலங்கைச் சர்வோதயத்தின் தலைமைக் காரியாலயத்தினைப் புங்குடு தீவில் அமைத்து அதன் செயற்பாடுகளைச் செயற்படுத்துமுன் அவற்றை நன்கு அலசி ஆராய்வதற்காக அவ்வத்துறை சார்ந்த அதிகாரிகள், நிபுணர்கள் முதலியோரை அங்கு வரவழைத்து நிபுணத்துவ ஆலோசனை பெறுவார். அங்கு வரும் எவரையும் நன்கு உபசரித்து வழியனுப்புவார். அவர் செய்யும் எவ்வேலையும் நன்கு செய்யப்படும். "செய்வன திருந்தச் செய்". எனவே எதிலும் ஓர் ஒழுங்கு முறையை அவர் பின்பற்றுவார்.

இவர் சர்வோதயம் தொடர்பாக இந்தியா, ஜேர்மனி போன்ற வெளிநாடுகளுக்கும் சென்று திரும்பியவர். தமிழிலே நல்ல தேர்ச்சி பெற்றவர். சில கட்டுரைகளும் அறிக்கைகளும் எழுதியுள்ளார். அவற்றைவிட "தீவகம்" எனும் மாத இதழையும் சிறிது காலம் வெளியிட்டார்; புங்குடுதீவின் வரலாற்றிலும் மிக்க ஈடுபாடுள்ளவர். சென்ற நூற்றாண்டின் எண்பதுகளிலே யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் சி. க. சிற்றம்பலமும் இந்துநாகரிக விரிவுரையாளர் திரு. மா. வேதநாதனும் யானும் இவ்விடத்திலுள்ள சில தொல்லியல் தடயங்களைப் பார்க்க வந்தபோது அனைவரையும் உபசரித்து தமது வாகனத்திலே எங்களைப் பல இடங்களுக்கும் கூட்டிச் சென்று காண்பித்தார். சிலவற்றினைப் பற்றித் தானும் கூறினார். எங்களிடமும் வினாவினார். இந்த மேலாய்வின்போது ஊரதீவு ஐயனார் ஆலயத்திற்கு வடக்கேயுள்ள கடற் கரையிலே வட்டக் கற்களால் ஆன இரு கிணறுகள் தென்பட்ட செய்தி கூறப்பட்டது. இவை சுமார் இரண்டாயிரம் ஆண்டளவைச் சேர்ந்த பெருங்கற் பண்பாட்டுக்கு உரியவை எனக் கூறியபோது அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அப்போது மழைக் காலமாகையால் அவ்விடத்தை ஆராய முடியவில்லை. இவ்வாறு அவர் ஒரு பெரிய தகவல் களஞ்சியமாகவும் விளங்கினார்.

இவ்வாறு பல திறப்பட்ட அறிவும் அனுபவமும் செயற்திறனும் துணிவுமுள்ள ஒருவர் 62 வயதிலே அமரத்துவம் அடைந்தமை மிகக் கவலைக்குரியதே. இந்து சமய வேதங்கள் மனிதனின் வாழ்நாட்காலம் நூறு எனக் கூறும். எனவே அவர் இன்னும் நாற்பது ஆண்டுகளாவது வாழ்ந்திருக்கலாம். அவருடைய திடீர் மறைவு அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், சர்வோதயத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமன்றி இலங்கைத் தமிழ்மக்களுக்குக் குறிப்பாகத் தீவக மக்களுக்கும் ஒரு பேரிழப்பேயாம். அவர் பின்பற்றிய இலட்சியங்களைப் பின்பற்றுவதும் அவரின் நிறுவனம் தொடர்ந்து நிலவச்செய்வதுமே அவருக்கு நாம் செய்யக் கூடிய கைமாறாகும். அவரின் ஆன்மா அம்மையப்பர் திருவடிகளைச் சேர்வதாக!

புங்குடுதீவு - 4

**பேராசிரியர். வி. சிவசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வோதயப்
# பணியாளனாய்.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Thiru Malli was a Vibrant Leader

All of us in the Sarvodaya Movement of Sri Lanka are very grieved at the unexpected demise of Mr. K. Thirunavukarasu. First of all we would like to extend our condolences to his mother, sister, relatives and his co-workers in Jaffna.

Around 1970, when I was addressing a meeting in Jaffna Shri Thirunavukarasu was in the audience. Immediately after the meeting was over he came and spoke to me and expressed his desire to join the Movement. I promptly agreed and invited him to our headquarters in Moratuwa. He came to know all our leaders and within no time he earned the love and admiration of all of us. Subsequently, he was elected as a Vice President of the Sarvodaya Movement and he was in charge of the activities in the Northern Province. Up to 1983 Thiru Malli as we used to call him was a vibrant leader of the Movement not only in the North but also in other parts of the country. Everybody looked up to him as a golden bridge between Sinhala and Tamil people amongst whom a lot of suspicion, fear and alienation were taking place at that time. On my part I gave Thiru Malli all the assistance to carry out his work in Vavuniya, Mullaitivu, Mannar, Kilinochchi, Jaffna and Punguduthivu which benefited thousands of people in these areas. He was very grateful to me for giving him that opportunity.

Unfortunately, after 1983 he never visited the South as he took almost exclusively to spiritual work in his disturbed environment which gradually became more and more violent. However, whenever I visited Jaffna I never failed to visit him and pay my respects to him. We continued our work with brother Kadiramalai (who was assassinated) and others.

About three months ago Mr. Thirunavukarasu started corresponding with us again and also he was about to visit us and reestablish the old relationships with the Movement and its members. He, in fact got down photographs of my family as he was anxious to know how they were doing.

I took Thiru to Belgium in 1982 when I received the King Boudwin Award in Brussels. Subsequently, I took him to Germany, Netherlands,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Switzerland and several other places introducing our Sarvodaya friends. The Helvetas Organization in Switzerland was very fond of him and always enquired about him whenever I visited them.

Unfortunately, when Thiru Malli was about to begin another era of services to his people in collaboration with the Sarvodaya Movement he suddenly left us to a more peaceful heavenly abode. This came to all of us as a shock and all who heard about it went to pay their last respects to him at Jayaratne Funeral Parlour before his earthly remains were taken to Jaffna.

Thiru was the most spiritually motivated, disciplined social leader in the North I came across. He led the life of a mendicant. The immense love he had for his people cannot be described in words. The passion he had for the peace and unity in our country was admirable. Sri Lanka lost a great son at this hour of her need. May Thiru Malli attain the supreme bliss of Moksha and Nirvana.

**Dr. A. T. Ariyaratne**
Founder and President of
Sarvodaya Shramadana Movement of Sri Lanka

No. 98, Rawatawatte Road, Moratuwa.
24th October 2001.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வோதயம் திருநா ஒரு பெருவிருட்சம்

சர்வோதயம் திருநா என்றால் ஒரு தனிமரத் தோப்பு. அனாதைகள், ஆதர வற்றோர், முதியோர் ஆறும் ஒரு பெரு விருட்சம், அவரின் அலுவலகம் ஒரு தெய்வ சந்நிதி போன்றது. தமிழ்த் தொண்டு, சமயத் தொண்டு. சமூகத் தொண்டு என அதில் ஒரு புதுமையும் ஆழமான ஒரு பண்பாட்டு பிரதிபலிப்பும் இருக்கும். இவரின் சேவையை மதிப்பிடுவது என்பது சாதாரணமான ஒரு விடயம் அல்ல. நிச்சயமாக வரலாற்றாசிரியர்களுக்கு சர்வோதயம் திருநாவுக்கரசு வாழ்ந்த காலத்தை ஆராயவேண்டியது தார்மீகப் பொறுப்பாக இருக்கும்.

ஒரு நல்லாட்சியில் என்ன என்ன திட்டங்கள் உள்ளதோ அத்தனை திட்டமும் அவரின் செயற்றிட்டத்தில் இருந்தது. பன்னாட்டு தொண்டர் நிறுவனங் கள் பல அவரின் சேவையை மதிப்பிட முகாமிட்டு இருந்த வரலாறுகளும் உண்டு. பன்னாட்டு தொண்டர் நிறுவனங்களுக்கும் சரி, எம்நாட்டு தொண்டர் நிறுவனங் களுக்கும் சரி தனது பூரண ஆதரவை வழங்கி கௌரவித்த ஒரு பெருந்தகை.

ஒரு தொண்டர் எப்படி இருக்கவேண்டும். ஒரு தொண்டு நிறுவனம் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு ஒரு உதாரண புருஷராக விளங்கியவர் சர்வோதயம் திருநாவுக்கரசு அவர்கள். மீளக்குடியமர்ந்தபின் அவர் செய்த சேவை மிகக் காத்திரமானது. குறிப்பாக, புங்குடுதீவிலிருந்து பல நடவடிக்கை களை ஆரம்பித்தார். அவற்றை குடாநாடு முழுவதும் விஸ்தரிக்க இருந்தார்.

தனியொரு மனிதனாலும் சாதனை செய்யமுடியும் என்பதை புங்குடுதீவு மருத்துவ முகாம் கடந்த வருடம் ஒரு முன்னுதாரணமாக அமைந்திருந்தது. ஒரு காலத்தில் பெரும் தொண்டர் படை அணியையே வழிநடத்திய பெருமை திருவிற்கே உரியது. இருந்தும் மீளக்குடியமர்வின் பின் நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் தொண்டர் சேவையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்குத் தனது அதிகூடிய உதவியும் ஊக்கமும் வழங்கி வந்தார்.

தீவுப்பகுதியில் மட்டுமன்றி குடாநாடு, பளை, கிளிநொச்சி வரை வடபுல சர்வோதயம் ஊடாக சமூகத்திற்குத் தன்னை அர்ப்பணித்தவர். இந்த உன்னத மனிதர், உயர்ந்த பண்பாளர் இன்று தமிழ் தேசத்திற்கு தேவையான ஒரு சிந்தனை யாளர், செயல்வீரர். அவர் பாரிய இடைவெளியை விட்டுச் சென்றுள்ளார். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. ஆனால், இவரின் செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதற்கு இவரின் தனித்துவமான வட இலங்கை சர்வோதயத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க இன்று தலைமை ஏற்றிருக்கும் அவரின் அன்பு சகோ தரிகள் புஸ்பமணி, யமுனா இருவருக்கும் எம்மால் முடிந்த உதவிகளைச் செய் வதே சர்வோதயம் திருநாவுக்கரசு எனும் பெரியாருக்கு நாம் செய்யும் கைமாறாம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் குடும்பத்தினரது ஆறுதலுக்காகவும் பிரார்த்திக்கின்றேன்

சாந்தி!

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
வேலணை பிரிவு, தீவுப்பகுதி தெற்கு.

**ஆறுமுகம் சபாநாதன்**
கௌரவ தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன் திருவடியில் எம் கண்ணீர் பூக்கள்!

மண்ணையும் மக்களையும் மறக்க வைக்கும் நிகழ்வுகள் நடக்கும் இக்கலியுகத்தில் பிறந்த மண்ணில் இருந்துகொண்டே எம்மக்களுக்கும் மண்ணுக்கும் திருச்சேவையாற்றி வந்த எமது அண்ணர் அறங்காவலர், சர்வோதயத் தலைவர், சர்வோதய திலகம் அமரர் திருநாவுக்கரசு அவர்கள் இயற்கையை சிரிக்க வைத்துவிட்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றுவிட்டார்.

தம் மக்கள் அபிவிருத்திக்காக தம் மண்ணில் உதித்த நலன்விரும்பி களிடம் தனது பணியை பற்றிப் பிடிக்க வைத்துவிட்டு இறைவனின் திருச்சேவைக்காக இறைவன் தாள் பற்றிச் சென்றுவிட்டார்.

அண்ணரின் ஆத்மா சாந்தி பெற, அவரின் புனிதப்பணி தொடரவுமெனப் பிரார்த்திக்கிறேன்.

என் கண்ணீர்ப் பூக்களை உன் திருவடியில் காணிக்கையாக்குகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சி. சிவராஜா
முகாமையாளர்

தேசிய சேமிப்பு வங்கி,
கொட்டாஞ்சேனைக் கிளை
புங்குடுதீவு - 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேவைகளின் சிகரம் தொண்டர் திரு ....!

தமிழ் மக்கள் மத்தியில், தொண்டுக்கே தம் வாழ்வை அர்ப்பணித்து, சுயநலம் அற்று பொதுநலனையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் குறைவு. எமது காலத்திலேயே, எம் கண் முன்னேயே அப்படிப்பட்ட ஒரு மாபெரும் தொண்டர் பணியாற்றி வந்தார். அவர் தான் எமது கிராமம் பெற்றெடுத்த, என்றும் மக்களால் 'தொண்டர் திரு' என்று அழைக்கப்பட்ட அமரர் க. திருநாவுக்கரசு அவர்கள்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதற்கமைய, இளமைக்காலம் முதல் மண் பற்று மிக்கவராக, பிறந்த கிராமத்தின் அபிவிருத்தியே கனவும் நினைவு மாகக் கொண்டு உழைத்தவர். தன் முயற்சியினால் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று ஈழத்தின் வட பகுதியிலுள்ள கிராமங் களின் அத்தியாவசிய அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியவர்.

இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட தீவகத்தைப் பசுமையாக்கப் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்பட்டவர். நீர்த்தேக்கங்கள் அமைத்தல், மரங்கள் நாட்டல், நல்லின கால்நடை வளர்ப்பு, விவசாய ஊக்குவிப்பு எனத் தீவகத்தின் தன்னிறைவைக் காண இறுதிவரை பாடுபட்டவர்.

யான் சிறுவனாயிருந்த காலத்தில், எனது தந்தையார் தலைமையில் பாடசாலை மாணவர்களையும் இணைத்து நயினை நாகபூஷணி அம்மன் ஆலய திருவிழாக் காலத்தில் கடலிலும் தரையிலும் தொண்டர்சேவையில் திரு ஈடுபட்டமை இன்றும் எனக்கு ஞாபகம்.

யாரைச் சந்தித்தாலும் அவரது கல்வி, அறிவு, ஆற்றலைக் கொண்டு என்ன சேவையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கலாம் என்றவாறாகத்தான் திருநாவுக்கரசு கதைப்பதை யான் பார்த்திருக்கிறேன். அவரது சிந்தனை எப்பொழுதும் கிராமங்களின் அபிவிருத்தி குறித்தேயிருந்தது. தீவகத்திற்கு அவரது சேவை அளப்பரியது.

நாடகத்துறை மூலம் மக்கள் மத்தியில் அறிமுகமாகி, அரசியலில் வளர்ந்து, பொது வாழ்க்கைக்கே தன்னை அர்ப்பணித்து, சேவைகளின் திலகமாக மக்கள் மனங்களில் இடம்பிடித்த 'திரு'வின் திடீர் இழப்பு தமிழ்மக்களுக்குக் குறிப்பாகத் தீவக மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அவரை நேசித்த, மதித்த அவர் வழிவந்த தம்பிகள், தொண்டர்கள், மக்கள் அவர் விட்டுச்சென்ற பணிகளை முன்னெடுத்துச் செல்வதுதான் அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

திருவின் நாமம் நின்று நிலைக்கும்.

பிரான்ஸ்

**கலாநிதி க. தேவமனோகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'சேவைக்கு ஒரு திருநாவுக்கரசு'

கிடைத்தற்கு அரியது மானிடப் பிறவி. அப்படிக் கிடைத்த பிறவியை பயன் தரும் வகையில் பயன்படுத்துபவர் சிலரே. "மனிதனாகப் பிறந்தவன் மனிதனுக்குச் சேவை செய்வதையே தன் கடனாகவும், கடமையாகவும் கொள்ளல் வேண்டும்". இந்த வகையில் எம்முடன் வாழ்ந்து அமரரான கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் ஒரு தனி மனிதர். 1986ம் வருடம் கதிர்காமத்தில் ஒரு சமாதானப் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை அகில இலங்கைச் சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரட்ணா அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பல அமைப்புக் களைச் சார்ந்த பொறுப்பான பதவிகளில் இருந்தவர்கள் வந்து கலந்துகொண்ட கூட்டம். வவுனியா ஸ்ரீ சத்தியசாயி சமித்தியின் தலைவர் என்ற முறையில் நானும் மற்றும் பல அமைப்புக்களைச் சேர்ந்தவர்களுமாக மொத்தம் 50 பேர் கலந்து கொண்டோம். ஸ்ரீ தலதா மாளிகை தியவதனநிலமையும் வந்திருந்தார். கலாநிதி ஏ. ரி. ஆரியரட்ணா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. எல்லோரும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களைப் பற்றி அறிமுகம் செய்துகொண்டோம். அதேவேளை தனது பேச்சைத் தமிழில் மொழிபெயர்க்கும்படி கலாநிதி ஆரியரட்ணா என்னைக் கேட்டுக் கொண்டார். இன்றைய கூட்டத்தின் நோக்கம் பற்றியும் சர்வோதயத்தின் ஆக்கபூர்வமான பணிகளையும் கூறிவிட்டு, தமிழ்ப் பிரதேசங்களில் தமது செயற்பாடுகளைக் கூறும்போது, வவுனியாவில் ஒரு கதிரமலை, யாழ்ப்பாணத்தில் ஒரு திருநாவுக்கரசு இந்த இருவரும் ஆற்றும் சேவைக்கு நிகரே இல்லை என்றார்.

"இன்றைய சூழ்நிலையில் நாங்கள் வவுனியா வரை சென்று எமது சேவைகளைக் கவனிக்க முடிகின்றது. ஆனால், யாழ்ப்பாணம் சென்று வர பலவிதமான தடங்கல்கள் எமக்கு இருந்தபோதிலும் எவ்வித குறைபாடுகளும் இல்லாமல், எல்லோரும் வாயாரப் புகழ்ந்து பேசும்படியாகவும் மேலும் மேலும் இச்சேவை வளர வேண்டும் என்று வாழ்த்தும்படியாகவும் சேவையாற்றி வருகின்றார் ஒரு மனிதர். அவர்தான் புங்குடுதீவு சர்வோதய அமைப்பாளர் திருநாவுக்கரசு அவர்கள். அவரின் ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் அவருக்கு நிகராக எவரும் இல்லை என்றுதான் கூறுவேன்" என்றார். அதாவது, சர்வோதயம் என்றால் திருநாவுக்கரசு. திருநாவுக்கரசு என்றால் சர்வோதயம் என்ற ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்திப் பெருமை பெற்றார். 'காய்த்த மரத்திற்கே கல் எறி விழுவது வழக்கம்' இதற்கு அமரர் 'திரு'வும் விதிவிலக்கல்ல. பலதரப்பட்ட எதிர்ப்பலைகளை எல்லாம் தாண்டி தான் எடுத்துக்கொண்ட கருமத்தைச் சிறிதும் தளம்பாமல் வளர்த்தெடுத்து வந்தார்.

இவர் பல நிறுவனங்களின் தலைவராகவும் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்து செயற்பட்டார். தனக்கென வாழாமல் சமுதாயத்திற்காகவே தன் வாழ்வும் தாழ்வும் என்று உழைத்த ஓர் உத்தமர். 1956ம் ஆண்டளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருந்து பலதரப்பட்ட அரசியல்வாதிகளுடனும் பல்துறை சார்ந்த பெரியோர்களதும் தொடர்பு அரசியல் துறையிலும் சமூகசேவைத் துறையிலும் இவரை ஒரு முழு மனிதனாக ஆக்கியது என்றால் அது மிகையாகாது. காலப்போக்கில் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்ட அமரர் திருநாவுக்கரசு சமூகசேவையில் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்தார்.

இவரின் இளமைக்காலம் பெரும்பாலும் அரசியல் வாழ்வில் கழிந்தது. மேடைப் பேச்சில் தனக்கென ஒரு தனித்துவத்தைக் கையாண்டு நாவிற்கு அரசனாகத் திகழ்ந்தார். இன்றைய சமுதாயம் இவரின் பேச்சின் ஆற்றலையும் செயற்பாட்டின் திறனையும் ஓரளவுதான் அறிந்திருக்கும். தான் எடுத்த கருமம் எதுவோ அதனைச் சோர்வின்றிச் செயற்படுத்தும் ஒரு திறமைசாலி. பழம்பெருமை மிக்க பெருங்காட்டுக் கந்தசாமி, கோயிலைப் புனரமைத்து திருப்பணிகள் பல செய்து சிறந்த முறையில் கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்ற ஒரு விருப்பில் செயற்பட்டார். சந்தர்ப்ப சூழ்நிலைகள் இவரின் நோக்கத்தை நிறைவு செய்ய முடியாது தடைசெய்து விட்டன. இதனால் இவர் பெரிதும் மனம் வருந்தி இருந்தார் என்பதை 14. 02. 2001 அன்று இவருடன் பிரயாணம் செய்யும் போது அவரின் உரையாடல் மூலம் அறிந்தேன். அவருடைய மனத்தாங்கலுக்கு ஆறுதலாக "ஐயா! எப்பொழுது முருகன் நிலைபெயர்ந்தானோ அப்போதே தீவகமும் நிலை தடுமாறிவிட்டது. மீண்டும் அவன் தன் இருப்பிடம் சேரவும் துன்பமும் நீங்கலாம் அல்லவா! ஆகவே, 'ஆவது ஆகும் காலத்து ஆகும்' நீங்கள் வீணாக மனதை அலட்டிக்கொள்ள வேண்டாம்" என்றேன். எனது வார்த்தைகள் அவருக்கு எப்படிப் பட்டதோ தெரியவில்லை. இப்படியான ஆறுதல் வார்த்தையினைத் தான் எதிர்பார்க்கவில்லை எனக் கூறினார். இதிலிருந்து நான் உணர்ந்த ஒரு உண்மை முருகனின் திருப்பணியின் நாட்டம் இவரை வாட்டிக் கொண்டு இருந்தது என்பதுதான்.

அனைத்து தீவக மக்களின் கடற் பிரயாணமும் குறிகட்டுவான் ஊடாக நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் திடீர், திடீர் எனப் படகுச் சேவைகள் தடைப்படும். பல நூறு பிரயாணிகள் நாட்கணக்காக புங்குடுதீவில் தங்க நேரிட்ட காலங்களில் சிறிதும் மனம் சலிக்காது அத்தனை பேருக்கும் தங்குமிட வசதியும் உணவும் வழங்கிய சிறந்த மனிதர், இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த நாட்களில் உணவகங்களில் வந்து உணவுப் பொதிகளை எடுத்துச் சென்ற காட்சியைக் கண்டு மனம் தளர்ந்தேன். இது வெறும் வார்த்தையல்ல, உண்மை. 1997ம் வருடம் என ஞாபகம். வேலணையில் உள்ள எனது பணிமனைக்கு வந்த அமரர் அவர்கள் தான் புங்குடுதீவுக்குச் சென்று வந்ததாகவும் தனது அமைப்பின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் சேதங்களின் மொத்தப் பெறுமானம் எவ்வளவு என்று கூறமுடியாது என்றாலும் மதிப்பீட்டுத் தொகை எதுவோ அதனைத் தருவதாகவும் என்னைச் சிபார்சு செய்து தரும்படியும் ஏதோ கிடைப்பதைக் கண்டுகொள்வோம் என்று கூறினார். "கண்டிப்பாகச் செய்து தருகின்றேன். கோரிக்கையைத் தாருங்கள்" என்றேன். அதன்படியே தந்தார்கள். என்னால் ஆனதைச் செய்தும் கொடுத்தேன்.

மீண்டும் ஒரு நல்ல நிலைக்கு புங்குடுதீவையும் சர்வோதயத்தினையும் கொண்டுவரவேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்த வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறைவனடி சேர்ந்துவிட்டார். இவரின் இழப்பு இழப்புத்தான். எப்படியெப்படி ஆறுதல் கூறினாலும் அவரை இழந்து துயருறும் அவரது உடன்பிறப்புக்கும், உறவினர்களுக்கும் தேறும் நிலை ஏற்படாது. எல்லாம் வல்ல கந்தன் கருணைதான் இவர்களுக்கு இனி ஆதாரம்.

"நாவினுக்கு அரசே! நற்றமிழ் சொல்லால் துயர் துடைக்க முடியாது எனக் கண்டு மனிதனாகப் பிறந்தவன் மனிதனுக்குச் சேவை செய்வதே தருமம் எனக் கண்டு சேவை செய்தீர். அந்த சேவையே தரும தேவதையாக உங்களை அழைத்துக்கொண்டது" எனச் சாந்தி பெறுகின்றோம்.

வாழ்க 'திரு'நாமம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**கா. ஆ. தியாகராசா,**
தலைவர்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

முன்னாள் உதவி அரச அதிபர் - வேலணை
நயினாதீவு
12. 10. 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிழல் தந்த கற்பகத்தரு சரிந்தது!

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்னும் பொய்யாமொழிக்கிணங்க இவ்வுலகில் வாழ்ந்த வள்ளல் பெருமகன்! வாழ்நாளில் எல்லோர்க்கும் முன்மாதிரியாக வாழ்ந்து, வழிகாட்டி, வாரி வழங்கிய கற்பகதரு! இன, மத, பேதமின்றி நிழல் தந்த கற்பக தரு! பிறரின் மனச்சுமைக்கு வடிகாலாய், சுமைதாங்கியாய் விளங்கியதுடன் சிறந்த கூட்டுறவாளனாகவும் மக்கள் தொண்டனாகவும் பல்வேறு நிலைகளில் இப்பெரியார் வாழ்ந்த வாழ்க்கை ஒரு முன் உதாரணம்தான்.

அன்னாரின் மரணச் செய்தியைக் கேட்டபோது உளம் தாங்கொணாத வேதனை அடைந்தது.

தமிழரின் தலையாய பண்பான விருந்தோம்பலுக்குத் தீவுப் பகுதிகளில் புங்குடுதீவும் ஒன்றெனப் போற்றப்படும். இப்புண்ணிய தீவகத்தின் மத்தியில் அறிவுக்கும் பண்புக்கும் மனித நேயத்திற்கும் சிறந்து விளங்கியது சர்வோதய இல்லம். இப்புனித இல்லத்தின் சிறப்பை நிலை நிறுத்திய பெருமை அதன் தாபகர் அமரர் கந்தையா திருநாவுக்கரசு அவர்களையே சாரும்.

மனித குலத்திற்கு ஈடு இணையற்ற வழிகாட்டியாக வாழ்ந்த பெரியார். அன்னாரின் பிரிவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் புங்குடுதீவு வாழ் மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சுகிறேன்.

**சு. கணேசலிங்கம்,**
தபால் அதிபர், அனலைதீவு,
உபதலைவர் நெடுந்தீவு
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வோதயமும் சமூகத் தொண்டரும்

சைவமும் தமிழும் தன்னகத்தே மணக்கச் சிந்திக்கிடந்த தமிழர் அறங்கள் சீர்குலைந்து போகாது "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற தாரக மந்திரத்தை தமது இலட்சியமாக்கி இவ்வுலக வாழ்வை நகர்த்தி கற்றவர்க்கும் மற்றவர்க்கும் ஏற்றவகையிலே பல்வேறான வளர்ச்சிப் பாதையில் வாழ்ந்து காட்டியவர் பொன்மனச் செம்மல் உயர்திரு க. திருநாவுக்கரசு ஐயா அவர்கள்.

யாழ்ப்பாணத்தில் மூலைமுடுக்குகளெல்லாம் பல்வேறு அமைப்புக்களும் நிறுவனங்களும் தேங்கிக் கிடந்தபோதிலும் வடமாநில மக்களின் சின்னமாக விளங்குவது வட இலங்கை சர்வோதயமே ஆகும். அதற்குக் காரணமாக அமைந்தவர் உயர்திரு. திருநாவுக்கரசு ஐயா அவர்களே. கிராமங்களின் அடித்தளத்திலிருந்து தேசத்தை நோக்கி எழுந்த இவ் அமைப்பின்மூலம் எமது மக்களுக்கும் மண்ணிற்கும் என்னென்ன பணிகளை எப்படி எச்சந்தர்ப்பங்களில் வழங்கவேண்டுமென்று இரவு பகலாகச் சிந்தித்து சட்டம், ஒழுங்கு வழி தவறாது நின்று செயலாற்றியவர்.

''செய் அல்லது செத்துமடி'' என்ற பதத்தினை எம்முன் வைத்து இத்தேசத்தின் சிறந்த தொண்டர்களை உருவாக்கியவர். அவர் உருவாக்கிய சேவைக்கும் தொண்டுக்கும் பல்துறைகளிலுமுள்ள சேவை நலன்களிலும் அவர் தொண்டர்கள் இருப்பது இங்கு குறிப்பிடவேண்டிய அம்சமாகும். அப்படிப்பட்ட மாமனிதனின் வழியால் சென்று வளர்ந்தோர் தொகை, இன்று வட மாநிலத்திலிருந்து வெளிநாடுவரை ஓர் நீண்ட பட்டியலை உருவாக்கியுள்ளது.

இருப்பினும் சர்வோதயப் பணிகளூடாகச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் நெடுந்தீவு தொடக்கம் மன்னார் வரையுள்ள சுமார் 23 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள ஆயிரக்கணக்கான கிராமங்களை சுயநிர்ணய சேவையில் வழிகாட்டி வளர்த்துள்ளார். 1987ஆம் ஆண்டு சேமிப்புத்திட்ட ரீதியாக ஒவ்வொரு மனிதனும் தான், தனது என்ற மரபுமுறை வாழ்க்கை அமைய ஊக்க மளித்ததோடு குடும்பம் என்ற சிறுவட்டத்தில் இருந்தவர்களை எல்லாம் கூட்டுவாழ்க்கை வாழப் பயிற்சியளித்து உள்ளவன், இல்லாதவன் என்ற வர்க்க பேதங்களையும், சடங்குகள் கிரியை முறைகளையும், கிராம மக்களின் பண்பாடு, கலை கலாசாரங்களூடாகக் கட்டியெழுப்பப் பாடுபட்டவர். அத்துடன் அரசியல், பொருளாதார நெருக்கடிகளிலும் இயற்கை அனர்த்தங்கள் வந்து மக்கள் வாழ்வைச் சீர்குலைத்த வேளையிலும் தெய்வ நம்பிக்கையுடனும் தற் துணிவுடனும் இன்முகத்துடன் நின்று பொதுநல அமைப்புக்களுடன் மக்கள் குறை தீர்க்கவும் தோளோடு தோள்நின்று தொண்டாற்றினார்.

கிராம மகாநாடுகள் மாதாந்தம் நடாத்தி மக்களின் தேவைகள் அறிந்து திட்டங்களை வகுப்பதுடன் நின்றுவிடாமல் சொல்லைச் செயலாக்கிச் செயலைச் சொல்லுபவர். பொதுவாக எங்கு நல்லது இருக்கின்றதோ அங்கு நற்பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்வார். இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள பல திறமை வாய்ந்த தலங்கள், அமைப்புக்களைப் பயிற்சிகள்மூலம் எமக்கு அறிமுகப்படுத்தியும் பயிற்சியாளர்களை அனுப்பியும் அறிவுத்தேடல் பெற்றுத் தந்தவர்.

அது மட்டுமன்றி கிராமக் கழகங்கள், சிரமதான சேனை, தமிழ்ச் சங்கம், குடும்பக் கழகம் போன்றவற்றை ஒவ்வொரு கிராம மக்களிடையேயும் ஏற்படுத்தி அவற்றினூடாக அந்தந்தப் பிரதேசங்களிலோ அல்லது கிராமங்களிலோ நடைமுறைப்படுத்தவேண்டுமென்று 1992ஆம் ஆண்டை திட்ட ஆண்டாகப் பிரகடனப்படுத்தி உறுதியான அமைப்புகளை உருவாக்கியவர்.

கிராம விழாக்கள் மூலம் அழிவின் விளிம்பில் செல்லும் மனிதநேய, அற, ஒழுக்க சிந்தனைகளை வளர்க்கவும் இன்றைய சமுதாயத்தை நல்நெறிவழிச் செல்லவும் தூண்டுதலாக அமைந்தவர். குறிப்பாக, ஔவையார் அருளிய நீதிநூற் பாடல்களையும் வள்ளுவப் பெருந்தகையாரின் திருக்குறள் போன்ற அற நூல்களையும் மாணவ சமூகத்திற்கு மனனப் போட்டிகளினூடாக உணரச்செய்து பரிசில்களும் வழங்கியவர். இச்சந்தர்ப்பத்தில் படித்தவரும் பாமரரும் கூடப் பொருளுணர்ந்து கொண்டனர் என்று கூறலாம்.

பிடியரிசிப் பிரார்த்தனை செய்து அறங்கள் பெருகவும் தர்மம் பூக்கவும் வளம் பெருகவும் வழிகாட்டியதோடு பிரசித்தி வாய்ந்த ஆலயங்களில் அன்ன தான நிகழ்வுகள் நடைபெறவும் வழிவகுத்தார். அத்துடன் கோமாதா பூசைகளும் சிறப்பாக நடாத்தினார்.

கிராம சிரமதானம், தொகுதிச் சிரமதானம் எனப் பல முகாம்கள் அமைத்து அங்கு தானே முன்நின்று பணிகளை முடிப்பவர்.

1991ஆம் ஆண்டு தீவக இடப்பெயர்வினால் எமது அமைப்பின் கூட்டமைப் புக்களும் பொருளாதார தளர்ச்சியைப் பாரிய அளவில் சந்தித்த போதிலும் மக்கள் சொத்துக்களைப் பறிகொடுத்துப் பதறி நின்ற வேளையிலும் அவர் களுடன் ஆறுதலுரையாடி, தன்னாலான பணிகளைச் செய்தும் செய்வித்தும் ஆதரவளித்தவர்.

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு
அணியல்ல மற்றுப்பிற."

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி - தன்
மெய்வருந்தக் கூலி தரும்"

என்பதற்கு இலக்கணமாக யாத்திரைகளையும் நற்சிந்தனை முற்றோதல் நிகழ்வுகளையும் வருடந்தோறும் நடாத்தியதுடன் பக்தர்கள் பணியாக நல்லூர் வழிபாட்டாளர் நலன் சேவைப்பந்தல், சாவகச்சேரி மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் பொங்கல் பிரசாதப் பந்தல், மாதந்தோறும் மறவன்புலவு செல்வ முத்துமாரியம்மன் கோமாத பூசை சாவகச்சேரி வாரிவளவு ஈஸ்வரர் ஆலய சிரமதானம், கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் கங்கைப்பொங்கல், என்பனவற்றை இடம்பெயர்வு காலத்திலும் இனிதே நடாத்தியுதவினார்.

1995 யாழ்ப்பாண இடப்பெயர்வும் 1996 தென்மராட்சி இடப்பெயர்வும் சேவைக்குத் தடைகளாக அமைந்தபோதிலும் தளராது அவற்றைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படிக்கல்லாக்கி 1997ஆம் ஆண்டு மீண்டும் புதிய வடிவத்தில் பணிசெய்யத் தவறவில்லை. 1998ஆம் ஆண்டு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் கைகொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சைக்கிள் கடன் திட்டம், நகைத்திட்டம், சிறுவர் சேமிப்புச் சேவைத் திட்டம், சாதாரண சேமிப்புத்திட்டம் என்றும், பசுவிற்குத் தீனி வழங்கும் திட்டம், புனரமைப்பு புனர் நிர்மாணத்திட்டம் என்றும் எண்ணிலடங்காத செயற்றிட்டங்களையும் பணிகளையும் எண்ணியெண்ணி இரவு பகலாக எடுத்துச் சொல்வார். சொன்னபடி செய்வார்.

"நினை - செய்", நல்லதை நினை - நல்லதைச் செய் என்ற குருநாதன் கூற்றை நினைத்துச் செய்ய நீங்கள் போட்ட திட்டம் நிறைவேறமுன்னே திருவடி பணிந்து எம் குருவடிவாகினீர். போற்றுகின்றோம் உம் பாதம். ஆற்றமுடியாத இப்பணிக்கு மீண்டும் அருகில் வந்து தேற்றுமையா! வழி காட்டுமையா!

ஓம் தத் சத் ஓம்!

சேவைக்குரிய சோதரி

**இ. யோகேஸ்வரி**

வட இலங்கை சர்வோதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறநெறி காட்டிய அண்ணல்

எத்தனையோ சேவைத்திட்டங்களை எழுதி அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றுவதற்கான காலம் கனிந்து வரும் வேளையில் அறங்காவலுருக்கு அஞ்சலியுரை எழுதவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. ஈழமண்ணிற்கு ஏற்பட்ட பெரும் இழப்பாகும்.

"கடன் என்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

என்றார் வள்ளுவா.

சான்றாண்மை என்னும் மிகப் பெருங்குணத்தை உடையவர்கள் நல்ல காரியமென்று தமக்குத் தெரிகின்ற எல்லாவற்றையும் எப்போதும் யாருக்கும் கடமையாகக் கருதியே செய்வார்கள். ஆதலால் நல்லது என்று தெரிந்த எல்லாக் காரியங்களையும் கட்டாயமாகச் செய்யவேண்டிய கடமைகளாகக் கருதுகின்ற பெருங்குணம்தான் "சான்றாண்மை".

தெய்வப் புலவனின் வாக்கிற்கிணங்க தமிழர்களின் அறங்கள் முப்பத்து இரண்டையும் புதியமுறையில் நடைமுறைப்படுத்த பலவழிகளிலும் திட்டமிட்டு செயற்படுத்திவரும் வேளையில் இப்பெருமகனாரது இழப்பு தமிழர் பண்பாட்டு வளர்ச்சிக்கே பெரும் இழப்பாக அமைந்துவிட்டது.

தமிழர் வாழ்வில் கூட்டுக்குடும்ப வாழ்வின் சிறப்பம்சங்களை மீட்டெடுக்கும் வகையினில் குடும்ப நிதிய திட்டங்களையும், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நீதி நூல்களில் மனனப்பயிற்சி பெறத்தக்கவகையில் மனனப் போட்டிகளையும் அறப்பணிகளில் எல்லாக்குடும்பங்களையும் ஒன்றிணைக்கும் நோக்கமாக பிடியரிசிப் பிரார்த்தனைத் திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தி அதன்மூலம் வடபகுதி ஆலயங்கள் பலவற்றிலும் பிடியரிசிப் பிரார்த்தனை அன்னதானங்களையும் சிறப்புற நடாத்தி இவற்றின்மூலம் இப்பணிகளில் கடைப்பிடிக்கவேண்டிய தூய்மைத் தன்மையையும் புனிதத்தையும் பலருக்கும் பயிற்சியாக வழங்கினார். வாழ்விற்கு உயர்நெறியாக உருக்காட்டினார்.

1979ஆம் ஆண்டு தொல்புரம் மத்திய சனசமூக நிலைய நிர்வாக சபையின் அனுசரணையுடன் சர்வோதயத்துடன் ஏற்பட்ட தொடர்பினால், ச. ச. நி. தலைவர் திரு. கா. சின்னத்துரை (இளை. ஆசிரியர்), செயலாளர் திரு. மு. சடாட்சரம் ஆகியோர் மேற்கொண்ட பெரும் முயற்சிகளின் காரணமாக உறவுகள் வலுப்பட்டு, திரு. கா. சின்னத்துரை ஆசிரியர் அவர்கள் புங்குடுதீவு சர்வோதயத்தில் பெற்ற பயிற்சி காரணமாக கிராம ஊழியராக நியமிக்கப்பட்டபின் அன்னாரது தலைமையில் எமது கிராமத்தின் பொதுப்பணிகளுக்குப் புத்துணர்ச்சி அளிக்கப்பட்டும் சிரமதான இயக்கத்திற்கும் புதுமெருகு ஏற்றப்பட்டும் சகலரின் ஒத்துழைப்புடனும் பல துறைகளிலும் வளர்ச்சி கண்டது.

இப்பணிகளினால் நன்கு கவரப்பட்ட அறங்காவலர் அவர்கள் 'தொல்புரம்' என இயற்பெயராக அமைந்த எம் கிராமத்தின் பெயர்மீது கொண்ட விருப்பத் தினாலும் புங்குடுதீவில் நடாத்தப்பட்ட சர்வோதய தத்துவப் பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வகுப்புகளைத் திறம்பட நடாத்தியவரும் அதன் வழியிலேயே தன் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டிருந்தவருமான "தொல்புரக்கிழார்" அமரர் நா. சிவபாதசுந்தரனார் மீது கொண்டிருந்த பக்தி காரணமாகவும் எமது கிராமத்தில் தீவிர அக்கறை செலுத்தி பலவழிகளிலும் ஊக்குவிப்புக்களை வழங்கி வந்தார். அங்கு சர்வோதயப் பணிகளுக்காக ஒரு காணியை முன்னின்று பெற்றுக் கொடுத்து, அங்கே ஓரு சேவை நிலையம், நன்னீர்க்கிணறு, வரவேற்பு மண்டபம், பொதுக்குசினி என்பனவற்றை அமைத்து உதவியதுடன் இந்நிலையத்தினை வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான தலைமை நிலையமாகவும் செயற்பட வழிவகுத்தார்.

1990ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச்சூழலினால் சீமெந்து தொடக்கம் சகல பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டதனால் தொழில் வசதியற்று பலரும் தவித்திருந்தவேளை, சிறு வயதுப் பிள்ளைகளின் போஷாக்கு நிலைமை பற்றி கருணையுடன் விசாரித்து, அவர்களின் போஷாக்கு வளர்ச்சிக்கு உதவும் வகை யில் காலை நேரத்தில் சத்துணவுக்கஞ்சி வழங்கவேண்டும் என்று தானே விருப்பம் தெரிவித்து, எம்மையெல்லாம் நேரில் அழைத்து அத்திட்டத்திற்கு வேண்டிய மூல உணவுப் பொருட்களையும் சமையல் உபகரணங்களையும் வழங்கியுதவினார். முதலில் 30 நாட்களுக்கென திட்டமிடப்பட்ட இப்பணி அறங்காவலர் அவர் களின் தூய நோக்கத்திற்கமைவாக - புனிதமாகச் செயற்படுத்தப் பட்டமையை நேரில் அவதானித்து மகிழ்ந்ததனால் மேலும் முப்பது நாட்கள் நீடிக்கப்பட்டதும் நாளாந்தம் 200இற்கும் மேற்பட்ட பிள்ளைகள் வயிறு நிறைந்து சென்ற காட்சியும் என்றும் மறக்கமுடியாதவையாகும்.

புங்குடுதீவில் அவர் நடாத்திய வேல்விழாவின்போது அவர் விரும்பியவாறு காவடி, கரகம், மயிலாட்டம் என்பன மூன்று மாதத்திற்கு முன்பிருந்தே எமது கிராமச் சிறுவர்களிற்குப் பயிற்சி வழங்கப்பட்டு அங்கு சென்று பலரையும் மகிழ்வித்ததும் அவர்களின் பாராட்டு, கௌரவிப்பு, பரிசளிப்பு உபசாரங்களினால் மகிழ்வித்தும் அதனைத் தொடர்ந்து யாழ் - மாவட்டமெங்கும் இக் கிராமியக் கலைகளை முறைப்படி பயிற்றுவிக்க நடவடிக்கை மேற்கொண்டமையும் அன்னாரது கலைத்துறை ஆர்வத்திற்கும் சான்று பகர்வனவாகும்.

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது என்பதற்கிணங்க இரவு பகல் ஓய்வின்றியும்; கையில் மணிக்கூடு கட்டாமலே குறித்த வேலையை குறித்த நேரத்தில் செய்து முடிக்கும் பாங்கும்; எண்ணிய காரியத்தில் திண்ணியராவதும்; இனியசுபாவம், நிதானம், ஆத்மசக்தி, பொறுமை, ஞானம், வீரம் ஆகிய பண்பட்ட மனதின் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டு நடமாடும் பல்கலைக்கழகமாக வாழ்ந்த அறங்காவலர் அவர்களை இயற்கையின் நியதியினால் இடைக் காலத்தில் இழக்க வேண்டியிருப்பினும் அவரின் மேலான பல எண்ணங்களின் விதைகள் உலகளாவிய ரீதியில் பலரின் மனதில் விதைக்கப்பட்டுள்ளன. இவை பெரும் விருட்சங்களாகிப் பலருக்கும் பயன் கொடுக்க அன்னாரது புனித ஆத்மா உந்துதல் வழங்கிக்கொண்டேயிருக்கும்.

**கி. நடராசா**

வட்டுக்கோட்டைத் தொகுதி
நிர்மாண சேவையாளர்கள்,
குடும்பக் கழகங்கள், அங்கத்தினர்கள் சார்பில்
தொல்புரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டினைத் தொடர வைக்கும் உறுதியுந்த கொழும்பு வந்த திரு இறுதியாகச் செய்த பெருந் தொண்டு


கொழும்பு - புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகத்தை நிறுவிய நேரக் காட்சிகள் (30.09. 2001)

கொழும்பு - புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகம் உதயமானபோது மங்கல விளக்கேற்றுகிறார்கள் திரு. த. குழந்தைவேல், திரு. சி. முருகானந்தவேல், திருமதி. தி. இராசேஸ்வரி




நான் இல்லாவிட்டாலும் என் நாடிருக்க வேண்டும் அமையுங்கள் கழகத்தை என்று அண்ணன் 'திரு' ஆணையிடுகின்றாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தம்பி வா - தலைமை தாங்க வா
என்ற அண்ணனின் அழைப்பைத் தயங்கிய படி
ஏற்கும் கழகத் தலைவர்- வி. ரி. தமிழ்மாறன்




கழகத்தின் பணிகளுக்குப் பக்கபலமாக நிற்பேன் என்று உறுதியுரைக்கும்
காப்பாளர் - கொட்டாஞ்சேனை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர்
திரு. சி. சிவராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திட்டங்களுக்கு ஆலோசனை வழங்கும் பேராசிரியர் கா. குகபாலன், புங்குடுதீவின் இன்றைய தேவைகளை விளக்கும் வட இலங்கை சர்வோதய இயக்குனர் செல்வி பொ. ஜமுனாதேவி ஆகியோர்



கழகத்தின் செயற்பாடுகளுக்கான கருத்துக்களை முன்வைக்கும் ஓய்வுபெற்ற நில அளவையாளர் திரு. எஸ். தனபாலசிங்கம், ஓய்வுபெற்ற பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயற்திட்டங்களை ஆலோசிக்க ஆரம்பித்துவிட்ட
கழகத்தின் தலைமை நிர்வாகிகள்



நன்றி கூறும் திரு. சி. மு. நாகரத்தினமும்
கூட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வல்லோன் இவனொருவன்

*சர்வோ தயத்தருநிதம் தழைத்தோங்கத் தீவகத்தில்
தன்னையுர மாகஇட்டுத் தலையாய் நின்றேன்
கர்வமே இல்லாமல் கண்ணியமும் புண்ணியமும்
காத்துநின்று கடமைகளைக் கனிந்து செய்தோன்!*

*பல்லோரும் போற்றுபணி அன்னதானம் புனர்வாழ்வு
பாலர்பரி பாலனங்கள் பலவும் செய்தோன்
நல்லோர்கள் யோகர்பெரு சித்தர்வழி நடந்தனால்
நயனவழி ஆசிபல பெற்று வாழ்ந்தோன்!*

*வல்லோன் இவனொருவன் தனிநின்று வளமெல்லாம்
வரித்துநற் சேவைகளை வழங்கிவரு வேளை, என்ன
பொல்லா வினைவந்து சூழ்ந்ததுவோ என நாங்கள்
புலம்பலன்றி வேறென்ன புகல லாமோ!*

நயினைக் கவிஞர்
**நாகசண்முகநாதபிள்ளை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு எனும் செம்மல்

வரட்சியை எதிர்த்து வாழ்ந்த புங்குடுதீவு 4ஆம் வட்டாரம் - அங்கு அவன் பிறந்தான்.

அதே வட்டாரத்தின் கேரதீவு மயானத்தில் அவனது பூதவுடல் தகனம் செய்யப்பட்டதா?

இல்லை. இது என் போன்றோர்க்குப் பொருந்தும்! ஆனால் -

அவனது புகழ் பூத்த உடல் ஒளியாகி இலட்சோப இலட்சம் அடி உயர்வதைக் கண்டேன்.

வானம் கறுத்தும் கனத்தும் நின்றதைக் கண்டேன். அதற்குள்ளும் அவனது ஒளி முகமே தெரிந்தது!

மண்ணிலே ஓராயிரம் ஓலமும் அழுகையும் கேட்டன.

அவனது தெய்வத் தாயின் தடுமாற்ற ஒலியும் உடன் பிறவிகளின் தாங்கொணா விம்மலும் கேட்டன. பணியினால் ஒன்றிய உயிர்களின் துடிப்பு . . . . .

கணக்கில் அடங்காத கை கூப்பல்கள் . . . . .

ஆவினங்கள் வான் நோக்கி அழுதன.

வரண்ட குளங்கள் தம் நெஞ்சத்தின் பிழிவைக் காட்ட முயன்றன.

நலிந்த கிராமங்கள் ஏங்கி நின்றன.

தாய் மண் தன் கண்ணீரை மறைக்கவே முயன்றாள், முடியவில்லை!

மீண்டும் அவனது இடியை ஒத்த குரல் கேட்டது. மழையை ஒத்த பார்வையும் வீழ்ந்தது.

"ஏன்?

எதற்காக?" என்றான்.

"நல்லதை நினையுங்கள்.

நல்லதைத் திடனோடு செய்யுங்கள்" என்றான்.

அவனது உறுதியை அதில் கண்டேன்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அவனது தாரக மந்திரம் விண்ணிலும் மண்ணிலும் ஒலிப்பதை உணர்ந்தேன்.

கரமேந்தி அப்பெருமகனின்

ஆத்மா வேண்டித் தொழுது நிற்போம்!!

**நாக. பத்மநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்கள் எனும் பூக்களால்.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புங்கை மண்ணின் சரித்திர நாயகன் திருவே

புண்ணிய பூமி எனும் புங்கைநகர் மாதாவின்
உத்தம புத்திரனே உயர்வான தத்துவமே
திருவுக்கு உருவாகி நாவுக்கு அரசான திருநாவுக்கரசே
கடமை எனும் வழிநின்ற கண்ணியத்தின் மறுஉருவே
தொண்டு என்ற சொல்லுக்கு இலக்கணமாய் இருந்தவரே
சொந்தமண்ணின் விடிவுக்காய் உறங்காது உழைத்தவரே
சேவைகளின் வரிசையிலே ஒன்றல்ல இரண்டல்ல
விடிவெள்ளி எனநின்று மறையாது ஒளிர்ந்தவனே - இன்று
விழிநீரைச் சொரியவைத்து எமைவிட்டுப் போனதெங்கே?
ஈராறு வயதினிலே தாயவளை விட்டகன்றாய்
தமிழ் இனத்தைக் காத்திடவே கடினவழி கால்பதித்தாய்
ஆதிக்க வாதிகளுக்கு அடிபணிய மறுத்துநின்றாய்
காந்தீயவழி நின்று சாதனைகள் படைத்துநின்றாய்
சாதிப் பாகுபாட்டைச் சாடிநீ விரட்டிவிட்டாய்
சரித்திர நாயகனே எம்இனத்தின் சூரியனே!
வைத்திய சோதனைக்காய் தலைநகர் சென்றபோதும்
தேகநலம் கருதிடாது பொதுநலமே மேன்மைஎன்று
எம்மக்கள் வாழ்வுதனைச் சிறப்புடனே உயர்த்திவிட
செயற்கரிய செயற்திட்டம் நிறைவோடு தீட்டிநின்றாய்
எப்பலனும் கருதிடாத எண்ணற்ற சேவையிலே மூழ்கி
சர்வோதய திலகமெனப் பார்போற்ற உயர்ந்துநின்றாய்!
தமிழே மூச்சாக, தமிழே வாழ்வாகத், தமிழே உயிராக
போற்றி நின்ற தமிழர்களின் தவப்புதல்வனே
உன் மறைவுச் செய்திகேட்டு துடியாய்த் துடிக்கின்றோம்.
கிடைத்தரிய பொக்கிஷத்தை இழந்துநின்று தவிக்கின்றோம்!
நீ நடந்த பாதைகள் காத்திருக்கிறது உன் வரவுக்காய்!
நீ செய்த சேவைகள் தலைசாய்கிறது உன் பிரிவால்
காலத்தின் கோலத்தால் காலதேவன் விளையாட்டால்
இமயமே சரிந்ததையா இதயங்கள் தாங்கிடுமா?
உன் திடீர் அஸ்தமனத்தால் விடிவே தூரமானதோ?
உன் கனவு நனவாகி உன் ஆத்மா சாந்திபெற
கண்ணீரின் கனதியுடன் ஆண்டவனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரதேச செயலகம்
69, B. A. தம்பிலேன்,
யாழ்ப்பாணம்.

**நா. சுந்தரராசா**
கிராம உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணையாத் தீபமாய் ஆகிவிட்ட தீவகத்தின் பேரொளி

என்ன தவம் செய்தது - புங்கை நகர்
நின்னைப் பெற்றெடுக்க!
தவம் செய்தது தீவகம் மட்டுமல்ல - நாமும் தான்
நின் வாழ்வுக் காலங்களில் இணைந்திருக்க.
தீபகற்பம் இன்று மார்தட்டிக் கொள்கின்றது
பெற்றெடுத்த மைந்தனின் பெருமைகளைக் கண்டு!
புங்குடுதீவு இன்று பேருவகை கொள்கின்றது - தன்
மைந்தனைப் போற்றுவோர் கண்டு!
மேதினியில் நின் அறிவு செயல் வீரம் கண்டு
மேன்மையுற்றது பொன் கொடு தீவ!
இத்தனை பெருமைகளை நீ தாங்குவது கண்டு
பூமிகூட ஓர் அடி பள்ளத்தில் புதையுண்டு போனது!
ஆனால் இன்று
செயலாற்றிய திட்டங்கள் சிதையாமல் போக
திறமை படைத்த கைகளிடம் ஒப்படைத்துவிட்டு.
சிந்தை மறந்து ஆழ்துயில் கொண்டாயே!
நித்தியமானவ்ரே உமது மரணம்
மாந்தர்களை மட்டுமன்றி மாக்களையும்
பாதித்துவிட்டது!
பசுக்குலங்களும் பசுஞ்சோலைகளும்
இன்று தீவகத்தின் நீர்த்தேவையை கண்ணீரால்
பூர்த்தி செய்கின்றன.
தீவகத்தின் ஒவ்வொரு மைந்தனும் - உன்
மரணத்தின் பின் இறைவனிடம் மன்றாடுகின்றான்
உன் கர்ச்சிக்கும் குரலைக் கேட்க
ஒவ்வொரு தேசமும் உன் வளமான திட்டங்களுக்காய்
கைகோர்க்க ஒன்றிணைகின்றது
உன் கல்லறையின் இறுதி நிமிடத்தில்
புங்குடுதீவின் தவப்புதல்வர்கள் உறுதி கொள்கின்றனர்!
உன் உணர்ச்சிபூர்வமான செயலாக்கங்களுக்கு
உயிர் கொடுப்பதற்காக.
உமது கால் தடம் பதித்த எமது வீடு
கல்லறையின் அடிச்சுவட்டில் கடைசிவரி எழுதுகிறது!
தீபகற்பத்திற்கு பேரொளி தந்த விடிவெள்ளி
மண்ணுக்குள் விதையாய் வீழ்ந்தது நாளை மீண்டும் - எழுவதற்கே
இங்கிவரை நாம் பெறவே என்ன தவம் செய்துவிட்டோம்!

**சி. பொன்னையா ஸ்ரீவைகுந்தவாசன்**

புங்குடுதீவு - 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறக்க முடியாத மாமாவே!.....

மாமா என்ற மாமலை மரணித்து விட்டதோ?
இல்லையில்லை அவர் பூவுடல் மறைந்தாலும்
புகழுடல் மறையாது!
இருண்டுபோன நம் வாழ்வில் ஒளிவிளக்கேற்றிய தெய்வமாய்
துன்பக் கடலில் மூழ்கிய எம்மைக் கரையேற்றும் துடுப்பாய்
அறவழியில் நாம் நடக்க கலங்கரை விளக்காய்
மக்கள் பசிதீர்க்கும் அமுதசுரபியாய்!

கோமாதா குறை தீர்க்கும் கோமகனாய் - எம்
வாழ்வில் வசந்தம் வீச அல்லும் பகலும்
அயராது பாடுபட்ட அரும்பெரும் தலைவனே!
அறங்காவலனே எங்கையா சென்றீர்?
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு?

அன்பின் ஊற்றே மாமா - எம்மை
அணைக்கும் தெய்வம் மாமா
இன்பச்சுனைதான் மாமா - ஒரு
இனிய சொல்தான் மாமா
தின்பண்டங்களானால் - நம்மை
தேடிவந்து தருவார் - தீய
வழியில் நடந்தால் நம்மைத் திருத்த முயலும் மாமா
தூயவழியில் நடக்க நம்மைத் - தூண்டி
விடுவார் மாமா

மாமா! மாமா! மாமா! மனம் ஆற அழைக்கின்றோம்!
மாமாவின் ஆத்மா சாந்தியடைய
சிவயோகசுவாமிகளின்
பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நிர்மாண சேவையாளர்கள்**
தென்மராட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைந்த எம் கற்பக தருவே!

இயற்கை அன்னையின் எழில் கொடை நிறைந்த
ஆழ்கடலின் அண்மையிலே கண்ணகி கோயில் கொண்ட
புனித பூமியில் வந்துதித்த திரு(நா)வே
விண்ணுலகு சென்று மறைந்த மாயமென்ன?

சுயநலம் பாராது பொதுநலம் பெரிதென்று வாழ்ந்தாயே
மானிடர் யாவரையும் வர்க்க பேதமின்றி பார்த்தாயே
பசித்து நின்றோர்க்கு மன மகிழ்ந்து பசி தீர்த்து
பார்த்து மகிழ்ந்தாயே - ஊரார்க்கு எல்லாம் -
மெழுகுவர்த்தியாய் இருந்தாயே!

உனை நாடி வந்தோர்க்கு எல்லாம் - நயமாகப்
பல கதைகள் எடுத்துரைப்பாயே
திருத்தலங்களில் நின் உடலுழைப்பில்லா தலமெது
தேவாலயங்களுக்கும் நீ செய்த சேவை மங்காதே!

நாவன்மை நிரம்பப் பெற்ற உத்தமரே
உன் சிந்தனை யாவும் செயல் வடிவே
நின் முயற்சியால் உருவான இடங்கள் எத்தனை
நீ இன்றிப் போனாலும் அவை உன் பெயரையே செப்பி நிற்கும்!

தாய் மண்ணிற்குச் செய்த சேவைதனை - ஊரார்
என்றும் உரைத்திடுவர் தம் சந்ததியினர்க்கு
உன் வழியில் செல்லப் பலர் வந்திட வேண்டும் - அதற்கு
நீரே கூர்ந்திட வேண்டும் கருணை!

பிறத்தலும் இறத்தலும் இயற்கையின் நியதியே
காலத்தைக் கடக்க மும்மூர்த்தியினாலும் முடியாது
நீர்மேல் குமிழி போன்ற இவ்வுலக வாழ்வை விட்டு
நிலையான இடமது சென்றீரே!
கற்பக தருவே! நீ மண்ணில் மறைந்தாலும்
மங்காது உன் புகழ் நாமம்!
நின் சேவை தேசமதில் துலங்கும்!
உன் ஆன்மா ஆடிய பரமனடி புக இறைஞ்சுகின்றோம்!


**புங்குடுதீவு கிழக்குப் பகுதி மக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தெரிவு அரும் பெருமைத் திரு தொண்டன் - நாள் மூன்றில்
பிரிவு வரும் எனத் தெரிந்தா - நம்மிடத்தே
கிளம்புதற்குக் கேட்கின்றான் விடை!! (நாள் 30. 09. 2001)



வாய்த்த பிறப்புப் போதும்
வணங்கினேன் - வருகின்றேன்!
போய்ச் சேருதற்கு முன்னால்
பொறுப்பினைத் தர வந்தேன் எனப்
புகன்றுவிட்டுப் புறப்படும் திரு
(நாள் 30. 09. 2001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருநாவுக்கரசென்னும்
## திருநாமம் கொண்டோன்

புங்கைநகர் பெற்றெடுத்த புண்ணியனாம்
புகழ் பரப்பும் அரியபணி ஆற்றி வந்தார்
சங்கம் பல அமைத்ததுதான் என்றில்லாமல்
தலையேற்று அதனிலக்கை அடையச் செய்தார்
தடைப்பட்டு எம்தீவு தவித்தபோது
தளராத முயற்சியுடன் உதவி நின்றார்!

மக்களின் சேவையே மகேசன் சேவையாய்
மரணிக்கும் வரைக்கும் மண்ணிற்குழைத்தாய்
மக்களின் சேவையை மனைவியாய் கொண்டதால்
மனைவியின் தேவையை மனதில் துரத்தினாய்
தீவகமக்களின் கலங்கரை விளக்காய்
சிறந்த சேவைகள் பல பல ஆற்றினாய்!

அளப்பரிய உன்முயற்சி அருஞ்சேவையால்
அமைத்தாயே சர்வோதயம் எனும் கூடம்
செயற்கரிய உதவிகளும் சேவைகளும்
சிறந்தநல் உணவளித்தும் சிறப்புப் பெற்றாய்
ஈழமணித் திருநாட்டில் இவர் புகழ்தான்
இறுதிவரை எதிரொலிக்கும் என்றென்றைக்கும்!

திரு நாவுக்கர செனும் நாமம் உனக்கல்லால்
தீவில் எவர்க்கும் பொருத்தமேயில்லை
இன்னோரன்ன இன்னல்கள் இருந்தும்
இன்முகம் காட்டி எவர்க்கும் உதவினாய்
பூதவுடல் தான் போனதேயன்றி - உன்
புகழ் உடம்பென்றும் பூமியில் நிலைக்கும்!

விசம் கொண்ட சர்ப்பமது தானும்கூட
விரைந்திடுமே இனிய பேச்சைக் கேட்பதற்கு
கனிவான உன் பேச்சைக் கேட்பதற்கு
காலனவன் கடும் ஆசை கொண்டதாலே
கண்ணி வைத்து உன் உயிரைப் பறித்து விட்டான்
கண்ணீரில் எம்மவரை மிதக்க வைத்தான்!

தலைநகரில் உன்னாவி பிரிந்தபோது
தறிகெட்டு மனமுடைந்து தவித்து நின்றோம்
பிரிவாலே உன் துயரைப் போக்கவென்றால் - நீ
பிறக்க வேண்டும் மறுதடவை வையந்தன்னில்
புண்ணியனே உன் ஆத்ம சாந்திக்காக
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

**விவசாய சம்மேளனம்,**
நெடுந்தீவு தெற்கு.

**க. ஐ. மயில்வாகனம்**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைதூரம் நடந்தாயோ தொண்டா!

**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்**

- குறள் 615

தொண்டின் மறுவடிவம் துடிப்பின் முழு உருவம்-எதிர்ப்பேதும்
கண்டும் துவழாத துணிவுக் கர்மவீரம் - எங்கள்
புங்கைக் கிரீடத்தில் பொலிந்ததோர் ஒளிவைரம்
இன்றில்லை என்றாச்சு! எப்படித்தான் நம்புவமோ!
ஞாபகமிருக்கின்றதா? புங்குடுதீவு இளைஞர் கழகம்!
வாலிபத்தின் ஆற்றல்களை அரங்கேற்றிய வலுக்கூடம்!
'வாழ்வுப்பலி'யில் **திரு** ஏற்ற வில்லன் வேடத்தால் - அன்று
வாலிபத்துக்கும் மிடுக்கு வந்தது!
கன்னல் பேச்சால் கனிவளக் கவிதைகளால்
மின்னல் பொறியோடு மேடையில் **திரு** நின்றால்
உணர்ச்சிப் பெருக்கால் உருக்கொள்ளும் பெருங்கூட்டம்!
கவர்ச்சிப் பேச்சால் கரைகண்டான் கட்சியிலும்!
பாவேந்தன் பாட்டால் பட்டிதொட்டியெலாம் தமிழரசை
நாவேந்தச் செய்தவன், நம்மவன் எனநாம் நிமிர்ந்து
நிற்கச் செய்தவன் நிலத்துக்காய்த் தன்னையே
விற்கச் செய்து விழுந்து கிடக்கிறான் பாருங்கள்!
**திரு** உறுப்பினராகிய பின்னரே
உயர்ந்தது எங்கள் கிராமசபை
பாராளுமன்ற ஆசை வந்தோரெல்லாம்
காரோடுவந்து காத்திருந்தார் **திரு** காண!
ஊழல்களின் முதல் எதிரி!
ஊதல்களைச் சுடும் அனல் திரி!
ஆசைகளை அறுத்துவிட்டு
அரும்பணிகள் மேற்கொண்ட
தொண்டா நீயா
தொலைதூரம் நடந்தாய் - நாம்
தொடர்வதற்கு வழியின்றி!
வாலிபத் துடுக்கிலும், வழிதவறாத் **திரு**
வாய்த்த வினைத் திறத்தால்
காந்திய வழியில் கண்டதுவே
சர்வோதயம்!
வடமாநிலம் முழுதும் வலைபரப்பி இன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருகின்ற கற்பக தரு அது!
நூலகங்கள், நிமிர்ந்த நிழல் தருக்கள்
நீராலயங்கள், நிலங்குளிரப் பலபயிர்கள்
மலிவு விலைக் கடைகள், மழைநீர்க்கும் தடை முகாம்கள்
பாலருக்குப் பாடசாலை, பயின்றிடப் பல ஆலை
ஆரோக்கிய நிலையங்கள், அருஞ்சுதேச வைத்திய
ஆய்வுக்கும் நிறுவனங்கள், பதிப்பு வேலைகள்
பத்திரிகை வெளியீடு - என்று **திரு**
கால்பதிக்காத துறையேது
கண்டு சொல்ல முடியவில்லை!
தேடி நோய் வந்து தின்ற போதும் தன்னை
வாடி யிருந்திடாமல் வழமையோல் இங்கும்
ஓடி வந்தான் - உசுப்பி எமைச் செயற்படவே
நாடி முறுக்கி நாள் சுவன்று கடக்க முன்னர்
தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்து - எம்மை
மனக்கவலை கொள்ள வைத்தே - மறு
'வீடு' தேடிப் போய்விட்டான் **திரு**
விடை கொடுக்க வாருங்கள்!
விழியோர நீர் துடைத்து!
ஏங்கிக் கிடக்கின்ற எம் மண்ணின் ஜீவன்களும்
ஓங்கி அதைச் சூழ ஒலிக்கின்ற அலைகளும்
பாங்கில் பண்ணிசைக்கும் பனையொடு தென்னைகளும்
பார்த்திருக்கத் **திரு** போகின்றான் பயணம்!
பார்ப்பதற்கு அவன் அங்கும் இருப்பான் இயற்கையொடு!

**கொழும்பு - புங்குடுதீவு**
**மக்கள் அபிவிருத்திக் கழகம்**

கொழும்பு
05. 10. 2001


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றும்..... இனிமேலும்.....
## திரு நாமம்.....!

அவன் நிமிர்ந்த பின்
ஊருக்கொரு
சிறப்பு வந்தது!
பணச் செழிப்புமிக்க
ஊருக்கும்
அழகு பிறந்தது!
சிந்திக்க, சிரமதானத்
தொண்டு செய்ய
இளைஞர்க்குத்
துடிப்பு வந்தது!

காலம் அறிந்து
குடிநீர் கொடுத்தவனை
கோலம் செய்து
ஊரினைச்
சிறப்பித்தவனை
பாலங்கள், மதகுகள் திருத்தி
பற்றைகள், புதர்கள் வெட்டி
சாலைகள் நன்கு
அமைத்தவனை
சத்துணவு சுகாதார
சேவைகள் அளித்தவனை
நித்தம் ஓடி ஓடி
ஊருக்கு
உழைத்த உத்தமனை

பாலர் கல்விக்கெனப்
பாடசாலைகள், பயிற்சி
மையங்கள் அமைத்தவனை
ஆரோக்கிய நிலையங்கள்,
சித்த
ஆயுர்வேத மருத்துவ மனைகள்
ஆய்வுக்குதவும் தமிழ்ச்
சங்கங்கள்
நூலகங்கள் நிறுவியவனை

நாடகம், அரசியல்
கிராமசபை
பத்திரிகை
விவசாயம்
தொண்டு, சிரமதானம்
கூட்டுறவுச் சங்கம்
அத்தனையிலும் கலந்தவனை

மக்கள் அழைத்தனர்
எங்கள் தொண்டர்
திரு என .....

தொண்டு சிரமதானம்
மக்கள் பணி
சர்வோதயம்
சுயராச்சியம்
என்று நாளும் நடந்த
திரு உரு
இன்றில்லை என்றாச்சு....

புதிய சமுதாயத்தை
பதியவைத்து நன்கு
பாதைவழி காட்டிய
பகலவன்
பிரமச்சரியம் பூண்டு
பிரியம் நாட்டில் வைத்து!
சொந்த நலன் துறந்து
சொர்க்கம்
பிறந்த மண்ணெனப்
பற்று மிகக் கொண்ட
அந்தத் திரு முகம்
இன்று எம்மிடை இல்லை.....

ஆயினும் உண்டு.....
அவன் செய்த
திருத் தொண்டுகள்.....
அளப்பரிய பணிகள்
அருமந்த சிந்தனைகள்.....
இன்றும் சரி.....
இனிமேலும் தான்.....!

ஐரோப்பிய கீழைத்தேசத் தொடர்பு மையம்,
பிரான்ஸ்.

**வி. ரி. இளங்கோவன்**
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுபவப் பள்ளியின் ஆசான்

ஓடியாடித் திரிகின்ற
ஒரு முகம்! அது எங்கள்
'திரு'வின் முகம்!

கோயிலடியில் அவனைச்
சுற்றிவரும்
கூட்டத்தில் ஒருவனாக
அன்று
நின்றவன் நான்.

ஊர் சுற்றிச் சைக்கிளில்
'உலாவரும்' என்போன்ற
'பேர்' பெற்ற வாலிப
வட்டங்களையும்
வளைத்தெடுத்துத்
தான்போடுந்
திட்டங்களுக்குப்
பக்கத் துணையாக்கிப்
பக்குவப்படுத்தியவன்
அண்ணன் 'திரு'

வாய்க்காலும்
அணைக்கட்டும்
வீணாகிப் போகும்
மழைநீருக்கு
மட்டும்
அமைத்திடவில்லை
அவன்!

தறிகெட்டுப் போகும்
வாலிப சக்திகளையும்
வரம்புக்குள்
நெறிகெட்டுப் போகாது
நிற்கவைத்து
அன்பெனும்
அணைகட்டியவன்!

சிரமதானப் பணி
அண்ணன்
செய்தாலே சிறக்கும்.
சேர்ந்துழைக்க
அவனோடு - எம்
சிறகுகள் பறக்கும்!

தொண்டிலே தூய்மை
தொழிலிலே நேர்மை
அருகிருந்த எமது
அனுபவம் தரும்
பத்திரம் இது!

வட்டார பேதங்கள்
அவனையொற்றி
விட்டொழித்தோம்!
திட்டங்கள் பெரிது!
ஊர் பெரிது
தீவகம் பெரிது எனத்
தேற்றித் தேற்றி - எம்
பார்வையினை
விரிய வைத்த
பகலவன்!

கண்டவுடன்
தோள்மீது
கைபோடும்
தோழமைத்
தொண்டன் 'திரு'

சிறியார்க்குச் சிறியன்
பெரியார்க்குப் பெரியன்
அனுபவப் பள்ளியின்
ஆசான் - பொது அறிவுப்
பொக்கிஷம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடுநிலை நின்றூரின்
பிணக்குகளை
இணக்கும் பேராளன்!
'திரு' திப்பென்று
வந்திறங்கித்
தேவைகளை நிறைவேற்றும்
சேவைகளின் வருணன்!
ஏழைகளுக்கு
என்றுமவன் கருணன்.

திடுக்கிட எம்மை வைத்துத்
'திரு' அண்ணன்
அகன்றபோது
தடுப்பதற்கு அருகிலிங்கு
தவறினோமே ஓடிவர!

எங்கள்
தோள்மீது சுமந்தேனும்
உன்னுடலைத் தொடும்
நாள் கூடக் கிட்டாமல்
நாமிங்கு புலம்புகின்றோம்!

நன்றே செய்தவனே
யார்க்கும்
நின்றே நிலைப்பாய்
நெடிதாய்!
என்றே எண்ணி
இயலாமல்
சென்றே வருக
எனவுன்னை
இன்றே
வழியனுப்பி வைத்தோம்!

**செ. நடனசபாபதி**
உபதலைவர்,
புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம், கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருத் தொண்டர் .....

திருநாவுக்கரசு என்று பெயர் சொன்னால் - அங்கே
தூயபணி தொண்டு நிற்கும் கண் முன்னால்
பெருமைமிகு சேவைபல தாயகத்திற்கு தந்துவிட்டு
போய்விட்டார் எங்கள் திருத் தொண்டர்,

அடிமை விலங்கறுக்கும் உணர்வுகொள் பேச்சு - அன்று
அத்தனை ஊர்களுக்கும் தெரியும் நன்று
கொடுமை களைந்திட வேண்டுமென விளக்கம் - கேட்டவர்
கொதித் தெழுந்து ஆவேசங் கொள்வார்!

தந்தை செல்வா வழிதான் சரியென்று - நாடுமுழுவதும்
தான் நடந்து தமிழரசு வளர்த்தாய்
இந்த வழி இனிமேலும் செல்லாதென - ஒதுங்கி
ஏழை மக்கள் வாழ்வுக்கென அர்ப்பணமாய்,

தொண்டு களுக்கொரு உதாரணமாய் தூயபணி
தமிழர் பகுதியெங்கும் தொடர்ந்தாய் - இது
கண்டு பல இளைஞர் வழிதொடர்ந்தார் நாளும்
காலத்தால் அழியாத கனக்கப் பணிபுரிந்தாய்,

பாலர்க்கெனப் பாடசாலைகள் நூலகங்கள்
பதியம்போட காய்கறி விதை கன்றுகள்
காலம் அறிந்து குடிநீர் விநியோகம்
கரையுயர்த்திக் கடல்நீருக்கும் அணைகள்,

குளங்கள் தோண்டித் துப்புரவு, குப்பை
கூளங்கள் அகற்றல், தொண்டர் சேவை
குறைந்த விலைக் கடைகள், சத்துணவு
கொடிய நோய்கள் தடுக்கும் சேவை

ஆரம்ப சுகாதார நிலையங்கள், சித்த
ஆயுர்வேத சிகிச்சை நிலையங்கள், எங்கள்
பாரம்பரிய கலைகளைப் பேணும் விழாக்கள்
பாரிய விவசாயப் பண்ணைகள் என்றுபல.....

ஏழைகள் துயர்போக்க உலகெங்குமுள்ள எம்
உறவுகளே கரம் கொடுங்கள் என்றாய்
எண்ணிய திட்டங்கள் எல்லாம் கொடுத்துவிட்டு
கண்ணீரில் எமைவிட்டு கனதூரம் போனதென்னே.....?

சிந்தைக் கெடுத்து செயற்படுத்தத் தம்பிகளுண்டு
சிறப்பாக ஒழுங்கமைத்த அமைப்புகளுண்டு
என்றெண்ணிப் போனாயோ எங்கள் திருவே
உந்தன் பணிகளில் உன் திருமுகம் காண்போம்!

பிரான்ஸ்

**செல்வி. இ. அநேகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'ஊழியின் முதுகிலேறி ஊர்வலம் போகவல்லான்'

புங்கையூர்
புதுப்புது வழிகளில்
'திரு' நின்றவூர்!
***

நாற்புறமும்
கரைவந்து மோதும்
கடல்தான்
என்றாலும்
நானா விதத்திலும்
கரைகண்ட
ஊரது!
***

உழைப்பு, உழைப்பு
என்று
உருக் கொண்டோடி
வியர்வைத் துளி
விதைத்த
அறுவடையால்
பெருகப் பொருள்
குவித்தும்
வெருவந்த செய்யாத
விறல் மிண்டர்
திறங்கண்ட
ஊரது!
***

சுற்றுப் புறத்திலெல்லாம்
சுனைகள்
வற்றிப் போனாலும்
வாரி வழங்கும்
தாராள மனசுத்
தண்மையினைத்
தக்க வைத்து
நிற்கும்
'கற்பக தருக்கள்'
சொற்பமா என்றே
சொக்க வைக்கும்
ஊரது!
***

ஊழையும் உப்பக்கம்
காணும் முயற்சி
வள்ளுவர்
சொன்னது!
உப்பையும் ஊழையும்
உரமாக்கிய உயர்ச்சி
நம்மவர்
செய்தது!
***

எவ்வூர்?
என்று எவனுமே
எம்மூரைக் கேட்பதில்லை
இவ்வூர் தந்த
முகவரி.....
இப்படி!
***

சொந்த
முகவரி
இல்லாவிட்டாலும்
சொன்னால்
ஊரின் பெயர்வரி
போதும்
செல்லும்
எதிலும்!
***

புங்குடுதீவின்
புகழ் மணக்கப்
புகையிலை அல்ல
காரணம்!
எமக்குப்
பொருளாதாரம்
ஒருநாளும்
பகையிலை
என்பதே இதன்
ஆதாரம்!
***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வூரின்
என் வீட்டருகுக்
கோயில்
கிணற்றுக் கட்டில்
குந்தியிருந்து
குரலெடுத்துப் பேசும்
அந்தக் கறுப்புருவைப்
பல
அந்திகளில்
சந்தித்தேன்!
அப்போது நான்
அரைக் காற்
சட்டை
ஆனாலும்
தமிழுறிஞ்சும்
அட்டை!

***

அந்தக் கோயில்
குளக்கட்டு
இப்போது
தூர்ந்து
போயிருக்கலாம்
ஆனால் - அவன்
'குளக்கோட்டன்'
என்பதால்
குளங்களங்கு
வற்றாது - அவன்
குரல் கேட்கும்!!

***

மருத மரத்தடி
அவன்
மாநாட்டு
மண்டபக்
கட்டடம்
அதன் உச்சியில்
அவன் கை கொண்டு
ஏற்றிய
தமிழரசின்
மூவர்ணக் கொடி
கட்சியின் வெற்றிக்கு
கூறியது
கட்டியம்!!

***

கறுப்புச் சிவப்பு
கரைபோட்ட
வேட்டி!
கால்வரை நீளும்
கடும் வெள்ளைச்
சேர்ட்டு!
கழுத்தைச்
சுற்றியொரு
கறுப்புத்
துண்டு!
அக்கால மேடைகளில்
அவனை இப்படித்தான்
நான் கண்ட
துண்டு!!

***

கந்தன்
தேரோடியதால்
அந்த வீதிகளுக்கு
அழகுக் கோலம்
ஆனால்
கந்தையா 'திரு'
காரோடியதால்
கோயிலடி வீதிகளுக்கு
ஒரு புது
வேகம்!

***

அவன்
உதடுகள்
உச்சரித்த பின்னரே
பாரதி தாசனின்
பாடல் வரிகளின்
'பற்றரி சார்ஜ்'
ஆனது!
அவன் பேசிய
பின்னரே
அரங்கு எதுவும்
ஆள்போய் - வெறிச்
சானது!

***

வாலிபமே
வணங்கி நிற்கும்
தோற்றம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வஞ்சகத்தை
மட்டும் சாடும்
அவன் முகச்
சீற்றம்!

***

ஆடையிலே
வெள்ளை!
மேடையிலே
கொள்கை!
அவன்
துடைப்பதெல்லாம்
தொல்லை
ஒருபோதும்
ஊரை விட்டு
அவன் தூரம்
போனதே
யில்லை!

***

ஆசை வைத்தால்
உடம்புகளை
ஈக்கள்
மொய்க்கும்!
அதைத் தூர
வைத்து(ப்)
பிரம்மச் சரிய
'மீசை'
வைத்தான்!
அவனைத்
தேடிவந்து
புகழாய்(ப்)
பூக்கள்
மொய்க்கும்!

***

சுதந்திரம்
சமத்துவம்
சகோதரத்துவம்
ஏட்டிலல்ல
நாட்டில்
வேண்டும்
என்பதற்காய்
சாதியெனும்
பேயோட்டி
சர்வோதய
ஏர்
பூட்டியுழுதான்!
ஏழைகளுக்காய்
மட்டும்
அழுதான்!
புழுதியிலும்
விதை முளைக்கும்
என நாட்டி
காடுகளையும்
கழனிகளாய்
காட்டி
மகிழ்ந்தான்!

***

நீதி எனத்
தெரிந்தால்
அவனுக்கு
அரனின்
நெற்றிக் கண்ணும்
பனி பொழியும்!
ஓதிடும் பிரிவுகளை
ஊரை விட்டோட்டி
அவன்
சாதித்த
பட்டியல்.....
அடங்காமலே
விரியும்!

***

கைலாசத்
திருக்கோலங்
காணத்
தவழ்ந்தவர்
பெரு நாவுக்கரசர்!
சேவையே
மகேசன்
பாதை எனத்
தெரிந்து
தேவையறிந்
துதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிமிர்ந்தவன்
'திரு'நாவரசன்

***

விடுவானா
இயமன்?
விரைந்துமே
வா என்றான்!

***

நெஞ்சத்து
நாயனத்தில்
விழுந்தது
ஓட்டை!
அவனோ
அதனூடும்
பஞ்சைகளுக்
கிசைக்கவெனத்
தேடினான்
பாட்டை!

***

பொறு! பொறு!
போய்க் கொழும்பில்
என் பொறுப்பை
ஒப்படைத்து
வருகின்றேன் என்று
ஊர் விட்டு
வந்தவன்
வேரற்று
வீழ்ந்தான்

***

ஊழியின் முதுகிலேறி
ஊர்வலம் போக
வல்லான்
வேரினில்
வெந்நீர்
ஊற்றினான்
காலன்!
நீரற்றுப் போம்
வரைக்கும்
நெட்டுயிர்த்து
நிற்கும் - எம்
கண்களில் இருட்
கோலம்

***

ஓங்கி ஒலிக்கும்
அலைகளின்
ஓலம்!
தேங்கிய நீர்ச்
சுனைகளின் சுருதி
பேதம்!
நாற்றிசையும்
காற்றசைந்து
நாதமிடும்
அந்த வயல்வெளியின்
காதுகளில்
நாராசம்!

***

வேற்று விகார
மனக்குடம்பின்
உட்கிடந்து
சேற்றை நிறைத்தே
செத்து வாழாமல்
போற்றும் படியாய்
புண்ணியஞ்
செய்த வனை(க்)
காற்றாக்கி
விட்டான்
காலன்!

***

இளங் கன்றுகளும்
நாக்குளறி - இனி
அம்மா - என
அழைக்கா!
ஐயோ -
எமைத்
தாயாய்த்
தாங்கிய
ஐயன்
எங்கே
'திரு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றுதான்
எங்களூர்
உயிருள்ள
ஜீவனெல்லாம்
இப்போது
ஒப்பாரி
வைக்கும்
ஒரு வழியுமின்றி!

***

அட எமனே!
சனத்தொகை
பெருக்கும்
கர்ப்பப்பைகள் மீது
நீ கைவந்தால்
அதில் நியாயமுண்டு!
அட!
சர்ப்பப்பை கொண்ட
சழக்கா!
சருகையும்
துளிர்க்க
வைக்கும்
சமுத்திர
மனத்தோனின்
திட்டங்களை
மட்டும்
பிரசவிப்பதே
'திரு'வின்
இதயம்
எனத்
தெரிந்தாடா
குறி வைத்தாய்?
திமிர் கொண்டு!

***

மரணமெனும்
நியதி மாறாது
மாறாது!
என
இப்போ நீ துள்ளு!

இரு! இரு!
உனக்கும்
ஒரு நாள்
இல்லாமலா
போகும்
**அணுக்குண்டு!!**

***

**வி. ரி. தமிழ்மாறன்**

சட்டபீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் உளக் குமுறல்....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புத் தந்தையின் திருமுகம் எப்போ காண்போம்?

04. 10. 2001 அதிகாலை 5 மணி 45 நிமிடம்! அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தோம். திடீரென படலையில் ஒரு சத்தம். அனைவரும் கண் விழித்தோம்! கனலாய் ஒரு செய்தி காதினில் விழுந்தது! காலன் குஞ்சி ஐயாவைப் பறித்து விட்டான். இது கேட்ட என் இதயம் கதிகலங்கிப் போனது. நீங்கள் வாழ்ந்த யோகர் சுவாமி ஆலயத்திற்கு விரைந்து சென்றேன். புஸ்பம் மாமியிடம் தெரிவித்தேன். இது உண்மையா? எனக் கதறினார்! எல்லோருக்கும் பொழுது விடிந்தது! ஆனால் எமக்கு எங்கும் இருளாய்த் தெரிந்தது! இயற்கை அன்னை முகில் கூட்டம் கண்ணீர் மல்கியது. இது தந்தையின் ஆத்மீக வாழ்க்கையின் அற்புதமான காட்சி. இச்செய்தி உண்மை என நிரூபிக்கப்படும்வரை எம் உடம்பு மரக்கட்டையாக இருந்தது! உண்மை என அறிந்தபின் என் மனம் எரியும் மெழுகு வர்த்தியாய் உருகியது! உங்கள் மறைவினால் ஊரே அழுது கொண்டிருக்கின்றது! ஏனெனில், உங்களை எப்படி குஞ்சி ஐயா மறக்கமுடியும்? நீங்கள் செய்த சேவையை எவ்வாறு அழிக்கமுடியும்? உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றுமே மறையாது.

உறக்கமின்றி எம்மை வளர்த்தாய்! உலகுய்ய உழைத்தாய்! தந்தையே உறங்கித்தான் ஊர்வலம்வர விதியோ! புன்சிரிப்பூட்டினாய்! உற்சாகமூட்டினாய்! இலட்சியத் தீ மூட்டினாய்! எம் இதயத்தில் உங்கள் நினைவலைகளை மீண்டும் புதிதாக மீட்டு! தந்தையின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம். துயருறும் உங்கள் அன்னை, சகோதரி புஸ்பமணி, ஜமுனா அனைவருக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்து உங்கள் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பெறாமகள்

புங்குடுதீவு - 01

**ஸ்ரீஸ்காந்தன் வசந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தந்தையின் கொழும்புப் பயணம் பற்றியது .....

05. 09. 2001இல் அதிகாலையெழுந்து கடமைகளுக்காகப் புறப்பட்டு கோமாதாக்களுக்குத் தீன்தானம் வழங்கியபின் புங்குடுதீவின் பணிகளை ஒழுங்குபடுத்திவிட்டு நண்பகல் யாழ்ப்பாணப் பணிமனைக்குச் சென்றார். வைத்திய உதவிபெற கொழும்பு செல்வதற்கு முன்னேற்பாடுகளைக் கவனித்தபின் பயண விடயத்தை முடிவு செய்யப் புறப்பட்டார். இருந்தும் 06. 09. 2001 காலை வரை முற்றுப்பெறாத பயண முடிவோடு கப்பல் ரிக்கற் பெறும் பணிமனைக்கு காலை 6.30இற்குச் சென்று 7.20இற்கே பயண ஒழுங்குகள் உறுதி செய்யப்பட்டன. 06. 09. 2001இல் கொழும்புக்கு திருமலை நகரம் கப்பல் மூலம் பயணத்தைத் தொடர்ந்த அவர் 07. 09. 2001இல் திருகோணமலையையடைந்து, அங்கிருந்து அதே இரவு ரயில்மூலம் கொழும்பு புறப்பட்டு, மறுநாள் அதிகாலை 5.30 மணியளவில் கொழும்பு புகையிரத நிலையம் வந்தடைந்து, அங்கிருந்து ஆட்டோ மூலம் அளுத்மாவத்தையிலுள்ள அவரது சகோதரன் திரு. சி. மு. நாகரத்தினம் அவர்களது இல்லத்தை அடைந்தார். அங்கிருந்து காலைக் கடமைகளை முடித்துவிட்டு அவரோடு வைத்திய உதவிக்குத் துணையாகவும் எனது சகோதரியின் மகனின் திருமண நிகழ்விற்கும், கனடாவிலிருந்து வந்திருந்த எனது சகோதரியைப் பார்ப்பதற்குமாகச் சென்றிருந்த என்னை அழைத்துச்சென்று வெள்ளவத்தையில் எனது சகோதரி வீட்டில் தங்கவைத்தார்.

13. 09. 2001இல் அவருக்கு வைத்திய பரிசோதனைக்கு ஆயத்தம் செய்யப்பட்டது. எனினும் அன்றையதினம் வைத்தியர் வராமையால் வைத்திய உதவிகள் தடைப்பட்டன; மீண்டும் 15. 09. 2001 டெல்மன் மருத்துவமனையில் Dr. சாந்திராஜ் இருதய சிகிச்சை நிபுணர் மூலம் வைத்திய உதவியைப் பெறத் தொடங்கி 27. 09. 2001வரை மூன்று முறை அவரைச் சந்தித்து இவரது நோயின் நிலைமையை அறிய முடிந்ததோடு, மருந்துகளையும் பெறமுடிந்தது. அவருக்கு இருதயத் துடிப்பு மிகவும் குறைவாக இருப்பதாகவும் சத்திரசிகிச்சை பெறும் சந்தர்ப்பம் கடந்துவிட்டதாகவும் மருத்துவர் இருதயம் வீங்கியிருப்பதாகவும் கூறியிருந்தார்.

இவ்வளவையும் கேட்டிருந்த அவர் நோயை எண்ணிச் சற்றும் கலக்க மடையவில்லை. தனது இறுதி மூச்சுவரை பணிசெய்யத் தனது இதயம் இடம் தந்தால் போதுமென்ற சிந்தையோடு ஆஸ்பத்திரியை விட்டுப் புறப்பட்டார்.

கொழும்பிலும் அவர் பணிசெய்வதை விட்டுவிடவில்லை. கொழும்பு வாழ் புங்குடுதீவு மக்களிடையேயான இணைப்பை உருவாக்கி மக்களுக்குத் தொண்டாற்றும் நோக்குடனும் இடம்பெயர்வுகளின் பின்னால் புங்குடுதீவுத் தாயின் துயர் துடைத்து மக்களின் சுபீட்சத்தைக் கட்டியெழுப்ப ஓர் இறுக்கமான அமைப்பை உருவாக்க வேண்டுமென்ற ஒரே நோக்குடனும் அங்குள்ள நம்மவர்களையெல்லாம் நேரில் சென்று சந்தித்து விளக்கி வந்தார். யாரைச் சந்தித்தாலும் அவரது பேச்சும் மூச்சும் அமைப்பை உருவாக்கவேண்டும் என்பதாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொண்டன் திரு துயின்றபோது.......**



கருவி கரணங்கள் ஓய்ந்து போச்சுது
காணாத காட்சிகள் காணலாச்சுது
ஒருவரு மெதிரில்லாற் போச்சுது
ஓஒ மாயை பறந்து போச்சுது — யோகர்



அஞ்சலி நிகழ்வின்போது தலைமை தாங்கும் கொழும்பு - புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகத் தலைவர் வி. ரி. தமிழ்மாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைச் சர்வோதய சங்கத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்ன, அந்தநாள் ஞாபகத்தால் அஞ்சலிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா



ஊருக்குழைத்த உத்தமனை நினைந்துருகும் தொல்புரம் சர்வோதய தொண்டர் திரு. கி. நடராசா, பெரியபுலம் சனசமூக நிலையத் தலைவர் திரு. க. தேவதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வுபெற்ற நில அளவையாளர் திரு. எஸ். தனபாலசிங்கம், புங்குடுதீவு முன்னாள் கிராமசபை உறுப்பினர் திரு. சு. கருணாகரன்



திருவாசகமணி திரு. க. சண்முகம் ஜே.பி,
கவிஞர் வேலணை வேணியன் ஜே.பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெயரத்ன மலர்சாலையில் 'திரு'வை அஞ்சலிக்கும் அன்பர் கூட்டம்



பூக்கள் மொய்க்கும் புண்ணியன் 'திரு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



30. 09. 2001 கொட்டாஞ்சேனை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. சி. சிவராசா அவர்களின் ஒத்துழைப்போடு திரு. வி. ரி. தமிழ்மாறன் அவர்களின் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. அன்றைய கூட்டத்தில் அன்னார் புங்குடுதீவின் தற்போதைய நிலைமைகளையும் செய்யவேண்டிய பணிகளையும் மிகவும் சுருக்கமாகத் தெரிவித்திருந்தார்கள். அத்துடன் இக்கூட்டத்தைக் கூட்டுவதன் நோக்கம் பணம் திரட்டுவதற்காக அல்லவென்றும் புங்குடுதீவுத் தாய் இழந்த மக்கள் சக்தியை மீண்டும் உருவாக்குவதற்காகவே கூட்டப்படுகிறது என்பதைத் தமதுரையில் தெளிவுபடுத்தினார்கள். அந்த நேரத்தில் அவருக்குச் சுகயீனம் ஏற்பட்டதால் தனது உரையை நிறுத்திக் கொண்டார். அதன்பின் கொழும்பு - புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. பொறுப்பு வாய்ந்த அமைப்பை உருவாக்கி பொறுப்பு மிக்கவர்கள் கையில் ஒப்படைத்துவிட்டேன் என்ற மனநிறைவோடு இறங்கி திரு. மா. இராமசாமி குடும்பத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மதியபோசனத்தில் கலந்துவிட்டு வீடு திரும்பினார்.

01. 10. 2001 அன்றும் மறுநாளும் வத்தளையிலுள்ள சிவதொண்டன் நிலையத்தைச் சார்ந்த எஸ். சிவலோகம் குடும்பத்தினர் வீட்டில் தங்கியிருந்து கனடா வாழ் புங்குடுதீவு மக்களுக்காகப் புங்குடுதீவில் முன்னெடுக்கப்பட வேண்டிய பல முக்கிய பணிகள் பற்றிய திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளார். 03. 10. 2001 அதிகாலை எழுந்து **கடைசியாக** என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுப் பல இன்னல்களையும் தாங்கி கனடாவாழ் புங்குடுதீவு மக்கள் தம் தாயகத்திற்கு ஆற்றவேண்டிய பணிகளைக் குறிப்பிட்டதுடன் கனடாவின் பனிமலைக்கும் அரசுக்கும் தமிழ் மக்களின் இதயங்களுக்கும் வாழியுலகின் வாழ்த்துக்கள் கூறி எழுதிமுடித்து வைத்துவிட்டு அன்று காலை வத்தளையிலிருந்து புறப்பட்டு சகோதரரின் வீடு வந்து சேர்ந்தார்.

உடல் சற்றுக் களைப்புற்று இருந்தமையால் மருத்துவமனையில் தங்கியிருந்து உதவியை நாடவேண்டுமென்ற நோக்கில் நவலோக மருத்துவமனையில் இரவு 6.30 மணிக்குக் காட்டுவதற்குப் பதிவு செய்யப்பட்டது. பகல் முழுவதும் களைப்புற்றிருந்த அவர் மாலை 6.15 மணிக்குத் தனக்கு என்ன செய்கிறது என்று எதுவுமே கூறாமல் ஆட்டோமூலம் மருத்துவமனைக்குப் புறப்பட்டார். தொல்புரம் சர்வோதய இணைப்பாளர் திரு. கி. நடராசா அவர்களும் நானும் உடன் கூட்டிச் சென்றோம். மருத்துவமனை வாசலை அடைந்ததும் அவரால் எதுவும் பேச முடியவில்லை. அவசர அவசரமாக உள்ளே கொண்டு சென்றவுடன் ஒரு சில நிமிடங்களுக்குள் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். 45 நிமிடங்கள் வரை அந்த சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் **இரவு 8.20 மணிக்கு அந்தத் திருவிளக்கு அணைந்தது.** கணப்பொழுதில் என் கண்களும், இதயமும் இயங்க மறுத்தது. நவலோக மருத்துவமனை இருண்டது. வெளியில் வர கொழும்பு மாநகரமே இருளில் மூழ்கி இருந்தது.

அந்தோ! அடியற்ற மரம்போல் ஆனேன் நானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னை நெறிப்படுத்திய தந்தையே!

*எந்தையே! என்குருநாதா;!*
*என்கடன் பணி செய்து கிடப்பதே*
*மக்கள் சேவையே மகேசன் சேவை*
*யாதூஉம் ஊரே யாவருங் கேளிர்*
*சிவதொண்டு செய்வதே எமது தொழில்*
*அதற்காகவே நாம் பூமியில் வாழ்கின்றோம்*
*நன்றும் தீதும்; பிறர் தர வாரா!*

என்ற மூலமந்திரங்களை முரசாகக் கொண்டு 25 ஆண்டுகள் உங்கள் பயிற்சிப் பாசறையில் வைத்துக் கடமை, ஒழுக்கம், செயல், பணிவு, துணிவு, பொறுமை, அன்பு, இரக்கம் இன்னும் எழுத்தில் அடங்கா பொக்கிஷங்களை நெறிப்படுத்தி உணவு, உறக்கம், ஓய்வுகளுக்கப்பால் பணி செய்யும் பண்பை விளக்கி வைத்தீர்கள். சேவைகளைச் செய்து காட்டினீர்கள். "பணத்தை வைத்துப் பணியைத் தொடங்காதே. உனது பணி சரியானது என்றால் கடமையைச் செய். கடவுள் காசு அனுப்புவார்" என்பீர்கள்! இந்த உண்மையைக் காட்டி வைத்தீர்கள்.

எண்ணாலும் எழுத்தாலும் சொல்லாலும் அடங்கா அரிய மந்திரங்களையும் சேவைகளையும் விட்டுச் சென்றுள்ளீர்கள். அந்தப் பாதையில் எம் வழிபாட்டுத் தெய்வமாக இருந்து எமக்கு வழிகாட்டிச் செல்வீர்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கின்றோம். நிச்சயமாகப் பிறப்பற்று பேரின்பப் பெருவாழ்வை; எம் குருநாதன் யோகசுவாமிகளின் காலடியில் பெறுவீர்கள்! நீங்கள் எமக்குக் காட்டிய வழிகளில் நின்று நானும் புஸ்பக்காவும் தங்கள் மலரடிக்கு மக்கள் சேவையைக் காணிக்கை ஆக்குவோம்!

இறுதி மூச்சுவரை பணி செய்வதென்ற பரம ரகசியத்தைப் பத்தியமாகக் கொண்டு வாழ்வை முடித்து வைத்த எம் தெய்வமே! நாம் கதிகலங்கி நிற்கின்றோம்!

ஓம் சாந்தி!

அன்பு மகள்
**பொ. ஜமுனாதேவி**
இயக்குனர்

வட இலங்கை சர்வோதயம்,
புங்குடுதீவு - 03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகம் ஒரு தேசத் தொண்டனை இழந்து விட்டது

கடந்த 40 வருடகாலமாகத் தான் பிறந்த மண்ணையும் தான் வாழ்ந்த சமூகத்தின் மக்களையும் உயிரிலும் மேலாக நேசித்து, தமிழினத்தின் விடுதலைக்காகத் தன்னை ஒப்படைத்த நாட்தொடக்கம் புங்குடுதீவுத் தாயினை வளமும் புகழும் கொண்ட பூமியாக உருவாக்கி, இறுதிவரை மண்ணின் மக்களோடு வாழ்ந்து, மனிதப் பிறவியென்றால் என்ன என்பதனை இவ்வுலகுக்கு உணர்த்திய அன்பு உருவம் இன்று எங்கள் மத்தியில் இல்லையே என்கின்றபொழுது - என் கண்கள் குளமாகின்றன. இதயம் வேகிறது! இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் அன்புக்குரியவரோடு உரையாடுகிறேன் - புங்குடுதீவு மண்ணுக்குப் புலம்பெயர்ந்த மக்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி எழுத்து மூலம் எட்டுப் பக்கங்களில் எழுதிமுடித்துவிட்டேன், உடன் தொலைநகல் மூலம் அனுப்புகிறேன் என்று கூறிய அன்பு மனிதரின் இனிய உயிர் பிரிந்துவிட்ட செய்தி கொடுமையிலும் கொடுமையன்றோ!

உரிமை, கடமை எதையும் செலுத்தமுடியாத பாவிகளாக்கப்பட்டதை எண்ணி நாம் வேதனைப்படுகிறோம். தனது உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையிலும் உயிர் பிரிந்திடும் வேளையிலும் தான் பிறந்த மண்ணையும், மக்களையும் நினைந்து வாழ்ந்த ஓர் அபூர்வப் பிறவியை இழந்துவிட்டோம். புங்குடுதீவு மண்ணின் காவலனாய் புங்குடுதீவு மக்கள் தங்களுக்கு வழிகாட்டுவாரென நம்பியிருந்த மக்களுக்கு வழிகாட்டுவது தனது கடமையென தனது வாழ்கையையே அர்ப்பணித்து வாழ்ந்த தேடற்கரிய மனிதரை தீவகம் இழந்துவிட்டது. இந்த வெற்றிடத்தை இனி யாராலும் நிரப்பமுடியாது. புலம்பெயர்ந்து வாழும் புங்குடுதீவு மக்கள் எல்லாம் தொண்டர் எங்கள் ஊரில் இருக்கின்றார்; எங்கள் மண்ணைக் காத்து வருகின்றார் என்று நம்பியிருந்த உள்ளங்கள் இன்று கதறியழுகின்றனர்.

எம்மக்கள் பஞ்சம், பட்டினி வந்து வாடியபோது உணவுப் பயிர்கள் பயிரிட்டு மக்களைக் காப்பாற்றி என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற இலட்சியத்திற்கு இலக்கணமாய் வாழ்ந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கோடி ரூபா மூலதனம் வங்கிமூலம் உருவாக்கிக் கொடுக்கும் வேலைத்திட்டங்களை ஏற்படுத்தி இந்த மாபெரும் நிர்மாணப் பணிகளை ஈழமெங்கும் உருவாக்கி 2023ஆம் ஆண்டில் நிதித்திட்டம் செயற்படக் கூடியதாக உருவாக்கி வந்தீர்கள். புங்குடுதீவினை வளமும் பெருமையும் கொண்ட பூமியாக இத்தரணியில் உயர்த்திட வேண்டும் என்று நீங்கள் கொண்டிருந்த தணியாத தாகமும் செய்த தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் அதனால் ஏற்றுக்கொண்ட வறுமை, கஷ்டங்களையும் தாங்கி சிந்திய வியர்வை, கண்ணீர் ஆகியவைகளையும் நினைத்திடும்போது கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. 1991ஆம் ஆண்டில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு வந்து போகும்படி கூறிய அழைப்புகளையெல்லாம் பின்போட்டு வந்தீர்கள். இறுதியாக எங்கள் கனேடிய மண்ணுக்கு வரும்படி கேட்டபொழுது ஊர் சென்று வருவதாகக் கூறினீர்கள் - இன்றோ திரும்பி வரா தூரதேசம் சென்று விட்டீர்கள் அத்தான். உங்கள் தலைமையில் உருவாகிய புங்குடுதீவு இளைஞர் கழகம் ஆல் போல் தழைத்து, பெருஞ் சமூகப் புரட்சியை ஐந்து கண்டங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ள உலக மக்கள் தெரிந்துகொள்ள வழிவகுத்த பொற்காலத்தை உருவாக்கித் தந்தீர்கள். உங்கள் தலைமையில் அறிவுரையில் வளர்ந்த பல்லாயிரம் தொண்டர்கள் பாரெங்கும் பரந்து பெருமை பெற்று வாழ்கின்றனர். அவர்களெல்லாம் உங்கள் பிரிவுச் செய்தி கேட்டுப் பதறுகின்றனர். தாங்களும் எங்கள் தந்தையாரும் யோகர் சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றதையும் சுவாமியின் ஆசீர்வாதங்களைப் பெற்று சுவாமி பிரசாதம் தர அவர் திருவடிகளை வணங்கிய நாட்களையும் அடிக்கடி கூறி வருவீர்கள். சுவாமிகளின் திருவருளைப் பெற்றதற்கு உங்கள் வாழ்க்கையே சாட்சியாகும் சம்பவங்கள் எங்கள் மனதில் குவிந்து கிடக்கின்றன.

தனது தலைமுறையில் தான் பெற்ற அனுபவத்தைக்கொண்டு எமது அடுத்த தலைமுறைக்கு வளங்களும் வாழ்க்கைக்குரிய அறங்களும் அறிவைத் தேடும் வழிகளும் தொழிலைக்கற்கும் துறைகளும் உலகை நோக்கியெழும் பயிற்சிகளும் நிறைந்த பொன்நாடாக நம் தீவகத்தையும் நீதியும் சுதந்திரமும் கொண்ட சுய நிர்ணய நாடாக நம் நாட்டையும் நிர்மாணித்துச் செல்வது தன் தேசிய கடமையெனக் கருதி தன்னையே தன் தாய்த் திருநாட்டுக்காக அர்ப்பணித்துவிட்ட எங்கள் தேசத்தின் ஒளிவிளக்கு அணைந்துவிட்டது. தொண்டரின் வாழ்வில் ஏற்பட்ட போராட்டங்களும் பங்குபற்றிய சத்தியாக்கிர அறப்போராட்டங்களும் எத்தகைய இழப்பையும் சந்திக்கக்கூடிய மன வலிமையையும், அஞ்சா நெஞ்சத்தையும் எண்ணிப் பார்க்கமுடியாது.

நமது கிராமத்தின் ஒரு மூலையிலிருந்து அமரராற்றிய தொண்டை நாடெங்குமிருந்து வந்த நல்லிதயம் கொண்ட பெருமக்கள் உலகெங்கும் பறைசாற்றி, உலகம் நம்மை நோக்கி வர வழிவகுத்து, கிராமத்திலிருந்து உலகை நோக்கி எழ வேண்டும் என்ற தனது தாகத்தினை நிறைவேற்றிய சாதனையாளர். அவரால் மேற்கொள்ளப்பட்ட கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள்; நாய் கோழி கால்நடைகளுக்கான தடுப்பூசிச் சேவைகள்; தொழுநோய், காசநோய், தாய் சேய் நலன் பரிசோதனை நிலையங்கள்; பசுமைக்கான மழைநீர் தேக்கங்கள்; மரம் நாட்டு இயக்கங்கள்; சிரமதான நிகழ்வுகள்; சுகாதார சேவைத் திட்டங்கள்; முத்தமிழ் விழாக்கள்; அன்னதானங்கள்; ஆலய திருவிழாக்கள்; பொங்கல் புத்தாண்டு நிகழ்வுகள்; நீச்சல் போட்டிகள்; மண்மறவா மனிதரின் நினைவு அஞ்சலி விழாக்கள்; இன்னும் எத்தனை ஆயிரம் நிகழ்வுகள். இவைகள் எல்லாம் தொண்டரின் நன்றி நிறைந்த உள்ளத்தால் மலர்ந்தவை. மனித நேயத்தால் விழைந்தன. அரைநூற்றாண்டில் புங்குடுதீவு வரலாற்றில் அமரர் தொடர்பில்லாத நிகழ்ச்சிகள் எதுவும் இல்லை. இருபதாம் நூற்றாண்டு மனிதரை 21ஆம் நூற்றாண்டு தனதாக்கிக்கொண்டது.

நாட்டுக்காக வாழ்ந்த நல்லவரே! நீங்கள் செய்த சேவைக்கு எங்கள் விழிகளில் வழியும் கண்ணீரால் நன்றி கூறுகின்றோம்!. எங்கள் இதயத்தில் பொங்கியெழும் நன்றி உணர்வால் நன்றி பகர்கின்றோம். நீங்கள் பிறந்த பூமியில் நீங்கள் வாழ்ந்த காலகட்டத்தில் நாமும் வாழ்ந்தோம் என்ற பெருமையால் நன்றியைச் சமர்ப்பித்து, எங்கள் மக்கள் தொண்டனுக்கு மயானம்வரை திரண்டு போன தீவக மக்களின் நன்றியுணர்வுக்குத் தலைவணங்குகிறேன். புங்குடுதீவு என்ற பூமி, பூமிசாஸ்திரத்தில் இருக்கும்வரை திருவின் புகழுடம்பு நிலைத்திருப்பது உறுதியாகும். புங்குடுதீவின் வரலாறு எழுதப்படும்போது திருவின் பெயர் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்படும். என் உயிர்த்தொண்டரின் திருவடியை என்றும் எனது நிழல் தொடரும்!

உன் பிரிவால் துயருறும் மைத்துனன்

**சோமு. சச்சிதானந்தன்**

தலைவர்

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்,
கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீவகம் கண்ணீர் சொரிகின்றது!

திருநாவுக்கரசு அண்ணாவின் திடீர் மறைவு கேட்டு தீவகம் மட்டும் அல்ல, வட மாகாணம் பூராவும் சோகத்தில் ஆழ்ந்தது. இப்படி ஒரு மனிதர் இந்த மண்ணில் அபூர்வமாகப் பிறந்துள்ளார். இப்படி ஒரு மனிதர் இனிப் பிறப்பது அரிதாக இருக்கும். மற்றவர்கள் சிறப்பாக வாழ்வதையும் சிறப்பாக உண்ணுவதையும் மகிழ்ச்சியோடு பார்த்து ரசிப்பவரும் மற்றவர்களுக்காக வாழ்ந்து தான் பிரமச்சாரியாகவே இருந்து சமூகத் தொண்டைச் செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டார். அவரது எண்ணம் நிறைவேறியது.

அவர் தொண்டை சரிவர தனிமையில் செய்ய முடியாமல் போகவே, சர்வோதயம் என்னும் அமைப்புடன் இணைந்து மக்களுக்குத் தொண்டாற்றப் புறப்பட்டார். அவரது செயற்பாட்டைப் பாராட்டாதவர்கள் எவருமில்லை. தீவகத்தில் குடிதண்ணீர் பிரச்சனை பெருங் கொடுமை....! மக்கள் குடி தண்ணீர் இல்லாமல் செய்வதறியாது இருக்கையில் வாகனத்தின் (பவுசர்) மூலம் தண்ணீரை வழங்கினார். மக்கள் குறை என்னவென்று பார்த்து தீர்த்து வைத்தார்.

பாடசாலைச் சிறுவர்களுக்கு கல்வியால் முக்கிய கவனம் செலுத்தினார். அவர் சிறுவர்களுக்காக சில போட்டிகள் வைத்துப் பரிசில்கள் வழங்கினார்.

ஒரு நாள் திரு அண்ணா பாடசாலையில் 15 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்காக ஆத்திசூடி விழா ஒன்றை நடத்தினார். அதில் எனக்கும் அழைப்பு தந்து, அங்கு என்னை அழைத்து உரை நிகழ்த்தும்படி கேட்டார். நானும் அவரின் அழைப்பை ஏற்று, அங்கு சென்றேன். அங்கு பிள்ளைகளின் ஆத்திசூடி ஔவையாரின் 108 நல்வழிகளையும் குறிப்பிட்ட நேரத்தில் சொல்லி முடிப்பவர்களுக்கு ரொக்கப் பரிசு 100/- என்று போட்டி நடந்தது. அதில் வெற்றி யீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படடது. அப்பொழுதுதான் நான் உற்று நோக்கினேன். பரிசிலோடு பெரிய லட்டும் வாழைப்பழமும் கொடுத்து மகிழ்வதை. திரு அண்ணாவுக்கு குழந்தைகள் லட்டு சாப்பிடும்பொழுது அவருக்கு உண்டான மகிழ்ச்சியை நான் நேரில் கண்டேன். அப்படி மற்றவர்கள் வயிறார உண்பதில் அவருக்கு ஒரு நிறைவு, ஆனால், அண்ணா தனது உடலைக் கவனிக்கவில்லை. யாழ் நல்லூர்க் கந்தசாமி கோவில் தெற்குப் பக்கத்தில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து அன்னதானம் வழங்கி, கோப்பி வழங்கி பக்தர் குறை தீர்த்தார். அந்தப் பக்தர்களும் கண்ணீர் வடிக்கின்றார்கள்.

அண்ணா என்ன திட்டமிட்டாலும் அதைச் செவ்வனே செய்து முடிப்பதில் ஒரு வீரன். அந்த செயற்பாடுகளை இனி யார் செய்வார்கள்? இப்படி எல்லாம் பெரும் தொண்டாற்றிவிட்டு எங்களை விட்டு எங்கு சென்றாயோ?

அண்ணா என்னால் ஒன்றை மட்டும் மறக்கமுடியாது. 1989ம் ஆண்டு நான் யாழ் நகரில் உள்ள எனது நகைக் கடைக்கு வந்து விட்டேன். அப்பொழுது எனது வீட்டில் எனது 8 வயது மகளுக்கு பாம்பு கடித்து விட்டது. அந்த நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனது மனைவி, பிள்ளைகள் எல்லோரும் ஓலமிட்டு அழுதுகொண்டு இருக்கும் பொழுது திரு அண்ணா அதை அறிந்து ஓடி, எனது மகளைத் தோளில் சுமந்து சர்வோதய அலுவலகத்தில் கொண்டுபோய் உடன் சிகிச்சை அளித்தார். ஏதோ வொரு விஷக்கல்லை பாம்பு கடித்த இடத்தில் வைத்து விஷத்தை எடுத்து விட்டார். எனது மகளைக் காப்பாற்றி எங்களின் துயரத்தைப் போக்கி, சந்தோஷ மாக எங்களை வாழ வைத்த பெரு மகனே! என்றென்றும் நீர் எங்கு இருந்தாலும் நின் ஆத்மா சிறக்கும். நிச்சயம் திரு அண்ணா யோகர் சுவாமிகளின் அருகே இருப்பாய் அது நிச்சயம்.

ஓம் சாந்தி!

**லயன் சு. நித்தியானந்தன்**

நியூ கல்யாணி நகை அகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவின் திட்டங்களின்

# பட்டியல்.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் க. திருநாவுக்கரசு அவர்களின் அரசியல் கோட்பாடு

கிராம சுயராச்சியமே எமது சித்தாந்தம். இனவாதம், மொழிவாதம், கட்சி வாதம், சாதி வாதம், பிரதேச வாதம் அனைத்தையும் கடந்து மனித குலம் எங்கள் குலம், பூமி எங்கள் கிரகம், உயிர்க்குலம் எங்கள் கட்சி, சுதந்திரம் எங்கள் பிறப்பு உரிமை, நீதி எங்கள் மதம், கிராமம் எங்கள் கோயில், ஒழுக்கம் எங்கள் யாப்பு.

## வட இலங்கை சர்வோதய யாப்பு

**நோக்கம் - இலட்சியம் - அமைப்பு**

## சேவைத்திட்ட நிலப்பரப்புப் பிராந்தியம்

நெடுந்தீவு தொடக்கம் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி வரையுள்ள நகரங்கள், கிராமங்கள், குடியேற்றங்கள் அனைத்தையும் இணைத்து வட இலங்கை சர்வோதயம் செயலாற்றும் பொறுப்புரிமை கொண்டது.

**பெயர்** : **வட இலங்கை சர்வோதயம்**

**உதயம்** : **23. 07. 1972ஆம் ஆண்டு புங்குடுதீவில்**

**நோக்கம்**

பிரிவினைகளற்ற எழுச்சியும் சுரண்டலற்ற பொருளாதாரமும் கூட்டுறவு கொண்ட சமுதாய வாழ்வும், பூர்விக கலை கலாசாரமும், விஞ்ஞானமும் கொண்ட எழுச்சி மிக்க சமுதாயத்தை கிராம மட்டத்திலிருந்து உலக மட்டத்திற்கு எழச் செய்து புதியதோர் உலகம் செய்வோம்.

**இலட்சியம்**

மக்களின் சிந்தனை, செயல், அறிவு, அனுபவம் அனைத்தையும் ஒன்று திரட்டி, கிராமங்களிலிருந்து உலகை நோக்கியெழும் வாழ்க்கை நெறிகொண்ட சமுதாயத்தை அன்பு, கருணை, அகிம்சை, தியாகம், மனிதநேயம், மகிழ்ச்சி, கூடி வாழ்தல் என்ற சனாதன தர்மங்களுக்கூடாக மனிதோதய மேம்பாட்டிற்குள் அழைத்துச் செல்வோம்.

**முரசு** : "என் கடன் பணி செய்து கிடப்பதே"

**தாரக மந்திரம்** : "யாதூஊம் ஊரே - யாவரும் கேளிர்" .

**இலச்சினை** : ரிசபம்

**கொடி வர்ணம்** : இளம் சிவப்பு
நீலம், பச்சை, மஞ்சள், ஊதா மூலை வர்ணங்கள்

**தத்துவம்** : பகவத் கீதை, திருக்குறள், பெரியபுராணம், கந்தபுராணம்

**அடிச்சுவடு** : சனாதன தர்மம் - மகாத்மா காந்தி - ஆபிரகாம் லிங்கன் - டால்ஸ்டாய்

**தலைமை நிர்வாக மையம்**

வட இலங்கை சர்வோதய சேவை வளாகம், புங்குடுதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம மட்டத்திலிருந்து உலகை நோக்கியெழும் இலக்குகளை நிர்மாணப் பயிற்சிகளால் முன்னெடுத்து மனிதகுல மேம்பாட்டுக்கு அர்ப்பணித்தல்.

**பயிற்சித் தளங்கள்**

1. ஆதாரக் கல்வியும் பண்பாட்டுப் பழக்கங்களும்
2. சுகாதாரப் பயிற்சியும் இயற்கையின் உறவும்
3. ஆதார உணவுகளும் சமையல் பாகங்களும்
4. உடையும் உடலாரோக்கியமும் சுவாத்தியமும்
5. குடிசை விவசாயமும் வான்பயிர் வளர்ப்பும்
6. விலங்கு வேளாண்மையும் உயிர்களுடன் உறவும்
7. மழைநீர் சேமிப்பும் குடிநீர்ப் பாதுகாப்பும்
8. கிராமியக் கலைகளும் பாமரர் இசையும்
9. நூலகங்கள் சேவையும், நூல்கள் பாதுகாப்பும்
10. நூதனசாலையும் தொல்பொருள் சேகரிப்பும்
11. வானொலி, தொலைக்காட்சி, செய்மதி, தொலைத்தொடர்பு, விஞ்ஞானம்
12. சேமிப்பு, காப்புறுதி, ஓய்வூதியம், வங்கி நலன் சேவைகள்
13. கடல் வளம், கடலாதிக்கம், கடற்கரை காத்தல், கடலோடல்
14. கிராம வீதிகள், நெடுஞ்சாலைகள் - பாதைகள், ஒழுங்கைகள் பாதுகாத்தல்
15. சிரமதானம், பூமிதானம், புத்திதானம், சம்பத்தானம், ஜீவதானம்
16. ஜீவோதயம், குடும்போதயம், மனிதோதயம்
17. ஆன்மீகம், அறவாழ்வு, சும்மா இருத்தல், சாந்தி சேனை
18. கிராமோதயம், தேசோதயம், விஸ்வோதயம் நோக்கி எழுதல்
19. சமாதானம், சட்டம், தேசவழமை, நீதி பேணல்
20. கன்னி, மங்கை, விதவை, அனாதைப் பெண் சேவைகள்
21. பசு வளர்ப்பு, பசுகாத்தல், பசுவதை ஒழிப்பு
22. மது ஒழிப்பு, மதுசார உற்பத்தித் தடுப்பு, போதைப்பொருள் மறுப்பு
23. இயல், இசை, நாடகம், பேசும் தமிழ்ப் பணிகள்
24. பொறியியல், இயந்திரவியல், தொழில்நுட்பவியல், கலைகள் வளர்ப்பு
25. சுதேசியம், சுயசக்தி, சுயராச்சியம், சுயம் பூரணம்
26. ஸ்ரீலங்கா தொடக்கம் ஐக்கிய நாடுகள்வரை உலக வலம்
27. விளையாட்டு, களியாட்டு, உலகாட்டு பயிற்சிகள்
28. சுதேசியத் தொழில்நுட்பங்கள் கிராமியக் கைப்பணிகள்
29. குடியேற்றங்கள், பூமி மீட்டல்கள், பூமி பாதுகாப்புகள்
30. பசுமை வளர்ப்பு, பசுமைப் பாதுகாப்பு, பசுமை நேசிப்பு
31. சைவவாழ்வு, சைவ உணவு, சைவச் சங்கம், சைவ உலகு
32. முதியோர் சேவை, அங்கவீனர் பணிகள், நோயாளர் தொண்டு
33. யுவர், யுவதி, யுகம் தலைமுறைச் சேமிப்பு
34. பாதயாத்திரை, தலயாத்திரை, சுற்றுலாப் பயணம், உல்லாசப் பயணம்
35. குடும்ப நிதியங்கள், கிராமச் சீட்டுக்கள், கைமாற்றுக் கடன்கள், வட்டிக் கடனுதவிகள், கூட்டுறவு நலன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



36. கிராமமட்ட சமய, சமூக, கலை, இலக்கிய மன்றங்கள், அரச திணைக் களங்கள், இலாகாக்கள், தன்னார்வத் தொண்டு நிலையங்கள் ஆகிய வற்றுடன் இணையம்
37. பிரதேச மாவட்ட, தேசிய மட்ட அரச திணைக்களங்கள், இலாகாக்கள் சபைகள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் சேவைகள், அனுபவங் கள், தொழிநுட்பங்கள் பகிர்தல் ஒன்றியம்
38. ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய சேவைத் திட்டங்கள், உலகளாவிய தொண்டு நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்றிட்டங் களுடன் இணைந்து செயலாற்றல், பங்கு கொள்ளல், பகிர்ந்து கொள்ளல்
39. அணுவாயுத உற்பத்தி, அணுவாயுதப்போர், இயற்கை அழிப்பு இன அழிப்பு, ஆக்கிரமிப்பு, சுரண்டல் ஆகியவற்றிற்கு எதிராகப் போராடும் உலக மக்களுடன் இணைதல், போராடுதல்
40. தனிமனித வாழ்க்கைச் சுமைகளை சமுதாயக் கடமைகளாகப் பகிர்ந்து கொள்ளல், ஏற்றல்
41. சமுதாயக் கூட்டுறவு, சமூகக் கூட்டுறவு, கிராமக் கூட்டுறவு, வலுவடைதல், கூடி வாழ்தல், பேராசை, சுயநலம், போட்டி நீங்கி நிற்றல்
42. தியானம், யோகாசனம், புலனடக்கம், உடலோம்பல், உளப் பரிணாமக் கலை
43. மூலிகைத்தோப்பு, தென்னந்தோப்பு, பனந்தோப்பு, தலவிருட்சங்கள் கோட்டம்
44. சோதிடம், வைத்தியம், வானசாஸ்திரம், பரவெளித் தத்துவம் கற்றல்.
45. சமாதானம், சட்ட உதவி, நீதிமன்றுக்கு உண்மை விளம்பல்
46. மயானம், இடுகாடு, மடம், தீர்த்தக்கரை பராமரிப்பு, அபிவிருத்தி

**ஆயிரம் கிராமங்களின் சேவை நோக்கி.....**

# வட இலங்கை சர்வோதயம்

## புங்குடுதீவு

### 1972 தொடக்கம் 2000 வரை மேற்கொண்ட

#### நிர்மாணப்பணிகள்

| | |
|---|---|
| சர்வோதய சேவையில் இணைக்கப்பட்ட குடும்பங்கள் | 10,000 |
| நிர்மாணத் திட்டங்களில் இணைக்கப்பட்ட அங்கத்தவர்கள் | 25,000 |
| நிர்மாணப் பணிக்கு இணைக்கப்பட்ட கிராமங்கள் | 300 |
| நிர்மாணிக்கப்பட்ட சேவை நிலையங்கள் | 26 |
| சுகாதார சேவைப் பயிற்சி நிலையம் | 01 |
| மாதிரிக் கிராமத்திட்டம் (கேரதீவு) | 01 |
| விவசாயப் பயிற்சிப் பண்ணை (கிளிநொச்சி) | 01 |
| அகதிகள் புனர்வாழ்வுத் திட்டம் (மாளிகைத் திடல், ஜெயபுரம்) | 02 |
| மலையக மக்கள் சேவை நிலையம் (தலைமன்னார்) | 01 |
| குடிநீர் விநியோகத் திட்டம் (தீவகம்) | 01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உயர்திரு. க. திருநாவுக்கரசு அவர்களின் சிந்தனையில் உதித்து அவரினால் வட இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு

# செயற்படுத்தப்பட்ட பணிகள்.

- தமிழரசுக் கட்சிப் பணிகள் - வாலிப முன்னணியின் வளர்ப்பு
- சிரமதானம்
- சுகாதாரசேவை
- தாய் - சேய் நலன் சேவை.
- சத்துணவுத்திட்டம்
- முதலுதவி வகுப்புக்கள்
- சித்த ஆயுர்வேத வைத்திய சேவை
- தண்ணீர்ப் பந்தல் சேவை
- கிராமங்கள் தோறும் குடிநீர்வழங்கல்
- நன்னீர்க் கிணறுகள் கட்டுதல்
- மழைநீர்த் தேக்கம்
- குளங்கள் வெட்டுதல், புனரமைத்தல்
- அன்னதானப் பணிகள்
- நல்லூர் முருகன் வழிபாட்டாளர் நலன் சேவைப் பந்தல்
- சிறுவர் பள்ளிகள்
- பொதுக்குசினிப் பணிகள்
- நியாயவிலைக் கடைகள்
- பயிற்சி வகுப்புக்கள் நடாத்தல்
- அகதிகள் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள்
- மாதிரிக் கிராமம் உருவாக்கல்
- உயிர் பாதுகாப்புச் சேவை
- பாதயாத்திரைகள் நடாத்தல்
- நீதி நூல்கள் முற்றோதல் செய்வித்தல்
- நீதி நூல்கள் மறுபதிப்புப் பணிகள்
- சிறுவர் சேமிப்புத் திட்டங்கள்
- குடும்பப் பாதுகாப்பு காப்புறுதித் திட்டங்கள்
- குடும்ப நிதிய சேவைத் திட்டங்கள்
- வாழ்க்கைப் பயிற்சி நிலையங்கள்
- அங்கவீனர் சேவைத் திட்டங்கள்
- விதவைகள், கைவிடப்பட்ட பெண்களுக்கான சேவைகள்
- வெள்ள நிவாரணப் பணிகள்
- வரட்சி நிவாரணப் பணிகள்
- மரநடுகை
- விவசாயம்
- வீட்டுத் தோட்டம்
- பசுப்பண்ணைத் திட்டம்
- சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்
- கடல் நீரைத் தடுத்து பூமியை மீட்கும் திட்டம்
- மயான அபிவிருத்தித் திட்டம்
- கால்நடை வளர்ப்பு, பாதுகாப்பு
- கோமாதாக்களுக்குத் தீன்தானம்
- பறவைகள் சரணாலயம்
- நூல் நிலையம்
- 'தீவகம் பத்திரிகை', 'புங்குடுதீவுக் குரல்', 'சேவை மலர்' ஆகியன வெளியிடுதல்
- முதியோர் பராமரிப்பும் கௌரவிப்புப் பணிகள்

  இயல், இசை, நாடகப் பணிகள்
- தீவக பிரயாணக் கஷ்டங்களால் வாடும் மக்களுக்கான சத்திரப் பணிகள்
- தாயகம் மீளும் மலையக மக்கள் சேவை
- சிவபூசைக்கான ஒழுங்குப்பணிகள்
- குருபூசை வழிபாடுகள்
- பல பணிமன்றங்கள் உருவாக்கல்
- கோயிற் திருப்பணிகள்
- வழிபாட்டாளர் சேவைகள்
- ஆன்மீக, கலை, கலாசாரப் பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உயர்திரு. க. திருநாவுக்கரசு அவர்கள்
## தனது இறுதி நாளன்று
## கனடா வாழ் புங்குடுதீவு மக்களுக்காக அவர் தயாரித்த
# புங்குடுதீவின் நிர்மாணத் திட்டங்கள்

**தலைவர் அவர்கள்**
**கனடா வாழ் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்**
**கனடா.**

சேவைக்குரிய தலைவர் அவர்கட்கு ஊடாக,
கனடா வாழ் புங்குடுதீவு மக்களுக்கு;

## புங்குடுதீவில் அவசர வேலையும் நிர்மாணப் பணிகளும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நமது முன்னோர்களால் முன்னெடுக்கப்பட்ட கிராம நிர்மாணப்பணிகள் இருபதாம் நூற்றாண்டு முடிவில் சுயம் பூரண வளர்ச்சிபெற்று சமய, சமூக, சுகாதாரம், கல்வி, விவசாயம், மின்சாரம், போக்குவரத்து, வீட்டு வசதி, குடிநீர் வசதி, வான்பயிர் வளங்கள் அனைத்திலும் தன்னிறைவு கண்ட கிராமமாக மிளிரத் தொடங்கியது.

1991ஆம் ஆண்டு ஏற்பட்ட மக்கள் புலம் பெயர்வும் போர்க்கால நடவடிக்கைகளும் கட்டியெழுப்பப்பட்ட நிர்மாணப் பணிகளையும் அழித்து, மக்களையும் அகதி நிலைக்குத் தள்ளியது. புங்குடுதீவு வரலாறு சந்தித்த முதற் பேரழிவாகும் இது. இன்று ஒரு சூனியப் பிரதேசமாகத் திகழும் நமது தாயகத்தில் (2,200) இரண்டாயிரத்து இருநூறு மக்கள் எத்தகைய அடிப்படை வசதிகளுமற்று இராணுவ வலயத்திற்குள் வாழும் நிலையில் உள்ளனர். கோடிக்கணக்கான மக்களின் சொத்துக்களும் மக்களின் பெரும் முயற்சியால் கட்டியெழுப்பப்பட்ட நிர்மாண வேலைகளும் ஆலயங்களும் அழிவின் விளிம்பிற்கு வந்து கொண்டிருக்கின்றன.

கல்வியோ, ஆளுமையோ, கிராமப் பற்றோ, கடவுள் சிந்தனையோ இல்லாத மக்கள் தொகையே வாழ்வதால் குடிவெறியும் சமூக விரோதச் செயல்களும் தேச விரோதச் செயல்களும் மலிந்து கட்டுப்பாடற்ற சமூகமொன்று உருவாகி வருகிறது. இத்தகைய சூழ்நிலையிலிருந்து நமது தாயக மண்ணை மீட்கவும் புங்குடுதீவை மீண்டும் புனர்நிர்மாணம் செய்யவும் கனடா வாழ் புங்குடுதீவு மக்கள் அனைவரும் கைகொடுக்க வேண்டுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புங்குடுதீவின் தற்கால நிலைமைக்கும் எதிர்காலத்திற்கும் மேற்கொள்ளவேண்டிய அவசிய நிர்மாணப் பணிகள்

**1. கல்வி**

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அரசின் புதிய கல்வித் திட்டத்திற்கும் ஏற்றவகையில், எல்லா நவீன வசதிகளும் கொண்ட கல்லூரியாக ஒரு பாடசாலையைப் புங்குடுதீவில் உருவாக்கி, மாணவர்களின் அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுக்க கனடா வாழ் மக்கள் முன்வர வேண்டும். இன்று புங்குடுதீவு பாடசாலைகள் பெரும் அவல நிலைக்கும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாகி வருகின்றன.

**2. விவசாயம், வீட்டுத்தோட்டம், மரம் நடுகை**

விவசாயம், வீட்டுத்தோட்டம், மரம் நடுகை ஆகியவற்றை மக்களிடம் ஊக்குவிக்க மரக்கறி நாற்றுக்கள், தென்னம்பிள்ளைகள், பழமரக் கன்று களை உற்பத்தி செய்து மக்களுக்கு இனாமாகவோ, மானிய விலை யிலோ வழங்கி உணவுற்பத்தியை அதிகரிக்கச்செய்து, கிராமச் சுய தேவையைப் பூர்த்தி செய்யத்தக்க நவீன நாற்று மேடைகளை உருவாக்கி வழிகாட்டல்.

**3. விலங்கு வேளாண்மை, கோழிப்பண்ணை**

தற்போது கிராமத்திலுள்ள கால்நடைகளில் நல்லினங்களை இனவிருத்தி செய்து பால் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் குடும்பங்களின் பொருளா தாரம் வளர, புதிய விலங்குகளையும் வளர்க்க மக்களுக்குப் பயிற்சி யளித்து வழிகாட்டல்.

**4. மக்களுக்குப் பயிற்சியும், உதவியும் அளிக்கும் திட்டம்**

கிராமத்தின் மூலப்பொருட்களில் பாதுகாப்பான கூடுகள் உருவாக்கி குடும்பக் கோழிப்பண்ணை நடாத்த மக்களுக்குப் பயிற்சியும், உதவியும் அளிக்கும் திட்டம்.

**5. குளங்கள் அபிவிருத்தித் திட்டம்**

கிராமத்தில் நீண்ட காலம் மக்களும், கால்நடைகளும் உபயோகித்த 30இற்கு மேற்பட்ட குளங்கள் உவர்நீராகி நிலத்தடி நீர்மட்டத்திற்கு மழைநீர் தேங்கா திருப்பதால், உவர்நீர் மட்டத்திற்கு இக்குளங்களை மூடி மழை நீரைத் தேக்கி, நன்னீர்க் குளங்களாக இக்குளங்களை மாற்றியமைக்கும் திட்டம்.

**6. கடலரிப்புத் தடுப்புத் திட்டம்**

கிராமத்தின் நாலா பகுதியிலும் கடலரிப்பால் இழந்துவரும் கிராமப் பூமியை பாதுகாக்கவும் இழந்த பூமியை மீட்டெடுக்கவும் குறுகிய கால, நீண்ட கால நிர்மாணத் திட்டம் தயாரித்தல்.

**7. மரம் நடுகைத் திட்டம்**

அதிக மழைவீழ்ச்சியைப் பெறவும் வரட்சியைக் கட்டுப்படுத்தவும் பழவகைகள் மூலம் நமது சிறுவர்களுக்கு உணவளிக்கவும் காற்றில் வரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உவர்நீரைக் கட்டுப்படுத்தவும் வான்பயிர் மரங்களையும் பழமரங்களையும் மூலிகை விருட்சங்களையும் வீதியோரங்களிலும் குளக்கரைகளிலும் பொது இடங்களிலும் ஆலயச் சூழல்களிலும் நட்டுப் பாதுகாக்கும் திட்டம்.

**8. பறவைகள் சரணாலயம்**

புங்குடுதீவில் நடுவுத் துருத்திக் கிராமப் பகுதியைப் பறவைகள் சரணாலயப் பகுதியாக உருவாக்கிப் பருவ காலங்களில் ஆசியாவின் பல பகுதிகளிலு மிருந்து வரும் பறவைகளும், கிராமத்தில் நிரந்தரமாக வாழும் பறவைகளும் சுதந்திரமாக வாழப் பாதுகாப்பு வழங்கும் திட்டம்.

**9. பசுக்களின் சரணாலயத் திட்டம்**

குடிநீருக்கும் மேய்ச்சலுக்கும் அலைந்து திரிய முடியாமல் நா வறண்டு இறக்கும் வயோதிபப் பசுக்களையும் நோய்வாய்ப்பட்டு இறக்கும் பசுக்களின் மரணங்களையும் தடுக்க கிராமத்தில் பசுக்கள் சரணாலயம் உருவாக்கி உணவும் தண்ணீரும் பராமரிப்பும் பாதுகாப்பும் அளிக்கும் திட்டம்.

**10. கால் நடை இன அபிவிருத்தித் திட்டம்**

பசுக்கள் சரணாலயத்தில் இனவிருத்தித்குத் தகுந்த கிராமப் பசுக்களைத் தேர்ந்தெடுத்து, ஊசிமூலம் சினைப்படுத்தி பால்வளம் தரத்தக்க கன்றுகளை மக்களுக்குக் கொடுத்து கால்நடை வளர்ப்பில் புதிய ஊக்குவிப்பை உருவாக்கும் திட்டம்.

**11. 5 000 கால்நடைகளுக்கு உணவளிக்கும் திட்டம்**

மேச்சலுமின்றி, குடி தண்ணீருமின்றித் தவித்துத் திரியும் கிராமத்தின் கால்நடைகளுக்குப் பனையோலைகளை வெட்டி உணவளிப்பதோடு பனைமரங்களின் வளத்தையும் பாதுகாக்கும் திட்டம்.

**12. உணவு வங்கித் திட்டம்**

கிராமத்து மக்களின் ஆரோக்கியம், சுகாதாரம், சத்துணவு தேவைகளைக் கண்காணிக்கவும், உடல் நிலைக்கேற்ற சத்துணவை சிறுவர்களும் பெரியோர்களும் பெறுவதற்கும் பருவகாலங்களுக்கு ஏற்ப மிகமலிவு விலைக்குவரும் மரக்கறிகளையும், பழவகைகளையும் கருவாடு, மீன் வகைகளையும் உணவு வங்கி மூலம் குடும்ப ரீதியாகப் பங்கிட்டு வழங்கும் திட்டமொன்றை உருவாக்கல்

**13. தைப்பொங்கல், சித்திரைப் புதுவருடம், தீபாவளிப் பண்டிகைக் கொண்டாட்டங்கள்**

தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படும் தைப்பொங்கல், சித்திரை வருடம், தீபாவளி நாட்களில் கிராமத்தின் சகல குழந்தைகளும் மகிழக்கூடியதாகப் புதிய உடைகள் சிற்றுண்டிகள், விளையாட்டு உபகரணங்கள், கல்வி உபகரணங்கள் கொடுத்து கலாசாரக் கொண்டாட்டங்களில் சிறுவர்களைக் கவரச் செய்யும் திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**14. தெங்கு, பனம் பொருள் கைத்தொழில்**

தெங்கு, பனம் பொருள் கைத்தொழிலில் ஈடுபட்டுவரும் மக்களின் உணவு உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல், ஊக்குவித்தல், பயிற்சியளித்தல் ஆகிய திட்டங்கள்மூலம் உதவி அளித்தல்.

**15. இந்தியாவில் பயிற்சிநெறித் திட்டங்கள்**

கிராமத்திலிருந்து தகுதி வாய்ந்த இளைஞர்களையும், யுவதிகளையும் தேர்ந்தெடுத்து குடிசைக் கைத்தொழில், கால்நடைவளர்ப்பு, கிராமத் தொழில்நுட்பம், கால்நடை வைத்தியம், குடும்ப சுகாதாரம், தேனீ வளர்த்தல், மூலிகை வளர்ப்பு, சமையற்கலை ஆகிய துறைகளில் குறுகியகால, நீண்ட காலப் பயிற்சிகள் அளிக்கும் திட்டம்.

**16. சாரதிப் பயிற்சி நெறித்திட்டம்**

கடலிலும், தரையிலும் வாகனங்களை இயக்கவும், செலுத்தவும் இளைஞர் களுக்குப் பயிற்சியளித்து வேலை வாய்ப்புக்கள் பெற வழிகாட்டும் திட்டம்.

**17. பயிற்சி நெறிகளும் பொது அறிவு வளர்ச்சிக்கு வழிகாட்டலும்**

அரச திணைக்களங்கள், சர்வதேச நிறுவனங்கள், சமய ஸ்தாபனங்கள், தொண்டர் நிறுவனங்கள் நடாத்தும் பயிற்சி நெறிகளைக் கிராமத்தில் நடை பெறச் செய்து மக்களின் பொதுஅறிவு வளர்ச்சிக்கு உதவியளிக்கும் திட்டம்

**18. வாசகர் வட்டமும் வாசிப்புப் பயிற்சியும்**

நாளாந்த, மாதாந்த வெளியீடுகளையும் சஞ்சிகைகளையும் வாசகர் வட்டங்கள் மூலம் வழங்கி வாசிப்புப் பழக்கத்தை மக்களிடம் ஊக்குவிக்கும் திட்டம்

**19. கிராமத் தொலைக்காட்சி நிலையம்**

கிராமத்தின் மத்திய பகுதிகளில் பொதுத் தொலைக்காட்சி நிலையங்களை நிறுவி கல்வி, கலை, கலாசார நிகழ்ச்சிகளையும் விஞ்ஞானச் செய்தி களையும் உலக விடயங்களையும் மாணவர்களும் மக்களும் அறிந்து கொள்ள உதவும் திட்டம்.

**20. சிறுவர் சேமிப்புச் சேவைத்திட்டம்**

இருபத்தோராம் நூற்றாண்டிலிருந்து கிராமத்தில் பிறந்த குழந்தைகளுக்கும் பிறக்கப்போகும் குழந்தைகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிமூலம் சேமிப்புக் கணக்குகளை உருவாக்கிக் கொடுத்து கல்வியைத் தொடரவும் தொழிற்கல்வி கற்கவும் தொழிலை மேற்கொள்ளவும் இல்லறத்தை உருவாக் கவும் வழிகாட்டும் திட்டம்.

**21. சைக்கிள் கடனுதவித் திட்டம்**

சொந்தமான சைக்கிள் வண்டி இல்லாத மாணவர்களுக்கும் தொழிலாளர் களுக்கும் மூன்று வருடக் கடன் அடிப்படையில் சைக்கிள் வழங்கி கல்விக்கும் தொழிலுக்கும் மாணவர்களையும் தொழிலாளர்களையும் ஊக்குவிக்கும் திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**22. சிறுவர் கடல் பூங்கா**

மடத்துவெளித் துறைமுகத்தின் மேற்குப் பகுதிக் கடற்பரப்பில் சிறுவர் கடல் பூங்கா திட்டமொன்றை உருவாக்கி துறைமுகத்தை அழகு செய்வதுடன் கிராமச் சிறுவர்களின் உல்லாசப் பிரயாண இடமாக நிர்மாணிக்கும் திட்டம்.

**23. தண்ணீர்ப் பந்தல் திட்டம்**

கிராமத்திற்கூடாக நயினாதீவுக்கு வரும் யாத்திரிகர்களுக்கும் நெடுந்தீவுக்கு வரும் உல்லாசப்பயணிகளுக்கும் பிரயாணஞ் செய்யும் பொதுமக்களுக்கும் கிராம மக்களுக்கும் சுத்தமான குடிதண்ணீர் வழங்க பெருங்காட்டிலும் மடத்து வெளியிலும் நிரந்தர தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம்.

**24. பொதுக் குசினித் திட்டம்**

கிராமத்தில் தனித்துத் தங்கியுள்ள வயோதிபர்களுக்கு உணவு, குடிநீர், வைத்திய உதவி, சுகாதார வசதி அளிக்கத்தக்க பொதுக்குசினித் திட்ட மொன்றையும் தொண்டர் சேவையையும் இணைக்கும் திட்டம்.

**25. மாலை வகுப்புத் திட்டம்**

கிராமத்து மாணவர்களுக்கு ஆங்கிலம், விஞ்ஞானம், கணித பாடங்களில் மேலதிகப் பயிற்சியளிக்கத் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் மூலம் மாலை வகுப்புக்களை நடாத்தும் திட்டம்.

**26. இயல், இசை, நாடகக் கல்வி**

கிராமத்து மாணவர்களில் சங்கீதம், வாத்தியம், நடனம் கற்கத்தக்கவர் களைத் தேர்ந்தெடுத்து யாழ்நகரில் பயிற்சிபெற சனி, ஞாயிறு வகுப்புக் களுக்கு அனுப்பிப் பயிற்சியளிக்கும் திட்டம்.

**27. புங்குடுதீவில் பண்ணிசை பயிற்சித் திட்டம்**

தேவார, திருவாசகங்களைப் பண்முறையில் படிக்கத்தக்க திறமை வாய்ந்த மாணவர்களை வளர்த்தெடுக்கப் பண்ணிசை வகுப்பொன்றை கிராமத்தில் உருவாக்கும் திட்டம்.

**28. கனடா - புங்குடுதீவு ஐக்கிய அபிவிருத்தி மன்றத் திட்டம்**

கனடா வாழ் புங்குடுதீவு மக்கள் ஐக்கியத்துடன் வாழவும் புங்குடுதீவைக் கட்டியெழுப்பும் நிர்மாணப் பணியில் பங்குகொள்ளவும் கிராமத்தில் வாழும் தமது உறவினர்களையும் நண்பர்களையும் உற்சாகமூட்டி வாழ வைக்கவும் மேற்படி பெயரில் அமைப்பொன்றை உருவாக்கும் திட்டம்.

**29. கனடா வாழ் இளைஞர் யுவதியர்க்கு இந்தியாவில் பயிற்சித் திட்டம்**

கனடாவில் தாயகப் பணிகளில் ஈடுபடும் இளைஞர், யுவதிகள், தொண்டர்கள் ஆகியோர் தாயகப் பணிகள் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்ளவும் நிர்மாணத் திட்டங்களில் எப்படி ஈடுபடுவதென்பதை அறிந்துகொள்ளவும் இந்தியாவிலுள்ள காந்தி நிறுவனங்கள், சர்வோதய நிலையங்கள், விவசாயப் பண்ணைகள், பாற் பண்ணைகள், ஆடுவளர்ப்புத் திட்டம், பனை அபிவிருத்தித் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகாதார சேவைப்பணிகள் அனைத்தையும் பார்வையிடவும் பயிற்சி பெறவும் வழிகாட்டும் திட்டம்.

**30. கிராம மாணவர் கல்விச் சுற்றுலா**

கிராமத்தின் மாணவர்கள் ஆண்டுதோறும் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு அறிவை வளர்த்துக்கொள்ள உதவியளிக்கும் திட்டம்.

**31. கிணறுகள் சுத்தி செய்யும் பணி**

கிராமத்தின் சகல பகுதிகளிலும் பொது இடங்களிலும் மக்கள் நீராடவும் குடிக்கவும் தண்ணீரை உபயோகிக்கும் கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்வதுடன் திருத்தப் பணிகள்மூலம் கிணறுகளைப் பாதுகாக்கும் சேவைத்திட்டம்.

ஒரு வரலாற்று அழிவையும் புலம்பெயர்வையும் சந்தித்துள்ள நமது தாயகத்தை மீண்டும் புனரமைத்து புலம்பெயர்ந்த மக்களைக் கிராமத்திற்குத் திரும்பச் செய்வது மிகக் கடினமான பணியாக இருந்தாலும் நமது அனுபவங்களையும் திறமையையும் அறிவையும் பயன்படுத்தி இப்பணியை விரைவுபடுத்த முடியும்.

மீளக் குடியமர்ந்த மக்களுக்கும் கிராமத்திற்கும் மிக அத்தியாவசியமாக வேண்டப்படும் வேலைத்திட்டங்களே தங்களுக்கு இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தங்கள் சங்கத்தின் சக்திக்கேற்ப இத்திட்டங்களில் தாங்கள் விரும்பும் திட்டங்களைத் தேர்ந்தெடுத்தால் அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த விரிவான புள்ளி விபரங்களும் நடைமுறைக்கேற்ற செயல் வடிவங்களும் தயாரிக்கப்பட வேண்டும். செயற்பாடுகளை நிறைவேற்றித் தங்கள் நோக்கம் நிறைவேற முழுமையான எமது பங்களிப்பு தங்கள் பணிகளுக்கு வழங்கப்படும்.

**கடைசி**

பல இன்னல்களைக் கடந்து கனடாவில் தஞ்சமடைந்து அகதிநிலை வாழ்க்கையில் இருந்தபோதும் உங்கள் தாயகத்தை மறவாது அந்த மண்ணுக்கும் மண்ணில் வாழும் மக்களுக்கும் சேவையாற்ற வேண்டுமென எழுச்சிகொண்டு பணிபுரியத்துடிக்கும் கனடாவாழ் புங்குடுதீவு மக்களினதும் இளைஞர் யுவதிகளினதும் தேசப்பற்றுக்குத் தலைவணங்கி வாழ்த்துகின்றோம்.

மண்ணின் பிறப்புரிமையையும் மக்களின் உறவையும் கிராமத்தின் சொந்தங்களையும் இழந்துவிடாமல் காக்க பூங்குடி மக்கள் எழட்டும்! உலக மக்களின் உறவுகளையும் அன்பையும் பெற்று "புதியதோர் உலகம் செய்வோம்"!

நன்றும் தீதும் பிறர்தர வாரா!!

GO BACK!

செய் அல்லது செத்துமடி!

கனடாவின் பனி மலைக்கும் அரசுக்கும்
வாழியுலகின் வாழ்த்துக்கள்!

அன்புடன்
**க. திருநாவுக்கரசு**

---

இறப்பதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்பு 'திரு' எழுதிய கடிதமிது.
'கடைசி' என்று அவர் தலைப்பிட்ட பந்தியைக் கவனிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டு தொடர்ந்த பாதை . . . . .

1956 திருகோணமலை கோணேசர் ஆலயத்தின் மலையுச்சியில் நின்று நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்து சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமை

1958 இளைஞர் கழகம் புங்குடுதீவு - செயலாளர்

1958 சிவயோக சுவாமிகள் தரிசனமும் ஆசியும் பெற்றமை

1962 தந்தை செல்வாவின் தலைமையில் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் செயலாளர்

1964-1968 புங்குடுதீவு கிராம சபையின் 4ஆம் வட்டார அங்கத்தவர்

1972 இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்தில் இணைந்து தமிழ்ப்பகுதிகளில் சர்வோதயப் பணிகளை முதன் முதலில் நடைமுறைப்படுத்தியமை

1974 வினோபாஜி அடிகளின் பூமிதான இயக்கத்தில் இணைந்து இந்திய - இலங்கை பாதயாத்திரையை வடபகுதிக்குள் தலைமை தாங்கி நடாத்தியமை

1975 புங்குடுதீவு அரசினர் மாவட்ட வைத்திசாலையின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக அரச நியமனம் பெற்றார்.

1977 புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்.

1980 யாழ் மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டார்

1982 புங்குடுதீவு சமாதான சபையின் செயலாளர்

1983 மில்க்வைற் பனை அபிவிருத்தி இயக்கத்தினரால் பனைவளம் பெருக்கிய பண்பாளர் என்னும் பட்டஞ் சூட்டப்பட்டார்

1983 இலங்கை அரசினால் சிறந்த சமூக சேவையாளர் என்னும் விருதிற்குத் தெரிவு செய்யப்பட்டார்

1984 இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்திலிருந்து பிரிந்து வட இலங்கை சர்வோதயம் அமைத்தார்.

1993 நல்லூர் முருகன் வழிபாட்டாளர் நலன் சேவைப்பந்தல் பணிகளை மேற்கொண்டார்

1997 பெருங்காடு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க தலைவரானார்

1997 பெருங்காடு தெற்கு விவசாய சம்மேளனத் தலைவரானார்

2000 பிரதேசமட்ட சிறுவர் கண்காணிப்புக் குழு உப தலைவரானார்

2000 புங்குடுதீவு கமநல கேந்திர நிலையத் தலைவரானார்

2001 யாழ் மாவட்ட விதை உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்

1978-1981 வரையில் இந்தியா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், ரஷ்யா நாடுகளுக்கு சர்வோதய மகா நாட்டுப் பயணங்களை மேற்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லோர்க்கும் எங்கள் நன்றி!

நாடு ஒரு தொண்டனை இழந்தது. புங்குடுதீவு ஒரு தலைவனை, வழிகாட்டியை இழந்தது. ஆனால், எனது வீடு என் குடும்ப அங்கத்தினனை இழந்தது. ஆக, இதில் யாருக்கு யார் ஆறுதல் கூறுவது என்பதே பெரும் கடினமான விடயமாகும். அண்ணன் இல்லையென்றால் நானும் எனது வட்டாரமுமே அரங்குக்கு வந்திருக்க முடியாது. ஆற்றல்களை அடையாளங் கண்டிருக்க முடியாது. காட்டிப் பறிப்பதே விதி - என்பது போல அண்ணனையும் அவரின் அருமையையும் அறிவையும் காட்டி எங்களை வியக்கச் செய்த விதி இப்போது அவரைப் பறித்து எம்மைக் கண்ணீரில் மிதக்கச் செய்துவிட்டது.

சிகிச்சை முடிந்து திரும்புவார், சேவைகளைத் தொடர்ந்தும் புது வேகத்துடன் முன்னெடுப்பார் என்ற நம்பிக்கை விருப்பில் இருந்த நாம் பேரிடியை 3. 10. 2001 இல் சந்தித்தோம். செய்வதறியாது விம்மித்தோம். துக்கத்தால் துவண்டோம். ஆனாலும், செய்தி கேட்டவுடன் நாலாபுறமிருந்தும் நண்பர்களும் அன்பர்களும் திரண்டார்கள். திகைத்து நின்ற எம்மை ஆசுவாசப்படுத்தி ஆக வேண்டியதைக் கவனிக்க வைத்தார்கள். பொருட்செலவு, ஆளுதவி, மனத் தைரியம் எல்லாருமே நீங்கள் எங்களுக்குத் தந்ததுதான். இதில் எப்படி எவருக்கு நன்றி சொல்வதெனத் திண்டாடுகின்றேன்.

நவலோக மருத்துவமனையில் எம்மோடு கூடச் சூழ்ந்து நின்று உதவியோர், ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலி ஏற்பாடுகளைக் கவனித்தோர், அண்ணர் 'திரு'வின் பூதவுடலை புங்குடுதீவிற்கு விமான மூலம் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தந்தோர், அஞ்சலி வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தோர், புங்குடுதீவில் இறுதிக் கிரியைகளை நிறைவாக நடாத்தி வைத்தோர், தற்போது அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளை கொழும்பிலும் புங்குடுதீவிலும் ஏற்பாடு செய்து உதவுவோர், நினைவு மலருக்கு ஆக்கமும், அச்சிடும் உதவியும் நல்கியோர் என்று நன்றி கூறவேண்டிய பட்டியல் நீள்கின்றது.

எனது குடும்ப அங்கத்தவர்களோடு சேர்ந்து எமது துயரைத் தமது துயராகக் கொண்டு உடனிருந்து உதவிய தம்பிகள் தேவதாஸ், சிறி வைகுந்தவாசன், நண்பர்கள் சி. முருகானந்தவேல், த. குழந்தைவேல், கொழும்பு - புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழகப் பிரமுகர்கள், குறிப்பாக, வி. ரி. தமிழ்மாறன், ச. இராமலிங்கம், த. துரைசிங்கம், சி. சிவராசா, விசேடமாக மொறட்டுவ சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்னா மற்றும், அவரது குடும்பத்தினர், இயக்க முக்கியஸ்தர்கள், பத்திரிகைத்துறையினர், பாராளுமன்ற உறுப்பினர்கள் வி. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, எஸ். சிவமகாராசா, ஈ.பி.டி.பி. இயக்க நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் எனது சார்பிலும், அண்ணனின் தாயார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரி ஆகியோர் சார்பிலும் வட இலங்கை சர்வோதய இயக்குனர் பி. ஜமுனா தேவி மற்றும் ஊழியர்கள் சார்பிலும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நினைவுமலரைத் தொகுப்பதிலும் அச்சுவேலையை மேற்பார்வை செய்வதிலும் பொறுப்பாகச் செயற்பட்டுதவிய திரு. த. துரைசிங்கம் (ஓய்வுபெற்ற பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்) அவர்களுக்கும் எமது பிரத்தியேக நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

'திரு' அண்ணன் காட்டிய வழியில் அவர் சேவையினைத் தொடர்வதே அவரது ஆத்மசாந்திக்கான எமது பிரார்த்தனையாக இருக்கட்டும்!

அன்புடன்
ஆற்றாது அழுது நிற்கும்
தம்பி
**சி. மு. நாகரத்தினம்**

266, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு - 15.
தொலைபேசி: 526423



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதுயுகம் எழுகுது

புதுயுகம் எழுகுது முழுமதம் வருகுது
பூரணரே விழித்தெழுக, இளம் பூரணரே விழித்தெழுக!
இனிவருங் காலம் எங்களின் தோழன்
எதற்குமே நாம் இனி அஞ்சோம் - புது
யுகத்தையே சமைக்கவே வந்தோம்!

புதுயுகம் எழுகுது.....

பழமையும் அறிந் புதியவர் நாங்கள்
சத்தியமே எங்கள் பாதை - அதன்
விஸ்த்தரிப்பே எங்கள் வாழ்க்கை
சுயநலமொழி இனமத வெறி - யாவும்
சூழ்ந்தனவே இருளாக எம் சோதனைக்கே எதிராக
அவை விரைவாக அழிபடும் வரையும்
அகல் விளக்கேற்றுவோம் நாங்கள் - புது
ஒளித்திசை காட்டுவோம் நாங்கள்!

புதுயுகம் எழுகுது.....

இனி ஒருபோதும் தனிவெறி எதிலும்
இருப்பதற்கே இடமில்லை - அதன்
கருக்களை அறுவைகள் புரிவோம்
எதற்குமே அடியாய் இருக்கிற சக்தியின்
எழுச்சியின் காலமிதன்றோ - அதன்
வளர்ச்சிக்கு எம்முயிர் தருவோம்
வளர்ச்சிக்கு எம்முயிர் தருவோம்!

புதுயுகம் எழுகுது.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வோதய கீதம்

சர்வோதயம் சர்வோதயம் சர்வோதயம்
சகலத்திற்கும் சுயமெதென்று கேட்கும் தத்துவம்
சத்தியமே அச்சுயமென் றேத்தும் தத்துவம்
அகிலமாதா குடிபுகுந்து வாழும் இராச்சியம்
அனைத்தினிற்கும் விடிவளிக்க வாய்த்த சேஸ்திரம்
- சர்வோதயம்

கிழக்கெழுந்த ஞாயிறென்ன கிளரும் கொள்கைகள்
கேண்மை, வீரம், ஞானம், அன்பு வளரும் எல்லைகள்
மொழி மதங்கள் இனப்பகைகள் யாவும் மேவியோர்
முழுமதத்தைத் தழுவி நிற்கும் அகிலதத்துவம்
- சர்வோதயம்

கிராமம் நகர் மாநிலங்கள் யாவும் தங்களின்
கீர்த்தி மிக்க சுயவெழுச்சி பெறவும் பெற்றவை
தேசியத்தில் ஒன்றிச் சர்வதேச மாயெழு
சீர்த்தி மிக்க ஆட்சிமுறை காட்டும் அரசியல்
- சர்வோதயம்

அறிவிய லோடாத்ம ஞானம் சங்கமிக்கவும்
அகம், புறங்கள் தரம் தொழில்கள் ஒன்றி நிற்கவும்
துறையனைத்தின் பிரிவிணைந்து வாழும் பேர் நெறி
தொடர்ந்து வரும் படிமுறையில் வளரும் நன்நெறி
- சர்வோதயம்

கைத்தொழில்கள் நுட்ப வேலை வர்த்தகம் கமம்
கணிதங் கலை சாஸ்திரங்கள் பொருளியற்றுறை
அத்தனையும் புதுமை நோக்கில் வகுத்தினிற்றொழில்
ஆலையெல்லாம் ஆலயங்கள் ஆக்கும் ஆய்வகம்
- சர்வோதயம்

தனியுடமை தனிநலன்கள் தேய்ந்து வீழவும்
சர்வகொடுங் கோன்முறைகள் மாய்ந்து போகவும்
பெருமனித நிலையை நோக்கி விரியும் ஓர் தளம்
பிரபஞ்ச முத்தி தழுவியதோர் சிந்தனைக்களம்
- சர்வோதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்களம் ஜெய மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

ஆதியந்த மில்லா அப்பனுக்கு மங்களம்
சோதிவடி வாயுள்ள சுவாமிக்கு மங்களம்

ஆன்மா நித்தியமென்ற ஆன்றோர்க்கு மங்களம்
தேன்போ லுருசிக்குஞ் சிவனார்க்கு மங்களம்

காண்பதெல்லாங் கடவுளாய்க் காண்பார்க்கு மங்களம்
நாண்மல ரெடுத்துப்பூசை பண்ணுவோர்க்கு மங்களம்

பொறிவழிபோ யலையாத புண்ணியர்க்கு மங்களம்
நெறிவழியே செல்லுகின்ற நிருபருக்கு மங்களம்

நாமறியோ மென்று சொல்லும் நாதனுக்கு மங்களம்
உண்மை முழுதுமென்ற வுத்தமர்க்கு மங்களம்

தன்னைத் தன்னாலறிந்த தாபகர்க்கு மங்களம்
அன்னை பிதாக் குருவான அப்பனுக்கு மங்களம்

மண்ணைப் பெண்ணை மதியாத மாதவர்க்கு மங்களம்
வண்ணை நகர் வாழும் வைத் தீசனுக்கு மங்களம்

திண்ணனென்ற பேர்கொண்ட அப்பனுக்கு மங்களம்
சண்முக நாதனுக்குஞ் சங்கரற்கும் மங்களம்

விண்ணில் விளங்குஞ் சூரிய சந்திரர்க்கும் மங்களம்
எண்ணிலடங் காவுயிர்கள் அத்தனைக்கும் மங்களம்

நித்திய கர்மந் தவறாத நின்மலர்க்கு மங்களம்
பத்துப்பாட்டும் படிப்போர்க்குங் கேட்போர்க்கும் மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகினில் ஒழுக்கம் என்னும்
உயர்பெருந் தொண்டை நட்டு
நலம்மிகு சிறப்பின் மிக்க
நான்மறை விளங்கும் நம்மூர்
குலமுதல் சீலம் என்றும்
குறைவு இலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி
நிகழ் திரு நின்ற ஊர் ஆம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org